# அகமியக் கண்ணாடி - Inner Mirror

## اِرَاءَةُالدَّقَائِقِ فِىْ شَرْحِ مِرْاءَةُ الْحَقَائِقِ

*அரபி மூலம்:* ஷெய்கு அலி இப்னு அஹ்மதுல் மஹாயிமீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள். - *In Arabic:*-Shaikh Ali Ibn Ahmadul Mahaiemee Radiallahu anhu.

*தமிழில்:* அல்லாமா அஷ்ஷெய்கு அல் ஹாஜ் ஷெய்கு அப்துல் காதிர் ஸூபி ஹஜ்ரத் காஹிரி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள். - *In Tamil:-* Allama, Al-Haj, As-Shaikh Shaikh Abdul Quadir Sufi Kahiri Radiallahu

### பதிப்புரை

எல்லாம் வல்ல அல்லாஹுத் தஆலாவுக்கே சர்வ புகழும். ஸலவாத்தும் சலாமு; ஈருலக இரட்சகர் நபிகள் நாயகம் அவர்களுக்கும், அன்னாரின் கிளைஞர்கள், தோழர்கள், நல்லடியார்கள் அனைவர்களின் மீதும் உண்டாவதாக!

மெஞ்ஞானத்தில் தலை சிறந்த மகான் அல் ஆலிமுற்றப்பானி, அல் ஆரிபுஸ் ஸமதானி, ஷம்ஷுல் ஹக் வல் ஹகீகத்தி வத்தீன், **முஹம்மதுப்னுஸ்ஸிரீன் இப்னு ஷெய்குல் இமாம் இஸ்ஸுத்தீன் மஃரிபி** ரலியல்லாஹு அன்ஹு அவர்களால் பார்ஸி பாஷையில் கோர்வை செய்யப்பட்ட '**ஜாமே ஜஹானே நுமா**' –'**உலகைக் காட்டும் மதுக் கிண்ணம்**' என்ற நூலை பார்ஸி பாஷை தெரியாத உலக மக்களும் பயன்பெற வேண்டுமென மற்றுமொரு மகானால் அரபி பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டு '**மிர்ஆத்துல் ஹகாயிக்கு**' என்று பெயர் பெற்று பிரபல்யமாக விளங்கி வந்த இந்த அரபி நூலுக்கு விரிவுரை மகான் அல் ஆரிபுற்றப்பானி, அல்ஹைகலுஸ் ஸமதானி, அலாவுல் ஹக்கி வத்தீன், **அஷ்ஷெய்கு அலி இப்னு அஹ்மதுல் மஹாயிமீ** ரலியல்லாஹு அன்ஹு அவர்களால் அரபியில் எழுதப்பட்டு, **இறஅத்துத் தகாயிகி பீ ஷரஹி மிர்ஆத்தில் ஹகாயிகி** –'**அகமியக் கண்ணாடியின் விரிவுரையில் அதிநுட்பங்களை காட்டுவது**' என்று பெயர் பெற்று மெஞ்ஞானவான்களின் மத்தியில் மதிக்கப்பட்டு, பிரபல்யமாக போதிக்கப்பட்டு வந்த அந்த நூலை, தமிழுலக மக்களுக்கும் பிரயோஜனமாக அமைந்திட வேண்டுமென்று பெரும் சிரமம் மேற்கொண்டு மூலத்தையும் அதன் விரிவுரையையும் சேர்த்து அழகு தமிழில் கருத்துக்கள் சிதையாமல் அப்படியே ஒரு எழுத்தும் கூட விடுபடாமல் அழகியமுறையில் மூலத்தை **பெரிய (BOLD LETTER) எழுத்துக்களிலும்** அதன் விரிவுரையை சிறிய எழுத்துக்களிலும் மொழி பெயர்த்து '**அகமியக் கண்ணாடி**' என்று பெயர் சூட்டித் தந்த எங்கள் குருநாதர் மெஞ்ஞான பெட்டகம், அறிவுக் கருவூலம், அஷ்ஷெய்குல் காமில் அல்ஆரிபு பில்லாஹ், அல்முஹிபிற்றஸூல் **ஷெய்கு அப்துல் காதிர் ஸூபி ஹழ்ரத்** கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ் அவர்களுக்கு அளவில்லா நன்றியை செலுத்துகிறோம்.

அன்னாருகட்கு மென்மேலும் கீர்த்தியை இம்மையிலும், மறுமையிலும் உயர்த்திக் கொண்டே இருப்பானாக. ஆமீன்.

எங்கள் ஷெய்கு நாயகம் அவர்களது திவ்விய ஜீவிய காலத்திலேயே அச்சிட்டு வெளிக்கொணர பலமுறை முயற்சிகள் செய்தும் முடியாமல் போய்விட்டது.

இறையருளால் அம்முயற்சி இதோ நிறைவடைந்து உங்கள் திருக்கரங்களில் தவழ்கின்றது. அல்ஹம்துலில்லாஹ். இதை வெளியிட அனுமதி வழங்கிய தாய் சபையான காயல்பட்டணம் ஹிஸ்புல்லாஹ் சபையினர்களுக்கும், துணை நின்ற கலீபாக்கள், அன்பர்கள் அனைவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றி உரித்தாகுக!

மெஞ்ஞான பாட்டையை நாடி நடப்பவர்களுக்கு ஈருலகிலும் பிரயோஜனமானதாக இந்நூல் அமைவதே எங்கள் குறிக்கோள். அக்குறிக்கோள் நிறைவடைய நீங்களும் துஆ செய்வீர்களாக! நம் nஷய்கு நாயகத்தின் பொருட்டால் அல்லாஹுத்தஆலா அதை அங்கீகரிப்பானாக! ஆமீன்.

**1-3-1414** **இவண்,**

**19-8-1993** **ஹிஸ்புல்லாஹ் ஸபை,**

ஸூபி மன்ஜில்,

ஜெய்லானி தெரு, தூத்துக்குடி.

**அகமியக் கண்ணாடியின் விரிவுரையில் அதிநுட்பத்தைக் காட்டுவது.**

**அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் நாமத்தைக் கொண்டு (ஆரம்பிக்கிறேன்)**

**எல்லையில்லா 'ஹம்து' அடங்கலும்** 'ஹம்து' என்பதாகிறது, அறிவை உடையவனின் 'தாத்து', செயல், இலட்சணங்களின் சம்பூரணத்துவத்தை எடுத்துக் கூறுவதாகும்.

அது எல்லை இல்லாதது என்பதாகிறது:- ஹக்கு தஆலாவி;ன் சம்பூரணத்துவங்கள் ஒரு எல்லையில் முடிவடைவதற்கு எல்லையே இல்லாதிருப்பதினாலேயாம்.

**எண்ணிக்கையில்லா 'ஷுக்று' அனைத்தும்** ஷுக்று என்பதாவது:- உபகாரம் செய்தவனுக்கு மரியாதை செய்வதை-அவனை கண்ணியப்படுத்துவதைப் பற்றி அறிவிக்கக் கூடிய செயலாகும். அது நாவினால்(அவனை) துதிப்பதினாலானாலும் சரி அல்லது மனதில் (அவனைப் பற்றி) நம்பிக்கை வைப்பதனாலானாலும் சரி,அல்லது உறுப்புக்களைக் கொண்டு (அவனுக்கு) பணிவிடை செய்வதானாலும் சரி,

உதாரணமாக:- அல்லாஹ் தஆலா  உபகாரமாக தந்தவைகளை (அவன்) அவைகளை என்ன நோக்கத்திற்காக படைத்தானோ அதில் அவற்றை உபயோகப்படுத்துவதாகும்.

அவை எண்ணிக்கை இல்லாத்தவைகளாக ஆனதாகிறது:- அவனுடைய நிஃமத்துக்கள் ஒரு சிலரில் ஓர் எல்லைக்குள்ளானது என்று வைத்துக் கொண்டாலும் அதையும் கூட உதயமாகிப் பார்த்து சூழ்ந்து எண்ணி முடிக்க முடியாததினாலேயேயாம்.

**ஒரு 'தாத்து'க்கே சொந்தமானதாகும். அதன் வஹ்தத்தாகிறது** அதுவாகிறது:- (தாத்தின்) வஹ்தத்து, வஹ்தானிய்யத்து என்ற லட்சணமாகிறது தாத்துக்கு அஸ்மா சிபத்துக்கள் பல இருந்தாலும் சரி, தாத்து எண்ணைக் கொண்டோ, பாகங்களைக் கொண்டோ பலதாகாதிருப்பதாகும்.

அதன் அஹதிய்யத்திற்கும்:- தனித்தவனாக இருப்பதற்கும், அதாவது:- அஸ்மா சிபாத்துக்கள் தாத்துக்கு வேறானதாக இல்லாதிருப்பதைக் கவனித்து அஸ்மா சிபத்துக்களையல்லாமல் தாத்தை மட்டும் கவனிக்கிற (லட்சணத்திற்கு) ஏன்? இது (ஒரு கருமம்) தரிபட்டிருப்பதின் பேரில் அறிவிக்க கூடிய 'சிபத்து முஷப்பஹா' வைப்போல்- பெயர்ச் சொல்லுக்கு ஒப்பான லட்சணம் போல் இருக்கிறது ஏன்? தனித்தவன் என்பதில் எண்களை பாகங்களை விட்டும் தனித்திருப்பது என்ற லட்சணம் அதனோடு அப்படியே இருக்கத்தானே செய்கிறது.

(உவமையில்:- 'ஹஸன்'-அழகானவன் என்ற பெயர்ச் சொல்லுக்கொப்பான இலட்சணமாகிறது, அதைக் கொண்டு லட்சணம் பூண்டவனில் அழகு எப்பொழுதும் தரிபாடாக இருக்கிறதை அறிவிப்பது போல்.)

**அதன் வாஹிதிய்யத்திற்கும் உற்பத்தியிடமாகும்- தாத்தின் வாஹிதிய்யத்தாகிறது-** அஸ்மா சிபாத்துகள் தாத்து தானானதாக இல்லாதிருப்பதைக் கவனித்து தாத்தை அஸ்மா சிபத்துகளுக்கு உற்பத்தி இடமாக இருக்கிற விதத்தில் கவனிப்பதாகும். ஏன்? அவை புதிதாக உண்டாவதின் பேரில் அறிவிக்கக் கூடிய 'இஸ்மு பாயிலை'-வினைப் பெயர்ச் சொல்லைப் போலிருக்கிறது. ஏன்? இந்த கவனிப்பாகிறது, அது உண்டானதெல்லாம் தாத்து புதிதான சிருஷ்டிகள் அளவில் தொடர்பு வைத்ததினாலேயாகும்.

ஆகையினால் இது அதற்குப் பின்னாலர் உண்டானதைப் போன்றிருக்கிறது. வஹ்தத்து இவை இரண்டிற்கும் உற்பத்தியிடமாக ஆனதாகிறது, இவை இரண்டும் அதற்கு கிளைகளைப் போன்றிருப்பதனாலேயாம்;.

அஹதிய்யத்து கிளையென்பது பகிரங்கமாக தெரிந்ததாகும்.

வாஹிதிய்யத்து கிளையென்பதாகிறது:- அதனுடைய அஸ்மாக்கள் தாத்துக்கு வேறானதாக இல்லாதிருப்பதனாலேயேயாம்.

இதனாலேயே அவைகளின் புகழ்களெல்லாம் இதனளவிலேயே (தாத்தளவிலேயே) மீளுகின்றன.

அதன் அஜலிய்யத்திற்கும்-தாத்தின் அஜலிய்யத்து என்பதாகிறது:- அது இன்மையைக் கொண்டு முந்தப்பட்டதாக ஆகாதிருப்பதாகும்.

அதாவது:- தாத்து முன்பொரு போதாவது இல்லாதிருந்ததாக ஆகாதிருப்பதாகும்.

**அதன் அபதிய்யத்திற்கும்:-** தாத்தின் அபதிய்யத்தாகிறது, அது இன்மையைக் கொண்டு தறியுண்டு போகாதிருப்பதாகும். பின்னொரு காலத்திலும் இல்லாத்ததாய்ப் போகாதிருப்பதாகும்.

**கண்ணாடியாகும்:-** கண்ணாடியில் உருவம் வெளியாவது போல் தாத்தில் இவை இரண்டும் வெளியாகியிருக்கிறது.

ஆகவே, இரண்டும் அதில் ஒன்று சேர்ந்தது ஏன்? அதில் காலம் நடக்காதிருந்தினால்-அங்கு காலம் இல்லையே அவை இரண்டையும் கொண்டு புகழ் கொழுகியதாகிறது:- அவை இரண்டும் உஜூதின்-தாத்தின் சக்தியின் பேரிலும் அதன் சம்பூரணத்தின் பேரிலும் அறிவிக்கிறதினாலேயேயாம்.

**அதன் ளாஹிரிய்யத்திற்கும், அதன் பாதினிய்யத்திற்கும் றாபிதாவாகும்** -இணைப்பாகும்.

தாத்தின் ளாஹிரிய்யத்தாகிறது:- சிருஷ்டிகளின் அஃயான்களில் அஸ்மா ஸிபபாத்துகளின் ஒளி பிரகாசிப்பதுவாகும்.

தாத்தின் பாதினிய்யத்தாகிறது:-

அது அவைகளில் விடுதிவிடுவதை விட்டும் பரிசுத்தமாக இருப்பதை கவனித்து அது அவைகளை விட்டும் திரை போட்டுக் கொண்டிருப்பதும் அது அவைகளில் தனது சம்பூரணத்துவங் கொண்டு வெளியாவதுமாகும்.

அவைகளிரண்டும் ஒன்றுக்கொன்று நேர்முரணானவைகளாக ஆனதினால் அவை ஒரு 'வாஸிதா' வை-இடையில் இணைப்பைக் கொண்டேயல்லாது சேகரமாகவில்லை.

அதுவாகிறது:- அது பிரகாசித்துக் கொண்டிருப்பதைக் கவனித்து வெளியானதாகவும், அது பரிசுத்தமாக இருப்பதைக் கவனித்து உள்ளானதாகவுமாகிய 'வஹ்தத்துல் உஜூதுவாகும்-உஜூது ஒன்றாகயிருப்பதுவாகும்.

அவை இரண்டும் புகழுக்கு பாத்திபமானதாக ஆகிவிட்டது ஏன்? அவையிரண்டும் அஃயானுக்கு உஜூதை-உள்ளமையை கொடுத்ததிற்காக. ஏன்? அவைகளுடைய உஜூதாகிறது:- ஹக்குத்தஆலாவின் உஜூதுக்கு நிழல்தானே!

நிழலுக்கு உஜூதோ, நிழல் உண்டாவதோ சூரியன் அது மறைந்திருந்து கொண்டு பிரகாசிப்பதினாலேயே அல்லாது இல்லை.

வஹ்தத்தாகிறது-தாத்து ஒன்றாயிருப்பதானது:-றாபிதாவாக இணைப்பாக ஆனபோது அந்த வஸ்துக்களின் புகழ் அனைத்தும் அதுவே சேகரமாக்கிக் கொண்டதாகிவிட்டது.

**அதன் அவ்வலியத்திற்கும் அதன் ஆகிரிய்யத்திற்கும் வாஸிதாவாகும்**. தாத்தின் அவ்வலியத்தாகிறது-சகல வஸ்துக்களுடைய உஜூதுக்கும் அது ஆரம்பமாக இருப்பதுவேயாகும்.

தாத்தின் ஆகிரிய்யத்தாகிறது:- அது சகல வஸ்துக்களுடைய தரிபாட்டிற்கும் மீளும் தானமாக இருப்பதுவேயாகும்.

தாத்தின் வஹ்தத்திற்கும் அது தன்னில் அவ்வலியத்திற்கும், ஆகிரிய்யத்திற்கும் இல்லாததினால் அது அவை இரண்டிற்குமிடையில் வாஸிதாவாக-நடு மத்தியாக ஆனது ஏன்? இரண்டு தரப்புகளில் ஒன்றினுள்ளும் புகுதாத மூன்றாவதாகிறது அந்த இரண்டிற்கும் வாஸிதா-நடு மத்தியாகத்தானேயாகும்.

ஆரம்பம் எதனால் உண்டாகிறதோ அதற்கும் நிலைப்பாடு எதைக் கொண்டு உண்டாகிறதோ அதற்குமிடையில் இது நடுமத்தியாக ஆனபோது சகல வஸ்துக்களின் புகழ் அனைத்தும் அவை புதிதாக உண்டாகிறது, அவை நிலைத்திருக்கிறது என்றதை கவனிப்பது கொண்டு இதனளவிலேயே மீளுகிறது.

அஹதிய்யத்திற்கும், வாஹிதிய்யத்திற்கும், அஜலிய்யத்திற்கும், அபதிய்யத்திற்கும், ளாஹிரிய்யத்திற்கும், பாதினிய்யத்திற்கும், இன்னும் அவ்வலிய்யத்திற்கும், ஆகிரிய்யத்திற்கும் இடையில் **ஹத்துல் பாஸிலு-பிரிக்கக் கூடிய எல்லை என்பது அதனளவில் சயிக்கினையாகும்.**

ஏனெனன்றால் அவைகளில் நின்றும் ஒவ்வொன்றுக்கும் அவை மற்றவைகளை விட்டும் அலாதியாகப் பிரிந்து 'தாத்தின் வஹ்தத்து' அளவிலும் சயிக்கினை செய்யும்படியான 'வஹ்தத்து' இருக்கிறதே. இதுவும் 'தாத்தின் கமாலாத்து'களில்-சம்பூரணத்துவங்களில் நின்றுமுள்ளதுவாகும்.

எனவே 'தாத்துடைய வஹ்தத்தளவில்' சயிக்கினை செய்யும்படியான அவைகளிலுள்ள 'வஹ்தத்து'களைக் கவனிக்கிறது கொண்டு அவைகளுடைய புகழெல்லாம் அதளவிலேயே மீளுகிறது.

அவைகள் (அவைகளுக்கிடையில்) அலாதியாக வெள;வேறாகப் பிரிந்ததோடு ஒன்றுக்கொன்று நேர் முரணான அவைகளுக்கிடையில் **'பற்ஸகுல் ஜாமிவு' சேர்த்துக் கொள்ளும் மத்தி என்று அதற்கே சொல்லப்படும்**. ஏன்? 'வஹ்தத்து தாத்திய்யா'வாகிறது- தாத்து ஒன்றாக இருப்பதாகிறது: அதுதான் (அவைகளுக்கிடையில்) பிரித்து அலாதியாக்கிய அவைகளிலுள்ள 'வஹ்தத்து'களில் வெளியானதாகும்.

ஆகவே அவைகளையெல்லாம் அது சேகரித்துக் கொண்டிருப்பதைக் கவனித்து அவை ஒவ்வொன்றையும் மற்றவைகளை விட்டும் பிரிந்திருக்கிறதைக் கவனித்தும் அதுவே அவைகளின் சகல புகழுக்கும் அருகதையானதாக இருக்கிறது.

அதுதான் 'ஹகீகத்துல் இன்ஸானிய்யா' வாகும். அவர்களுக்கு (ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு) அஸ்மாக்கள் அடங்கலையும் படித்துக் கொடுக்கப்பட்டது. அது உஜூபு-இருப்பு அவசியத்துடைய சமூகமாகும்.

இன்னும் வானங்களையும், நட்சத்திரங்களையும் அவைகளின் அசைவினால் சிருஷ்டிகளை உண்டாக்குவதற்காகவும் அவைகளில் நின்றும் கெட்டுப்போனவற்றை இல்லாமலாக்குவதற்காகவும் வேண்டி, படைக்கப்பட்ட பூமியில் அவர்களை 'கலீபா'வாக ஆட்சி அதிகாரம் செய்யக் கூடிய பிரதிநிதியாக (தலைவராக) ஆக்கப்பட்டது.

சம்பூரணமாக ஆட்சி செய்பவரில், தான் எவைகளில் ஆட்சி செய்கிறாரோ அவைகளின் 'ஹகீகத்து' அடங்கலும் சேகரமாக இருப்பது அவசியமாகும்.

ஆகவே அவர்கள் 'உஜூபு' இருப்பு அவசியமான சிருஷ்டிகர்த்தாவின் சமூகத்திற்கிடையிலும், 'இம்கானு'-இருப்பும், இல்லாமையும் அவசியமற்ற சிருஷ்டியின் சமூகத்திற்கி;டயிலும் சேகரமாக்கினதாகும். 'ஹகீகத்துல் முஹம்மதிய்யா' வாகிறது அதைவிட உயர்வானதாகும். அதுவோ முந்தின குறிப்பில் சேகரமாக்கிக் கொண்டதாகும்.

மேலும் அதில் இருக்கிற இந்த வஹ்தத்தையும் அது சேகரமாக்கிக் கொண்டதாகும்.

**இன்னும் முடிவில்லா தனாவாகிறது** 'தனா' என்பது ஒரு வஸ்துவின் இலட்சணத்தைப் பற்றி அழகாக எடுத்துரைப்பதாகும்.

இங்கு 'ஹம்தை' புகழைக் கூறப்படவில்லை.ஏனென்றால் ஹகீகத்து (ல் முஹம்மதிய்யா உ)டைய கமாலாத்துகளாகிறது-தத்துவங்களாகிறது அது உயர்த்தியான மகாமாத்துகளைக் கொண்டு சொந்தமானதாக இருப்பதினால் அதனளவிலேயே சயிக்கினை முந்தினதுவாகும் என்றும், இங்கு கூறப்பட்ட்தாகிறது. அந்த கமாலாத்துகளின் லட்சணங்களாகுமென்றும் அறிவிக்கிறதற்காக.

எல்லையில்லா துதி என்பது அதன் 'மள்ஹறு'களுக்கு முடிவில்லாத்ததினால் அதன் லட்சணங்களுக்கும் முடிவில்லாதிருப்பதினாலேயாகும்.

**ஒரு சமூகத்திற்கே சொந்தமானதாகும்.** அதாவது: சபையில் உட்கார்ந்திருப்பவர் (ஒவ்வொருவரும் குறிப்பிட்ட ஆசனத்தில்) உட்கார்ந்திருப்பது போல் மற்ற சமூகத்தில்-மற்தபாவில் இல்லாமல் அதிலேயே அமரக் கூடிய சமூகமாகும்.

அதனுடைய முதலாவது குறிப்பைக் கொண்டும் ஏதாவதொரு கருமத்தைக் கொண்டு கட்டுப்படுவதாகும். முதலாவது குறிப்பென்பது தாத்தையும், முதன்மையான அஸ்மாக்களையும் பொதுவாக அறிவதைக் கொண்டு கட்டுப்படுவதாகும்.

அவைகளை 'முதன்மையான அஸ்மாக்கள் என்று சொல்லுவதாகிறது:- அதை கவனிப்பது, மற்ற கவனிப்புகளை எல்லாத்தையும் விடவும் முந்தினதாக இருப்பதற்காக.

**இன்னும்** அஹதிய்யத்தில் **அதன் தாத்துடைய கமாலையும்,** வாஹிதிய்யத்தில் **அஸ்மாக்களுடைய கமாலையும் பொதுவாக உணர்வதை தன்னுள்ளடக்கி கொண்டதும், ஏன்?** அதன் வஹ்தத்தையும் வாஹிதிய்யத்தையும் பன்மையாக்குவதற்கு இந்த மர்தபாவில் அலாதியாக கவனிப்பது இல்லாததற்காகவேயாகும்.

அது முதன்மையான அஸ்மாக்களை உணர்வதை தன்னுள்ளடக்கிக் கொண்டதெல்லாம் ஏன்? அவன் (அல்லாஹுதஆலா) தன் தாத்தை பெற்றுக் கொண்டான். அதை அறிந்தான். அவனின் ஒளி இலங்கியது. அதைக் காட்சி கண்டானே.

**இன்னும் உஜூது, இல்மு, நூறு, ஷுஹுதுடைய கவனிப்பைப் பொதிந்த அதன் முதலாவது தஜல்லியைக் கொண்டும்,** தஜல்லி என்பது:- ஒரு வஸ்து மற்றொரு வஸ்துவுக்கு வெளியாவதாகும்.

முதலாவது தஜல்லி என்பது நூலாசிரியர் சொன்னதுபோல் தாத்தும், முதன்மையான அஸ்மாக்களும் பொதுவாக வெளியாவதாகும்.

இன்னும் விபரமாகிறது:- பொதுவான அறிவுக்கு இருவித கமாலாக இருப்பதினால் விபரமாக அந்த அஸ்மாக்களைக் கொண்டு கட்டுப்படுவது கொண்டு **இரண்டாவது குறிப்பையும், இன்னும்** அவை அதில் விபரமாக வெளியாவது கொண்டு நூலாசிரியர் சொன்னதுபோல் **அதன் தாத்துடைய கமாலையும், அதன் அஸ்மாக்களுடைய கமாலையும்,** அவை இரண்டில் நின்றும் ஒவ்வொன்றும் மற்றதை விட்டும் பூரணமான பிரிவாக பிரிவாகிற விதத்தில் விபரமாக **உணர்வதை தன்னுள்ளடக்கிக் கொண்ட இரண்டாவது தஜல்லியையும் தேடினது.**

**இன்னும் அதனுடைய இரண்டாவது தஜல்லியைக் கொண்டு** அதனுடைய அஸ்மாக்களை விபரமாக உணர்வதை தன்னுள்ளடக்கிய அதன் வாஹிதிய்த்தின் புறத்தினால்-அதன் தாத்துடைய கமாவை உணர்வதை தன்னுள்ளடக்கிய அஹதிய்யத்தி (ன் புறத்தி) னாலல்ல. ஏன்? அதுவாகிறது:- தாத்து அது அல்லாத்ததை விட்டும் தேவையற்றிருக்கிற புறமாகுமே.

நூலாசிரியர் சொன்னதுபோல், தாத்தைக் கொண்டோ அல்லது வேறொன்றைக் கொண்**டோ உஜூபு - அவசியம் அதற்கு சொந்த லட்சணமாக** இருக்கிற ஏன்;? அது அல்லாத்ததாகிறது- ஒன்றிருக்கில் அதோடு ஒரு லட்சணத்தையும் கவனிக்கப்படாத 'உஜூது; தன்னாக இருக்கும்.

அப்படியானால் லட்சணங்களில் நின்றுமுள்ளதவான உஜூபு என்பதை அத்துடன் கவனிக்கப்பட மாட்டாது. அல்லது உஜூதையும், அதமையும் - உண்மையையும், இன்மையையும் அவையளவில் சேர்த்துப் பார்ப்பது அவை தம்மை பொறுத்த மட்டில் சரிசமமாக இருக்கிற 'மாஹிய்யாத்து' சுயம்புகளாக இருக்கும்.

அப்படியானால் அவை தன்னைப் பொறுத்தவிதத்தில் அவைகளில் 'உஜூபு' எனும் லட்சணமில்லையே.

இன்னும் 'உஜூபு' எனும் லட்சணத்தை இந்த சமூகத்தில் கவனிக்கப்பட்டதெல்லாம் ஏன்? இலாஹிய்யத்தான (லட்சணமாகிய) மர்தபாவாகிறது:- உஜூது, அதம்-உண்மை, இன்மை ஆகிய இரு தரப்பில் ஒன்றை மூர்க்கமாக்குவதை தேடக் கூடியதானதாகவே இருப்பதற்காக.

மூர்க்கமாக்குவதோ ஈஜாபாகும் - அவசியமாக்குவதாகும். (அப்போது) அவசியமாக்கியது, அவசியத்தைக் கொண்டு மிகப் பாத்திபமானதாகும்.

இன்னும் மற்றொன்றைக் கொண்டும் உஜூபு தனக்கு சொந்த லட்சணமாக இருப்பதையும் கவனிக்கப்பட்டதெல்லாம் ஏன்? 'அஸ்மா சிபாத்து' களுடைய 'உஜூபாகிறது' – அவசியமாகிறது தாத்து (அதை) அவைகளுக்கு அவசியமாக்கினதினாலேயேயாகுமே.

**ளாஹிருல் உஜூதையும் - வெளி உஜூதையும்** அதாவது:- அஸ்மா சிபாத்துகளைக் கொண்டு துவக்கமாகவும், அதன் மள்ஹருகளைக் கொண்டு இரண்டாவதாகவும் விபரமாக்கப்பட்டதையும்,

நூலாசிரியர் ளாஹிரை-வெளியான உஜூதை கவனித்ததெல்லாம் விபரத்துடைய மகாமாகிறது புதூனை-மறைவை மறுக்குமே.

இதனாலேயே அதில் எல்லாவற்றின் விபரமும் சம்பூரணமாயிற்று.

**இன்னும் 'இம்கான்' அதற்கு அவசியமானதில் நின்றுமுள்ளதாக இருக்கிற** அதாவது:- வஸ்துக்களின் ஹகாயிகுகள் அவை தாத்துடைய மற்தபாவில் பொதுப்படையான 'ஷுஊன்' களாக இருந்ததின் பின்னால் அதில் விபரமான ளாஹிருல் இல்மையும் வெளி அறிவையும் பொதிந்ததான உலூஹிய்யத்தான சமூகம் அதன் பேரில் பொதிந்ததெல்லாம் ஏன்? அது தாத்திற்கும் சிருஷ்டிகளுக்குமிடையில் காரணம் என்பதைக் கொண்டு சம்பந்தம் கொண்டிருப்பதற்காக.

காரணத்தை அறிவது காரியத்தை அறிவதை அவசியமாக்கிக் கொள்ளுமே.

ஆகவே இலாஹிய்யத்தான சமூகத்தில் சகல வஸ்துக்களின் விபரங்களைப் பற்றிய அறிவுமிருப்பது அவசியமாகும்.

(இம்கான் அதன் அவசியத்திலுள்ளதானதாகிறது) ஏன்? அதில் விபரமானதாகிறது:- ஒன்றிருக்கில் மும்கினாத்துக்களின் - சிருஷ்டிகளின் ஹகாயிகுகளாக இருக்கும். அவைகளுக்கு 'இம்கான்' அவசியமென்பது பகிரங்கமானதாகும். மேலும் அவைகள் உஜூதை விட்டும் தனித்ததாக அலாதியானதாக தரிபடுவது இந்த (அறிவின்) சமூகத்திலேயேயல்லாதில்லையே. ஏன்? அவைகள் வெளியில் உஜூதை விட்டு;ம் தனிப்பதும், அதை விட்டும் அலாதியாவதும் விலக்காக-அசம்பாவிதமாக இருப்பதற்காக.

அல்லது இலாஹிய்யத்தான 'அஸ்மா சிபாத்து' களாக இருக்கும். இன்னும் அவைகளின் 'உஜூபு'வாகிறது -இருப்பு அவசியமாயிருப்பதாகிறது அவை, யாரைக் கொண்டு

நிலைத்திருக்கின்றனவோ அவனுடைய தாத்தைக் கொண்டானதாக ஆனபோது அவைகள் தம்மில் 'மும்கினாகவே' ஆகிவிட்டன.

மேலும் தாத்துங்கூட இந்த (இல்முடைய) சமூகத்தில் 'இம்கானுல் ஆம்மை'-பொதுவான இம்கானைக் கொண்டு 'மும்கினா'கவேயாகும். ஏன்? 'அதமை' இன்மையைவிட்டும் 'அவசியத்தை' உரிவது ரூபகரமாகுவதெல்லாம் இல்முடைய சமூகத்திலேயேயாகும் - மற்றதில்லை.

**இன்னும் உஜூபுக்கும் இம்கானுக்கும் இடையில் பற்ஸக்காகிய – மத்தித் தடுப்பாகிய 'ஹகீகத்துல் இன்ஸானிய்யா' வையும்,**

அதாவது:- ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களில் சேகரமாகிய இரகசியங்களை கொண்டு வெளியானதில் முதலாவதான மனித ஆன்மா எதில் நின்றுமுண்டானதோ அதன் பேரிலும் **பொதிந்ததாகிய,** உலூஹிய்யத்துடைய மர்தபா இதன்பேரில் பொதிநததெல்லாம் ஏன்? ஹக்குத் தஆலா அவனுடைய அஸ்மாக்களின் கவனத்தைக் கொண்டு சிருஷ்டிகளளவில் சம்பந்தம் கொண்டதெல்லாம் அவன் இல்மில் வெளியான சம்பூரணம் உலூஹிய்யத்தில் வெளியாவதற்கேயாகும்.

கவனிப்புகளில் நின்றும் ஒரு கவனிப்பைக் கொண்டும் அவன் எதை அறிந்தானோ அது அளவில் சிருஷ்டிகளின் அறிவை சேர்த்து பார்ப்பது கொண்டேயல்லாமல் அவன் இல்மில் வெளியாவது சம்பூரணமாகாது.

அதுவோ (அவனுடைய அறிவோடு சிருஷ்டியின் அறிவை சேர்ப்பதோ) பூரணமாகாது. ஓர் வஸ்துவை அதன் தாத்தில் நின்றும் அறியப்படுமே அதிலேயல்லாது ஏன்? பிறரில் நின்றும் அறியப்பட்டதானது அதுவெல்லாம் மிதாலே-பிரதி பிம்பமேயல்லாது எதார்த்தமில்லை.

ஆகையினால் அல்லாஹுத்தஆலாவின் அஸ்மா சிபாத்துகள் அவைகளின் ஹகாயிகுகளுடைய வீதப்படி கோணங்களில் வெளியாவதை அறிவதோடு அவைகளுக்கு நேர்பாடானதை சேகரித்த ஒரு ஹகீகத்து இருப்பது அவசியம்.

எனவே ஹகீகத்துகளை சூழ்ந்து கொள்வதும் அவசியமாயிற்று.

உலூஹிய்யத்துடைய மற்தபாவான குறிப்பாக குறிப்பானது(உஜூபுக்கும், இம்கானுக்குமிடையில் பற்ஸகாகிய) இந்த ஹகீகத்தாகிறது-அஹதிய்யத்திற்கும், வாஹிதிய்யத்திற்குமிடையில் 'பற்ஜக்'காக இருக்கிற 'ஹகீகத்துல் முஹம்மதிய்யா'விற்கு எதுகையிலிருக்கிறது. அது ஹகீகத்துல் முஹம்மதிய்யாவை விட்டும் பிந்தினதான ஆதமுடைய ஹகீகத்தாகும்.

அதனளவில்தான் அல்லாஹுத் தஆலாவின்

مَرَجَ الْبَحْرَيْنِ يَلْتَقِيَانِ بَيْنَهُمَا بَرْزَخٌ لَّا يَبْغِيَانِ

**மரஜல் பஹ்ரைனி யல்தகியானி பைனஹுமா பற்ஸகுன் லா யப்கியான்.** 'இரண்டு சமுத்திரங்களையும் ஒன்றோடொன்று சந்திக்க நெருக்கினான்-அவை இரண்டிற்குமிடையில் மத்தித்திரையிருக்கிறது. அவை இரண்டும் (ஒன்று மற்றவை) அடர்ந்தேறாது' என்ற வார்த்தையைக் கொண்டு சயிக்கினையாக இருக்கும்.

மனிதனில் உஜூபு, இம்கானு எனும் இரண்டு சமுத்திரத்தையும் அவன் சேர்த்து வைத்திருப்பதளவில் சயிக்கினை செய்கிறான். ஆனாலும் ஒன்று மற்றொன்றாக ஆவதை விட்டும் அவன் திரையை ஆக்கியிருக்கிறான். அகையினால் வாஜிபு மும்கினாகவோ, மும்கின் வாஜிபாகவோ ஆகாது.

**இன்னும் வளர்ந்தோங்கும்படியான ஸலவாத்தாகிறது சகல ஹகாயிக்குகளும், ஆன்மாக்களும், சடங்களும் எவர்களுடைய 'ஹகீகத்'துடையவும், ஆன்மாவுடையவும், சடத்துடையவும் விபரமாக இருக்கிறதோ அந்த நாயகத்தின் பேரிலும்,**

அல்லாஹுத் தஆலாவின் வழக்கம் 'பாயிலுக்கும்' மப்வூலுக்கும்'-செய்கிறவனுக்கும், செய்யப்படு பொளுக்குமிடையிலான 'தனாஸுபை' – சம்பந்தத்தைப் பேணுவதின் பேரிலானபோது, இன்னும் அல்லாஹுத்தஆலா பரிசுத்தத்தின் தீர்மானமான உயரத்திலும் சிருஷ்டிகள் கொழுகிப்பிடிக்க தீர்மானமான பள்ளத்திலுமுள்ளதாகவுமான போது, இரு தரப்பையும் சேகரமாக்கியதும், பரிசுத்தத் தரப்பிலிருந்து, அருளைப் பெற்று கொழுகிப்பிடிக்கிற புறத்தில் அருளை ஒலிக்கச் செய்யும்படியான ஒரு நடுமத்தியாளரை சிபாரிசு பிடிப்பதளவிலும், இன்னும் அவரளவில் சிபாரிசு தொடர்பு வைப்பதளவிலும், தேவையாயிற்று.

சிபாரிசு தொடர்புகளிலெ;லாம் மிக்க வருசையானதாகிறது:- அவருக்கும் அவருடைய போஷகனுக்குமிடையில் சேர்க்கும்படியான 'ஸலவாத்தாகவே'-அருளாகவேயாகும்.

அதை வளர்ந்தோங்கும்படியானதாக ஆக்கியதாகிறது:- அவர்கள் பேரில் அருள் நிறப்பமாவதற்காகவேயாம்.

அப்போது அவர்களோடு தொடர்பு கொண்டவர்களுக்கெல்லாம் அது அடையவளைந்ததாக ஆகும்.

இந்த 'ஸலவாத்' தை நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கொண்டே சொந்தமாக்கியதாகிறது:- அவர்கள் எல்லா நபிமார்களிலும், எல்லா ரசூல்மார்களிலும் சம்பூரணமானவர்களாக இருப்பதற்காகவேயாம்.

இதனாலேயே 'நான் ஆதமுடைய மக்களுக்கெல்லாம் நாயகமானவனாக இருக்கும். எனக்'குப் பெருமையில்லை' என்று (பெருமானார்) ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்.

அதாவது:- நான் அவர்களுக்கெல்லாம் நாயகமாகயிருப்பதைக் கொண்டு எனக்குப் பெருமையில்லை. என்கிலும் நான் போஷகனளவில் தொடர்பு கொண்டு இருப்பதைக் கொண்டேதான் எனக்குப் பெருமை.

ஏன்? நான் அவனல்லாதவைகளின் அளவில் திரும்பிப் பார்க்க மாட்டேன். அவர்கள் மரியாதைக்காகத்தான் தாங்கள் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கும் நாயகம் என்று துலாம்பரமாக சொல்லவில்லை.

எனினும் 'ஆதமும்,அவர்களல்லாதவர்களும் என்னுடைய கொடியின் கீழ் இருக்கிறார்கள்' என்று அவர்கள் சொன்ன ஹதீதில், அதன்பேரில், அதாவது:- ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கும் நாயகமானவர்களாக இருக்கும் என்பதின் பேரில் சயிக்கினை செய்திருக்கிறார்கள்.

அவர்கள் எல்லோருக்கும் நாயகமானவர்களாக ஆனதாகிறது, எல்லா 'ஹகாயிக்கு' களும், ஆன்மாக்களும், சடலங்களும் அவர்களுடைய 'ஹகீகத்திற்கும், அவர்களுடைய ஆன்மாவுக்கும், அவர்களுடைய சடலத்திற்கும் விபரமாக இருப்பதினாலேயேயாம்.

ஏன்? நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய ஹகீகத்தாகிறது:- 'அஹதிய்யத்'திற்கும், 'வாஹிதிய்யத்'திற்கும் இடையிலான 'பற்ஸகிய்யத்துல் குப்றா'- பெரிய நடுமத்தித் திரையாக ஆனபோது, அதன் எல்லைக்குள் புகுந்த ஹகாயிகுகளை எல்லாம் தன்னுள் சேகரமாக்கிக் கொண்டதாகவே ஆகிவிட்டது. அந்த ஹகீகத்தில் நின்றுமே அவர்களுடைய ஆன்மா ஒலித்து வந்து இருக்கிறபோது அது 'குல்லியாக-வியஷ்டியாகவும், மற்றெல்லா ஆன்மாக்களையும் சேகரமாக்கிக் கொண்டதாகவும் ஆகிவிட்டது.

அவர்களுடைய ஆன்மா குல்லியான ஆன்மாவாக ஆனபோது அது 'ஜிஸ்ம குல்லியில்-வியஷ்டியான சடலத்தில்' ஆட்சி செய்யக் கூடியதாகவும் ஆகிவிட்டது. அது சகல வஸ்துக்களுக்கும் வியஷ்டியாக இருப்பதினால் அது பெற்ற அருளை அவைகள் பேரில் அருளக் கூடியதாகவும் ஆகிவிட்டது.

**ஏன்? அவர்கள் அவைகளுக்கு 'இஜ்மாவுவாக- பொதுப்படையாக' இருக்கிறார்களே** பொதுப்படையானது:- சம்பூரணமாவது விபரத்தைக் கொண்டேதான். ஆகவே கூறப்பட்ட பொதுப்படையின் மற்தபாக்களாகிறது:- அதைக் கொண்டு – விபரத்தைக் கொண்டு சம்பூரணமானவர்களைப் போலாகிறார்கள்.

**இன்னும் அவர்களின் பிள்ளைகள் பேரிலும்,** அதாவது:- அவர்களுடைய சந்ததிகள், அவர்களின் உம்மத்திலுள்ள உலமாக்கள், 'உம்மத்' திலுள்ள அவ்லியாக்கள், மேலும் எல்லா ரசூல்மார்கள், நபிமார்கள், மலாயிகத்துகள் அலைஹிமிஸ்ஸலாம் அவர்களும்தான். **இன்னும் அவர்களின் மார்க்கம் எனும் 'அறுஷை' சுமந்தவர்களும், அவர்களின் ஷரீஅத்தின் அடிமூட்டினுடையவும், அதன் கிளைகளுடையவும் நகைஷ உருவத்தை எடுத்து இயம்பக் கூடியவர்களுமான அவர்களின் சகாக்கள் பேரிலும் உண்டாவதாக.** அதாவது:- சகல ஷரீஅத்துகளுடைய

கமாலாத்துகளையும் சூழந்து கொண்ட அவர்களின் ஷரீஅத்தை சுமந்தவர்கள். அவர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாகத்தை சுமந்த போதிலும் அவர்கள் எல்லோர்களுமாக ஷரீஅத் முழுவதையும் சுமந்தவர்களாக ஆவார்கள். அவர்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களளவில் முடுகுதலாவதில் அல்லாஹ்வின்; 'அர்ஷை' சுமந்த மலக்குகளைக் கொண்டு அவர்கள் ஒப்பாக்கப்படுகிறார்கள். இன்னும் அவர்கள் அந்த ஷரீஅத்தின் அடிமூடுகள், கிளைகளின் அடிச்சுவட்டை எடுத்தியம்பக் கூடியவர்கள்.அதாவது:-:- அந்த ஷரீஅத்தின் சில்லறை விஷயங்களையெல்லாம் புலனால் அறியப்பட்டதைப் போல் தெளிவாக துலாம்பரமாக ஆகிறதற்காக அதன் ' அடிமூடுகள் பனர்' களுக்கு பொதுவான சட்டமெனும் உருவங்களைக் கொண்டு உருவமிட்டு அவைகளை எடுத்தியம்பியவர்கள்.

**அல்லாஹ்வின் பொருத்தம் அவர்கள் அனைவர் பேரிலும் உண்டாவதாக! பின்னர், ஜாமஜஹான்னுமாய்**- உலகைக் காட்டும் மதுக் கிண்ணம் **என்று வழங்கப்பட்ட சிறிய பாரிஸ் நூலாகிறது, தௌஹீது டைய இல்மை தேடுகிறவர்களும்,** அதாவது- சகல பொருள்களும் எதனால் பொருளென தரிபடுகிறதோ, 'அந்த உஜூது' உண்மைப் பொருளாகிறது, அதனால் தரிபடுகிறவைகளும், சிருஷ்டிகளும் பலவாக இருந்த போதிலும் அந்த உஜூது ஒன்றே ஒன்றுதான் என்று சொல்லக் கூடிய ஞானத்தை தேடுகிறவர்களும், **'தஹ்கீக், தஜ்ரீக்' என்னும் பாதத்தில் நடக்க நேசிக்கிறர்வகளும்,** தஹ்கீக் என்பது சகல சிருஷ்டிகளும் ஹக்குதஆலாவின் அஸ்மாக்களுடைய 'சூரத்து' களாகும் என்ற விதத்தில் அவைகளில் அவனைக் கண்டு ஸ்திரப்படுத்துகிறது தஜ்ரீத் என்பது அகத்தை விட்டும்- மனதை விட்டும் 'ஹக்கு அல்லாதவைகளை அகற்றி விடுவதாகும். அதாவது மனதை விட்;;டும் சகல சிருஷ்டிகளையும் அகற்றிம விட்டு சர்வத்திலும் அவனைக் கண்டு ஸ்திரப்படுதல் எனும் பாதத்தின் பேரில் யோகநடை நடக்க நேசிக்கிறவர்களும், **அவர்கள் அந்தக் கலையின் மேதைகளான இமாம்களின் வாக்கியங்களை விளங்கிக் கொள்ள முடியாதவர்களில் நின்றுமுள்ளவர்களானதினால்** ஒருக்கால் அரபி பாஷை தெரியாததினால் விளங்க முடியாதவர்களாக அல்லது அந்த மேதைகள் அவர்களின் வாக்கியங்களில் பல முடிச்சுகளையும், நுணுக்கமான சயிக்கினைகளையும், கொண்டு வந்திருப்பதினால் விளங்க முடியாதவர்களானதினால் **அவர்களுக்கு அந்த இமாம்களின் நூல்களிலிருந்து பற்துல் யகீன் -மன ஒடுங்குதல் உண்டாகாதிருந்தது.**

கடைசி முடிவளவில் சேர்ந்து விட்டதினால் முடிவைத் தேடுகிறதை விட்டும் மனதின் உஷ்ணத்தைப் போக்கும்படியான மன உறுதி, தேட்டம் அதுவாகிறது:- மனம் ஒடுங்குதலை உண்டாக்கும். அது குளுமையாகும்.

**அவர்கள் எல்லோரும்** அதைக் கொண்டு **பிரயோசனம் அடைவதற்காக வேண்டி 'ஆலிமுற் றப்பானீ'** ஜனங்களை நடைபழக்கி பக்குவப்படுத்துவதில் ரப்பை-போஷகனை சேர்ந்தவர்கள். **'ஆரிபுஸ் ஸமதானீ'** அவர்கள் அல்லாஹ்வலிடமிருந்தே ஞானத்தை எடுத்துக் (பெற்றுக்) கொண்டிருப்பதினால் ஞானத்திற்காக யாரளவிலும் தேவையாகாமலும், எல்லோரும் ஞானத்திற்காக அவர்களளவில் தேவையானவர்களாகவும் இருப்பதினால் 'ஸமத்' –யாரளவிலும்

தேவையற்று எல்லாம் அவனளவில் தேவையாக்கப் பட்டவனாகவுமிருக்கிற நாயனை சேர்ந்தவர்கள்.

**முக்ததல் ஆரிபீன்** - அப்படியிருப்பதினால் குறிப்பாக ஆரிபீன்களால் -ஞானிகளால் தொடரப்பட்டவர்கள்.

'**இமாமல் முத அஹ்ஹிதீன்**' – அல்லாஹ்வின் வணக்கத்திலும், அவனுடைய ஆசையிலும் பராக்காகி இருக்கிறவர்களுக்கு முந்நிலையானவர்கள்.

**'ஷம்ஸூல் ஹக்கி ஹகீகதி வத்தீன் முஹம்மதுபுனுஷ் ஷீரீன் இப்னு அஷ் ஷைகு இமாம் இஸ்ஸூத்தீன் மஃரிபீ' அவர்கள் அதை பார்ஷி பாஷையில் உண்டாக்கினார்கள்.**

**அல்லாஹ் அவர்களுக்கு மஷ்ரிக் பக்கத்தில் நின்றும், மஃரிபு பக்கத்தில் நின்றும்** - அதாவது:- வெளிரங்கத்திலும், உள்ரங்கத்திலும், **அனுக்கிரகங்களை அதிகப்படுத்துவானாக.**

**இன்னும் அரபிப் பாஷையினாலான குர்ஆனைக் கொண்டு** அதாவது:- சகல இரகசியங்களையும் சேகரமாக்கிய அறிவருளான குர்ஆனைக் கொண்டு சொந்தமாக, அது அரபி பாஷையிலாக இருப்பதால் ஏனு;? அரபி பாஷையானது சகல பாஷைகளை விடவும் கருத்துக்களையும் இரகசியங்களையும் ரொம்பவும் சேகரமாக்கியதாகும்.

**சொந்தமாக்கப்பட்ட முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கொண்டு** – அதாவது அவர்களைத் தொடர்ந்து நடந்த பறக்கத்தைக் கொண்டும், அவர்களை முஹப்பத் வைத்ததைக் கொண்டும், ஏன்? அவர்கள்தானே அருள் வருகிறதற்கு குறிப்பாக அறிவு வருகிறதற்கு வாஸிதாவாக – வழியாக இருக்கிறார்கள். **அவர்கள், ஆன்மாவை மறைவான அழகொளியைக் கொண்டு** –மறைவான தாத்தில் நின்றும் அழகொளிப் பிரகாசத்தைக் கொண்டும் அதனால் நப்ஸின் இருள் போகிற (நீங்குவ)தற்காக **பிரகாசிக்கச் செய்வானாக.**

**அல்லாஹ் தஆலா அந்த நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பேரிலும் இன்னும் 'பற்தியத்'தான மகாமைக் கொண்டும், குத்பிய்யத்தான மகாமைக் கொண்டும் சொந்தமாக்கப்பட்ட அவர்களின் கிளைஞர்கள் பேரிலும் ஸலவாத்து (ஸலாம்) சொல்வானாக**!

'பற்து' என்பதற்கு பன்மை 'அப்றாது'. அப்றாதுகள் 'குத்பு' உடைய கண்காணிப்பை விட்டும் அப்பாற்பட்டவர்கள். அவர்கள் அந்தரங்கத்தில் அல்லாஹ்தஆலாவின் கலீபாக்கள், வெளிரங்கத்தில் கலீபாக்களாக இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி.

இந்த மற்தபா நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய தீர்மானமாக 'கமாலியத்'திலுள்ளதாகும். இந்த மற்தபா நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பேரில் முஹப்பத் வைப்பதனாலும், அவர்களை முற்றிலும் பின்பற்றி நடப்பதனாலும் அவர்களுடைய கிளைஞர்களுக்கு கிடைத்திருக்கிறது.

('குத்பு' என்பவர் ஒவ்வொரு காலத்திலும் உலகில் அல்லாஹ் தஆலாவின் பார்வை விழும் ஸ்தானமானவராக இருப்பார். அவர் இஸ்ராயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கல்பின் பேரில் இருப்பார்.)

**அ(ந்த நூலான)து தௌஹீதுடைய இல்மில் குல்லியாத்து'களையும், இன்னும் 'உஜூது'டைய மற்தபாக்களையும் சேகரித்துக் கொண்டதாகவுமான போது** –மெய்பொருளான உஜூது ஒன்றாகவே இருந்த போதிலும் அதன் வெளிப்பாட்டிற்கு பல மற்தபாக்கள் - படித்தரங்கள் உண்டு.

ஆரிபீன்கள் இடத்தில் அதில் குல்லிய்யத்தான – மொத்தமான மற்தபாக்கள் ஆறு. அவையாவன:-

1. அஹதிய்யத்து. 2. வாஹிதிய்யத்து 3. அர்வாஹுல் முஜர்ரதாத் -அதாவது ' உகூலுல் ஆலியா' – உயர்வான அக்லுகளும், மனித ஆன்மாக்களும். 4. ஆலமுல் மலகூத்து –அதாவது:- வானங்களின் நபுஸுகளும், மனிதர்களின் நபுஸுகளும். இது பல விதர்ப்பமான உருவங்களில் தோற்றமளிப்பதினால் இதற்கு 'ஆலமுல் மிதால்' என்றும் சொல்லப்படும். 5. ஆலமுல் முல்கு – அதாவது:- சடங்களான ஆதாரப் பொருளினுடையவும், ஆதேயப் பொருளினுடையவும் உலகம். 6. சகலத்தையும் சேகரமாக்கிக் கொண்ட வெளியாகும் தானமாகிய சம்பூரண மனிதனுடைய ஆலமாகும்.

அவர்கள் **அதில்** அந்த நூலில் **ஒவ்வொரு மற்தபாவுக்கும் ஒரு 'தாயிறா'வை –வட்டத்தை உண்டாக்கி-** முதல் குறிப்பிற்கு ஒரு தனி வட்டத்தையும், இரண்டாவதற்கு பல சிறிய வட்டங்களையும் பொதிந்த ஒரு வட்டத்தையும் உண்டாக்கியிருக்கிறார்கள். அதை சூழ்ந்;து கொண்டிருகு;கின்றன பல பொதுப்படையான வட்டங்கள்.

**புலனால் உணரப்பட்டவைகளான உருவம் என்னும் திறவு கோலைக் கொண்டு** ஏன்? புலனால் உணரப்படுபவைகள், ஏற்றிக் கொள்ளப்பட்டவைகளிலெல்லாம் மிகத் துலாம்பரமாக வெளியானதாகும். அதில் விசேடமானவர்களும், சாமான்யமானவர்களும் கூட்டாவார்கள்.

புத்தியால் அறியப்படக் கூடியவைகளை எற்றிக் கொள்வது விசேஷமானவர்களுக்கே சொந்தமானதாகும். அதை சாமான்யர்கள் எற்றிக் கொள்வதெல்லாம் புலனால் உணரப்பட்டதைக் கொண்டு ஒப்பாக்கி, அதன் உருவத்தைப் போல் உருவப்படுத்திக் காட்டினால் தான்.

**புத்தியால் அறியப்படக் கூடிய கருத்துக்கள் -அறிவுகளின் வாசல் திறபடியாவதற்காக வேண்டி அதில் அந்த மற்தபாவுடைய ஸூறத்துகளை வெளியாக்கி இருக்கிறார்கள்.**

**'சித்கு' 'ஸபா'** – உண்மை, தூய்மையை **உடையவர்களில் ஒரு கூட்டத்தார்** - காட்சி முறையில் ஹக்கைத் தேடுவதில் ஒன்றுக்கொன்று உதவியானவர்கள். **அவர்களுக்கு அதது திரை நீங்கி வெளியாவதற்காகவும்,** அதன் பிரயோஜனம் அடைய வளைந்ததாக ஆவதற்காகவும், அரபிப் பிரதியைக் கொண்டு அது உடையவர்களுக்கும், பார்ஸிப் பிரதியைக் கொண்டு அது

உடையவர்களுக்கும் பிரயோஜனமாவதற்காகவும், **அதன் பலன்கள் சம்பூரணமாவதற்காகவும்-** அதனால்

வரக்கூடிய பலன்கள் அந்த பாஷைகள் விதர்ப்பமாவதைக் கொண்டு அதுவும் விதர்ப்பமாகும். அது இரண்டு பாஷைகளிலும் நோட்டமிடுகிறவர்களுக்கு உண்டாகும்.

**அதை அரபி** (ப் பாஷையில்) **ஆக்கும் படி என்னிடம் கேட்டார்கள். நான் மேலதிகமாக எடுத்துக் காட்டாமலும், குறைவாக்காமலும், அதற்கு விரோத** (மாற்ற)**மாகாமலும் (அது மற்ற கிதாபுகளிலுள்ளதற்கு மாற்றமாக இருந்தாலும் சரி**) **அதிலுள்ளதையே மொழி பெயர்த்து அவர்கள் உடைய தேட்டத்தைப் பூர்த்தி செய்து விடை பகர்ந்தேன்.**

**இதற்கு (இந்த நூலுக்கு**) **'மிர்அதுல் ஹகாயிக்' அகமியக் கண்ணாடி என்று பெயர் வழங்கினேன்.** ஏன்? அதிலுள்ளவைகளை கண்ணாடியில் காணப்படுகிற (காட்சி) உருவங்களைப் போல் காட்டுகிறதே அதற்காக.

(மூல) நூலாசிரியர் இதற்கு 'உலகைக் காட்டும் மது கிளாஸ் (கிண்ணம்)' என்று பெயர் வைத்துள்ளதை விடவும் ('அகமியக் கண்ணாடி' என்ற) இந்தப் பெயர்தான் விளக்கத்திற்கு மிகவும் முடுகுதலானதாகும்.

பெயர் வைப்பது இப்படித்தான் இருக்க வேண்டும். ஏன்? பெயர் வைப்பதின் நோக்கம் விஷயம் நன்றாக துலாம்பரமாகுவது தானே.

மேலும் 'உலகைக் காட்டும்' என்பதினால் உலகின் அகமியங்களை புலனால் உணரப்பட்ட உருவத்தைக் கொண்டு உருவாக்கிக் காட்டுவது என்று உணர்வதை அவசியமென உணர்த்தாது.

எனினும் உலகம் என்ற பதத்தைக் கொண்டு 'புதிதான சிருஷ்டிகள்' என்றேதான் அவசரமாக விளங்கப்படும். அதன் அகமியங்கள் என்றல்ல.

ஆகவே அதைக் கொண்டு இந்நூல் அகமியங்களை விபரிப்பதின் பேரிலும் அதை உருவப்படுத்தி காட்டுவதின் பேரிலும் பொதிந்தது என்று விளங்கப்பட மாட்டாது.

**சகல 'ஹகாயிகு' களும் எவனிடத்தில் போய் முடிவடைகிறதோ அவனிடத்தில்** காரணங்களுக்கு காரியங்களுடனும் அடி மூட்டுக்கு பனர்களுடனுமான கொழுக்குகள் எவனளவில் போய் முடிவடைகிறதோ அந்த நாயனிடத்தில் **இதன் மூல நூலை கொண்டு** அதையுடையவர்களான பார்ஸி பாஷைக்காரர்களுக்கு **பிரயோஜனமாக்கியதைப் போல் இதை** அந்த அரபிப் பிரதியைக் **கொண்டும்** இதையுடையவர்களான அரபிகளுக்கும் **பிரயோஜனமாக்கும்படியும், இதில் பிழை, பிசகு வசராமல் காப்பாற்றும்படியும் ஆதரவு வைக்கிறேன்.**

**நிச்சயமாக அவன், தான் நாடியதின் பேரில் சக்தியுடையவனும்** (துஆவை) **அங்கீகரிக்க பாத்திபமானவனுமாவான்.**

**அதுவாகிறது:-** அந்நூலாகிறது இரண்டு குறிப்புகளுக்கும் அசலிய்யத்தான **இரண்டு 'தாயிறாக்கள்'** வட்டங்கள் பேரிழலும் பொதிந்து கொண்டிருக்கிறது. இன்னும் அதில் நின்றும் ஒவ்வொன்றும் **இரண்டு 'கவுஸ்'கள்** - வில்லுகள் பேரிலும் பொதிந்து கொண்டிருக்கிறது. 'கவுஸ்' என்பது அந்த தாயிறாக்களில் நின்றும் ஒரு துண்டாகும். அது அந்தத் தாயிறாவில் அதற்கு நேர்பாடானதை உருவப்படுத்தி காட்டுவதற்காக உள்ளது. **இன்னும் ஒரு 'கத்தி'ன் கோட்டின் பேரிலும் பொதிந்ததாகும்.**

'கத்து' என்பதாகிறது:- அது இரு தரப்பினது இரகசியங்களையெல்லாம் சேகரமாக்கிக் கொண்டு இருப்பதோடு **அவை இரண்டிற்குமிடையில் 'பற்ஸகா'கும்** - மத்தி தடுப்பாகும். இரண்டும் ஒன்றாக கலந்து போகாமல் அது விலக்குகிறது.

**முதலாவது 'தாயிறா' 'அஹதிய்யத்திலும், வாஹிதிய்யத்திலும்** -அவை இரண்டும் அந்த தாயிறாவின் இரு கவுஸ்கள் - இரு துண்டுகளாகும். இன்னும் **'வஹ்தத்'திலும்** - அது 'கத்துல் பற்ஸக்' –நடுமத்திக் கோடாகும். **இன்னும்** 'வாஹிதிய்யத்'திலிருக்கிற முதன்மையான அஸ்மாக்களின் விவரத்திலும், அதாவது:- **உஜூது, இல்மு, நூர், ஷுஹுது** – உள்ளமை, அறிவு, ஒளி, காட்சி**களைக் கவனிப்பதிலும், இன்னும்** அவை அடங்கலும் **முதல் 'தஜல்லி' முதல் குறிப்பின்** விவரத்திலுமுள்ளது என்பதிலுமாகும்.

**இரண்டாவது 'தாயிறா' ளாஹிருல் உஜூதிலும்** அதாவது உஜூபு-இருப்பின் அவசியம் அதற்கு சொந்த லட்சணமாகிய உஜூதுடைய ளாஹிரிலும் - மெய்ப்பொருளின் வெளிரங்கத்திலும் **இன்னும்** 'இம்கான்' -இருப்பும் இல்லாமையும் ஆகுமாகிறது, அதற்கு அவசியத்தில் நின்றும் உள்ளதாகிய **'ளாஹிருல் இல்மி'லும்** அறிவின் வெளிரங்கத்திலும் **இன்னும்** உஜூபுக்கும், 'இம்கானு'க்கும் இடையில் 'பற்ஸகா'ன – மத்தி தடுப்பான **'ஹகீகத்துல் இன்ஸானிய்யா'விலும் இன்னும்** அவை அத்தனையும் **இரண்டாவது 'தஜல்லி'** இரண்டாவது குறிப்பின் விபரத்திலுமுள்ளது என்பதிலுமாகும்.

**அறிந்து கொள்! அல்லாஹ் உன்னை அவனில் நின்றும் ஒரு 'ரூஹை'க் கொண்டு** அதாவது கற்றூபிய்யான ஒரு மலக்கைக் கொண்டு **கெட்டியாக்குவானாக!** அப்போது ஷைத்தானுடைய ஊசாட்டங்களும், 'நபுஸானிய்யான' ஊசாட்டங்களும், பேத புத்தியும் மந்த புத்தியும் உன்னை மிகைக்காது.

**நிச்சயமாக முதலாவது கவனிப்பாகிறது** – அதாவது அகிலத்தின் படித்தரங்களைப் பற்றி 'அக்லு' முதன்முதலாக கவனித்து எடுப்பதாகிறது, **இத்லாகு – பொதுவாக இருப்பதுவாகும்.** ஏனென்றால் 'அக்லு' அதைத்தான் எல்லா குறிப்புகளுக்கும் முதன்முதலாக கவனிக்கும். ஏன்? அதுவாகிறது – குறிப்பாகிறது லட்சணமாகும். லட்சணத்திற்கு அதை பூண்டு கொள்ளுமுன் அதை விட்டும் நீங்கி பொதுவாக இருப்பதைப் பூண்ட ஒரு லட்சணமுடையான் அதை விடவும் முந்தியிருப்பது அவசியமாகும்.

'இத்லாகு' என்பது கொண்டு கருத்து:- எதார்த்தத்தில் குறிப்பு, கட்டுப்பாடு இல்லாமலிருப்பது என்பதல்ல. எங்கிலும் கட்டுப்பாட்டை கவனிக்காமல் இருப்பது என்பதுவேயாகும்.

**ஆகையினால் அதில் 'ளுஹூரின்' ஹுக்மு 'புதூனி'லும் - வெளியாவதுடைய 'ஹுக்மு' உள்ளாவதிலும்** - ஏன்? இந்த 'மற்தபா' வில் விவரமில்லையே. ஏன்? அது -ளுஹூறு' குறிப்பின் பயன்தானே – குறிப்பினால் வரக் கூடியதுதானே.

(மூல) நூலாசிரியர் 'ளுஹூறு', புதூனி'ல் மறைந்திருக்கிறது என்று சொல்லவில்லை, ஏனு;? இரண்டு நேர் முரணானவைகளில் ஒன்று மற்றொன்றில் மறையாதே! எனினும் அதன் குணபாடும் அதிகாரமும் இதில் மறைந்து விட்டது என்பதுவேதான்.

**இன்னும்** எப்படி அதில் ளுஹூறுடைய அதிகாரம் புதூனில் மறையாமலிருக்கும்? முந்தின குறிப்பில், முதன்மையான இஸ்முகளைப் பொதிந்த **வாஹிதிய்யத்து, அஹதிய்யத்திலும்**, **இன்னும் அவை இரண்டும்** இத்லாக்குக்கு சமீபமாக இருப்பதினாலும், இன்னும் ஹுக்மிய்யான மறைதலுடன் ஹகீகிய்யான மறைதலும் - அதிகார மறைதலுடன் எதார்த்தமான மறைதலும் சகல மற்தபாக்களுடைய வெளிப்பாட்டையும் அடக்கியாளும்படியான **வஹ்தத்தின் ஆதிக்கத்திலும் மறைந்ததாக இருக்கும்.**

**இன்னும் அதில் இழந்தாகும் 'ஐனிய்யத்து' 'ஙைரிய்யத்து'** – தானாக இருப்பது வேறாக இருப்பது **என்ற பெயர்களும்** எப்படி அவ்விரண்டு பெயர்களும் அதில் இல்லாமலாகாது? பொதுவாக '**இஸ்மும்' –பெயரும்** இல்லாமலாகி விட்டதே. எப்படி அதில் பெயரில்லாமல் போகாது? அதுவோ –பெயரோ ஒன்றிருக்கில் 'றஸ்மை' அடையாளத்தை கொண்டு விபரமாக்குவதாகும். அதில் '**ரஸ்மு'ம்** இல்லையே. இன்னும் ஒன்றிருக்கில் 'நஃதை' கொண்டு விபரமாக்குவதாகும் இருக்கிற பொருளை வர்ணிக்கிற '**நஃது'ம்** அதை விட்டு இல்லாமலாகி விட்டதே. அதெப்படி இல்லாமலாகி போகாது? இருக்கிற பொருளைக் கொண்டு வர்;ணிப்பதற்கும் பொதுவான '**வஸ்பும்'** அதை விட்டும் இல்லாமலாகி விட்டதே. எப்படி அதை - இத்லாக்கை ஒரு வஸ்து என்று வர்ணிக்கப்படும்? அதுவோ – வஸ்துவோ ஒன்றிருக்கில் வெளியான கருமத்தில் நின்றுமுள்ளதாக இருக்க வேண்டும். அல்லது மறைவான கருமத்தில் நின்றுமுள்ளதாக இருக்க வேண்டும்.

**'ளுஹூறு'ம், 'புதூனும்' –வெளியாவதும், உள்ளாவதும்** அதைவிட்டும் இல்லாமலாகி விட்டதே! எப்படி அந்த கருமங்களெல்லாம் அதை விட்டும் இல்லாமல் போகாது? அவைகள் 'கத்றத்து' அல்லது 'வஹ்தத்'தின் - பன்மை அல்லது ஒருமையின் பயன்கள்தானே.

**'கத்றத்து'ம், 'வஹ்தத்து'ம் ,** அதை விட்டும் இல்லாமலாகி விட்டதே!

இன்னும் உஜூபும், இம்கானும், அதன் அவசியத்திலுள்ளதாக இருக்கிற வஸ்து என்று அதை - இத்லாக்கை எப்படி வர்ணிக்கப்படும்?

**'உஜூபும், 'இம்கானு'ம்** அதை விட்டும் இல்லாமலாகிவிட்டதே! இப்பொழுது சொல்லப்பட்ட 'இல்லை' என்பனவெல்லாம் எதார்த்தத்தைப் பொருத்தல்ல. எனினும் புத்தியின் கவனித்தலாக இருக்கும்.

**எனவே அதுவாகிறது:- அதில்** - அந்த கவனத்தில் **மறைந்ததாக ஆகிவிட்டது.** பன்மையை தேடக் கூடியதான **ளாஹிரிய்யத்தும்,** ஒருமையைத் தேடக் கூடியதான பாதினிய்யத்தும், உஜூபைத் தேடக் கூடியதுவான **அவ்வலிய்யத்தும்**, 'இம்கானை' தேடக் கூடியதான **ஆகிரிய்யத்தும்,**

இந்தக் கருமங்களெல்லாம் மறைந்ததினால் அவைகளும், அவைகளுக்கு அவசியமாக ஆக்கப்பட்டவைகளும் இந்த கவனத்தில் இல்லாமலாகி விட்டது என்றே முடிவு செய்யப்பட்டது.

ஆனால் அது - இத்லாக்கு குறைபாட்டை சந்தேகிக்க வைப்பதாகவே ஆகிவிட்டது.

**ஆகையினால் 'கைபுல் ஹுவிய்யத்'தின் கல்வத்தைப் பார்த்தவன்** அதாவது குறைபாட்டின் சந்தேகத்தை உண்டாக்கும்படியான இத்தாதி கவனங்களையெல்லாம் விட்டும் அது ஒழிந்திருப்பதை சந்தேகிக்க வைக்கிற மறைவான தாத்தாகிய இத்லாக்குடைய மற்தபாவைப் பார்த்தவன் **தனது தாத்தைக் கொண்டே தனது தாத்துக்கு வெளியாக நாடி**, ஏன்? அது தான் இந்த சந்தேகத்தை நீக்குவதில் மிகக் குறைந்ததுவாகும்.

மேலும் அதற்கு ஒரு பொருள், அது (சகலதை விட்டும்) நீங்கியிருப்பதோடு அது தனக்கு வெளியாவது போதுமே. இதனாலேயே மனிதன் அவனுக்கு அறிவு இருக்கும் வரையிலும் ஒரு போதும் தன் 'நப்ஸை' விட்டும் மறதியாளனாக ஆக மாட்டான். ஆகவே,

**முதலாவதாக 'வஹ்தத்'தின் 'ஸிபத்'தைக் கொண்டு வெளியானான்.** (பாகங்களை விட்டும் அவனைப் போன்றவைகளை விட்டும்) 'தனித்தவன்' என்பதைக் கொண்டு வெளியானான். ஏன்? அது தாத்திய்யான இத்லாக்குக்கு 'தாத்து முத்லக்கா'க இருப்பதற்கு சமீபமாக இருப்பதற்காக **அதுவே** அதாவது- வஹ்தத்தே **தான் அதிலிருந்து வெளியான முதல் குறிப்பாகும்.** அதாவது இத்லாக்காகிய ஹுவிய்யத்தில் நின்றும் வெளியான முதல் குறிப்பான முதலாவது கவனிப்பாகும். பின்னர் அஹதிய்யத்து பின்னர் வாஹிதிய்யத்தாகும். ஏன்? அது கவனிப்புகளில் முந்தினதாக இருக்காது.

**அது சகல 'காபிலிய்யத்' துகளுக்கும்** - ஏந்து கொள்ளக் கூடியவைகளுக்கும் அடி மூடாகும்.

அதாவது:- எல்லாக் குறிப்புகளையும் ஏந்துக் கொள்வதற்கும் அது ஆரம்ப இடமாக இருக்கிறது. ஏன்? ஒரு வஸ்து அதனளவில் சேர்ந்த கட்டுப்பாடுகளை – சேர்மானங்களை கவனிக்கிறது கொண்டு அது ஒன்றாக – ஐக்கியமாக ஆகாதவரையிலும் அந்த சேர்மானத்தினால் அது குறிப்பிடத் தக்கதோர் குறிப்பாக குறிப்பாகாது. அது எல்லாக் 'காபிலிய்யத்'துகளுக்கும் அடிமூடாக இருக்கிறதுக்கு விபரமாகிறது, வஸ்துக்களளவில் சேரக் கூடியவை அடங்கலின் சம்பந்தமும் அதனளவில் சமமாக ஆகும். ஆகவே அது அதற்காக குறிப்பாகும்.

**அதில் ளுஹூறும் புதூனும் சரி சமமாகும்.** அதாவது:- தெளிவைக் கொடுக்கக் கூடியதும், மறைவைக் கொடுக்கக் கூடியதும் அதில் சேர்வதினால் அது அவை இரண்டையும் ஏந்துக் கொள்ளக் கூடியதாயிருப்பது சமமாகும்.

**அது அவை இரண்டிற்கும்** அதாவது:- ளுஹூறுக்கும், புதூனுக்கும் **காபிலாக இருப்பதை** கவனித்து, 'புதூனை' – மறைவை தேடும்படியான **அஹதிய்யத்திற்கும்,** ளுஹூறை – வெளியாவதை தேடும்படியான **வாஹிதிய்யத்திற்கும், அது மள்ஹராக** – (வெளியாகும்தானமாக) **ஆகி விட்டது.**

அவை இரண்டும் வஹ்தத்தில் வெளியானதெல்லாம் ஏன்;? **அவை இரண்டும் சம்பந்தத் தொடர்புள்ளவைகளாக இருப்பதற்காக** அவற்றில் நின்றும் ஒவ்வொன்றையும் மற்றதளவில் சம்பந்தத்தைக் கொண்டு கவனிக்கப்படும்.

**ஆகையினால் அவை இரண்டும் சம்பந்த புறத்தினால் அவை இரண்டிற்குமிடையில் இணைக்கக் கூடிய நிஸ்பத்தை - இணைப்பைக் கொண்டே அல்லாது** இணைப்பான மள்ஹறிலேயே அல்லாது **வெளியாகாது. அது தான்** அதாவது:- அஹதிய்யத்திற்கும், வாஹிதிய்யத்திற்கும் இடையில் சேர்க்கும்படியான அந்த இணைப்புத்தான் **வஹ்தத்தாகும்.** ஏன்?

'அஹதிய்யத்'தாகிறது தாத்தை அது ஒன்றை மட்டும் கவனிப்பதாகும். 'வாஹிதிய்யத்'தாகிறது தாத்தை ஸிபத்தோடு கவனிப்பதாகும். ஆகவே இரண்டும் ஒன்றுக்கொன்று எதிரானதாக ஆகிவிட்டது. ஆகையினால் வஹ்தத்து தாத்திய்h தாத்து ஒன்றாக இருப்பதானது அவை இரண்டிற்குமிடையில் சேர்த்து வைத்தது.

ஏன்? தாத்தாகிறது அவை இரண்டில் நின்றும் ஒவ்வொன்றிலும் ஒன்றேதானே. ஒரு கவனிப்பில் த னித்ததாகவும், இன்னுமொரு கவனிப்பில் தனித்ததல்லாததாகவும் இருக்கிறது. வஹ்தத்து அவை இரண்டிற்கும் மள்ஹராக ஆனதெல்லாம் ஏன்? இந்த இரண்டு கவனிப்பும் தாத்தில் உண்டானதெல்லாம் தாத்து ஒன்றாக இருப்பதை கவனிப்பது கொண்டே ஆகும்.

**ஆகவே அவை இரண்டும்** அதாவது:- அஹதிய்யத்தும், வாஹிதிய்யத்தும் அடிமூட்டில் இருந்து கிளைகள் உண்டாவது போல், உவமையில் வினைச் சொல், வினைப் பெயர்ச்சொல் வகையறாக்கள் வினையிலிருந்து உண்டாவது போல்.

**அதிலிருந்து உண்டானது.** உதாரணமாக:- **'மஹப்பத்' திலிருந்து 'முஹிப்பிய்யத்'தும், 'மஹ்பூபிய்யத்'தும் -உகப்பிலிருந்து உகந்தவனாக இருப்பதும் உகக்கப்பட்டவனாக இருப்பதும் இன்னும்** அதிக உகப்பான **இஷ்க்கிலிருந்து ஆஷிக்கிய்யத்தும் ம..ஷூகிய்யத்தும் -ஆசையிலிருந்து ஆசித்தவனாக இருப்பதும், ஆசிக்கப்பட்டவனாக இருப்பதும் உண்டானது போல்.**

மூல நூலாசிரியர் இரண்டு உவமானங்களை கூறியிருக்கிறார்கள். ஏன்? சம்பந்தத்தைக் கொண்டு சம்பந்தம் கொண்டவைகள் உண்டாவது அனேகம் என்றும்,

இன்னும் அதற்கு இரண்டு கருத்துகளுக்கிடையில் கூடுதலாக இருப்பது, கூடுதலாக இல்லாதிருப்பது என்ற விதர்ப்பம் இருப்பதும் போதும் என்று அறிவிக்கிறதற்காக!

ஏன்? எதில் கூடுதலில்லாதிருக்கிறதோ அது அதைக் கொண்டு லட்சணம் பூணாதவனுக்கு உற்பத்தியிடமாக இருக்கிறதைப் போல் கூடுதல் இருக்கக் கூடியதும் அதைக் கொண்டு லட்சணம் பூண்டவனுக்கு உற்பத்தியிடமாக இருப்பதன் பேரில் அறிவிக்கிறதே!

இன்னும் அது அவை இரண்டிற்கும் உற்பத்தியிடமாக இருப்பதாகிறது அது 'பற்ஸகா'க நடுமத்தி தடுப்பாக இருப்பதை இல்லாது ஒழித்து விடாது. ஏன்? அது அவை இரண்டிற்குமிடையில் இணைக்கக் கூடிய இணைப்பாக இருப்பதைக் கவனித்து,

**அது அவை இரண்டிற்குமிடையில் நடுவிலானதாக இருப்பதினால் அதற்கு 'பற்ஸகு' என்று பெயர் வைக்கப்பட்டது.** அது எப்படி ஆகாதிருக்கும்? பற்ஸகாக இருப்பதாகிறது, அது கவனிப்பினால் ஆனதுதானே!

**அது** வாகிறது மள்ஹறாக வெளியாகும் தானமாக இருப்பதைக் கவனித்து **அவை இரண்டும் தானாகவே ஆகும்.**

சம்பந்தமாகிறது –லட்சணமாகிறது ஒரு விதத்தில் சம்பந்தம் கொண்டுள்ளவைகள் -லட்சணம் பூண்டவைகள் தானாக ஆவது தூரமானதல்ல. ஏன்? அதுவாகிறது உவமையில் **தாத்துடைய மற்தபாவில் ஆலிம், மஃலூம், இல்மைப் போல்** ஏன்? இல்மானது அவை இரண்டடிற்குமிடையில் சம்பந்தமாக இருப்பதோடு அது ஒன்றானதாக இருக்கிறது. ஏன்? **அது இல்மு இந்த** தாத்துடைய சமூகமான **சமூகத்தில் அதுவே ஆலிம், மஃலூம் எல்லாமுமாகும்.**

ஏன்? இ(ந்த தாத்துடைய சமூகத்)தில் தாத்துக்கும் சிபத்துகளை விட்டும் அலாதியாவது இல்லை.

இன்னும் சம்பந்தத்திற்கும் சம்பந்தம் கொண்டவைகளை விட்டும் அலாதியாக பிரிவது இல்லையே.

**ஆனால் ஆலிமிய்யத்து, மஃலூமிய்யத்து, இல்மு அறிந்தவனாக இருப்பது, அறியப்பட்டவனாக இருப்பது, அறிவு இவைகளளவில் கவனித்தோமானால்** இன்னும் அவைகளுக்கிடையில் ஆன விபரத்தையும் கவனித்தோமானால் **அறிவு அவை இரண்டிற்கும் இடையிலான நிஸ்பத்து –சம்பந்தம் என்று சொல்கிறோம். அதேபோல் தான் 'அஹதிய்யத்'தும், வாஹிதிய்யத்தும், வஹ்தத்தும்.**

எதார்த்தத்தில் ஒன்றான கருமங்களாகும். எனினும் அவை இரண்டிற்குமிடையிலும் பாகுபாட்டை கவனித்தோமானால் 'வஹ்தத்'தாகிறது, அவை இரண்டிற்குமிடையில் 'நிஸ்பத்து'- சம்பந்தம் என்றும் அது அவை இரண்டிற்கும் உற்பத்தியிடமென்றும் சொல்கிறோம்.

**ஏன்?** அது இரண்டு தரப்பையும் விட்டு அலாதியாக இருப்பதைக் கவனித்து **அதற்கு இரண்டு தாத்திய்யான கவனிப்புகள் இருக்கின்றன.**

அதாவது:- அவை இரண்டிற்கும் உற்பத்தியிடமான தாத்தே அதுவாக இருக்கிறது என்ற இரண்டு கவனிப்புகள் இருக்கின்றன.

**அதில் ஒன்றாகிறது:- எண்ணிக்கை இல்லாமையும்,** அதாவது:- அஸ்மாக்களின் எண்ணிக்கை இல்லாமையும், (இன்னும்) **நிஸ்பத்து சம்பந்தங்கள் இல்லாமையுமாகும்.**

அதாவது:- சிருஷ்டிகளளவில் சம்பந்தம் கொள்ளும்படியான ஸிபாத்துகள் லட்சணங்கள் இல்லாமையுமாகும். உதாரணமாக: ஹக்குத் தஆலாவை மஃலூமாத்து, முறாதாத்து, மக்தூறாத்துகளளவில் தொடர்பாக்கும்படியான இல்மு, இறாதத்து, குத்ரத்தைப் போல அறியப்பட்டவைகள், நாடப்பட்டவைகள், சக்தி பெறப்பட்டவைகள் அளவில் தொடர்பாக்கும்படியான அறிவு, நாட்டம், சக்தியைப் போல் அவைகள் இல்லாதிருப்பது கொண்டு கருத்து அவைகளைக் கவனிக்காதிருப்பது என்பதுவேயாகும். **அதைக் கொண்டு** –அந்தக் கவனிப்பைக் கொண்டு **தாத்துக்கு அஹது – தனித்தவன் என்று பெயர் சொல்லப்படும்**. ஏன்? தாத்தாகிறது அதை உருவப்படுத்தி கவனிப்பதற்கு அறியப்பட்டவைகளளவிலும், நாடப்பட்டவைகளளவிலும், சக்தி பெறப்பட்டவைகளளவிலும் தேவையற்று அதன் சிறப்போடு தரிப்பட்டிருப்பதன் பேரில் அறிவிக்கிறதே. ஏன்? அஹதாகிறது, தரிபடுதலின் பேரில் அறிவிக்கக்கூடிய 'ஸிபத்து முஷப்பஹா' வாகும்.-பெயர்ச் சொல்லுக்கு ஒப்பான லட்சணமாகும்.

**இரண்டாவது:- அவை இரண்டையும் கவனிப்பதுவாகும்.** அதாவது:- தாத்தில் எண்ணம் இல்லாதிருப்பதோடு, அஸ்மாக்களுடையவும், நிஸ்பத்துகள் ஸிபத்துகளுடையவும் எண்ணத்தைக் கவனிப்பதாகும்.

**அ**(ந்த கவனத்)**தைக் கொண்டு தாத்துக்கு வாஹிது – ஒன்றானவன் என்று பெயர் சொல்லப்படும்.** ஏன்?

தாத்து ஒன்றாக இருப்பதானது அஸ்மாக்களையும் 'ஸிபத்து'க்களையும் ஒன்றானது என்ற முடிவுக்குள்ளாக்கி விட்டதே. இந்தக் கவனம் சிருஷ்டிகளை கவனிப்பது கொண்டு உண்டாகிறதினால் அது வினைகளின் பேரில் அறிவிக்கக் கூடிய இஸ்மு பாயிலின் - வினைப் பெயர்ச் சொல்லின் பேரில் அறிவி;க்கிற ஒரு வினையைப் போன்றிருக்கிறது.


அவை இரண்டும் எதிர் எதிரான இரு வஸ்துக்களாகும். அவை இரண்டிற்குமிடையில் 'வஹ்தத்'தானது சேர்த்து வைத்தது.

**ஆகவே வஹ்தத்திற்கு** எதார்த்தத்தை கவனிப்பது கொண்டு **அது இரண்டு தரப்பும் தானாகவே இருப்பதுடன் அதற்கு இந்த இரண்டு கவனிப்புகளுக்குமிடையில் நடுவிலாகிற 'ஹுக்மு'ம் உண்டு.**

'வஹ்தத்து' 'அஹதிய்யத்து' தானாக இருக்கிறதாகிறது:- நல்ல துலாம்பரமானதாகும்.

வஹ்தத்து, வாஹிதிய்யத்து தானாக இருப்பதாகிறது:- அஸ்மாக்களும், ஸிபாத்துகளும் தாத்துக்கு வேறாக இல்லாதிருப்பதினாலேயேயாகும்.

**இந்த மற்தபாவை** அதாவது:- முதல் குறிப்பின் மற்தபாவை **விளக்கி வைப்பதற்காகவும்,** மனதுக்கு பழக்கம் அதிகமான புலனால் உணரப்பட்ட உருவத்தைக் கொண்டு உருவாக்கிக் காட்டி **அதை மனதில் பதிய வைப்பதற்காகவும், நீ பார்ப்பது போல் ஒரு வட்டத்தை உண்டாக்கப்பட்டு இருக்கிறது**.




**இந்த வட்டமாகிறது** முதல் குறிப்பின் வட்டமாகவும், அதில் மற்தபாக்களுக்கிடையில் பாகுபாடும், விபரமும் இல்லாதிருந்தாலும் சரி, அது இரண்டாவது குறிப்பில் பாகுபாடு, விபரம் வெளியாகக் கூடிய கருமங்களை எல்லாம் பொதிந்திருப்பதை விளக்கி வைப்பதற்காக வேண்டி **அதன் நடுவில் சென்று போகிற** அதாவது:-

நடுமத்தி புள்ளியில் விழுந்து வட்டத்தின் இரு பாகத்தளவிலும் நேரே சென்று போகிற **ஒரு கோட்டினால் இரு வில்லாக வளைக்கப்பட்டதாகும்**. ஏன்?

அந்தக் கருமங்களெல்லாம் எதார்த்தத்தில் இரண்டாவது குறிப்பில் புதிதாக உண்டானதில்லை.

எனினும், அதில் விபரமானதுவேதான் என்பதை முதலாவதாக அறியப்படுவதற்காக **அவை இரண்டிலொன்று,** அடியோடு விபரத்தை விட்டும் விலக்கும்படியான **அஹதிய்யத்துடைய வில்லும்,** மற்றது பொதுவான விபரத்தை கொடுக்கும்படியான **வாஹிதிய்யத்துடைய வில்லுமாகும்**. அவை இரண்டிற்கும் இடையிலுள்ள பிரிக்கும்படியான **கோடாகிறது காபகௌஸைனியாகும் இரு வில்லினுடைய நாணாகும்.**

அதாவது எதார்த்தத்தில் அது அவை இரண்டும் தானாகவே இருக்கிறதைக் கவனித்து அவை இரண்டிற்குமிடையிலுள்ளது சேகரமாகின்ற சங்கமமாகும்.

**இந்த கோடாகிறது – முதலாவது 'தஜல்லி'யை அது சுமந்து கொண்டிருப்பதைக் கவனித்து** அதாவது:- அதனுடைய எல்லாக் கவனிப்புகளையும் எதார்த்தத்தில் சுமந்துகொண்டு இருப்பதைக் கவனித்து **அதற்கு 'ஹகீகத்துல் முஹம்மதிய்யா' என்று சொல்லப்படும்**.

ஏன்? அது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய ரூஹின் குறிப்பு உண்டான இடமாகும். அதற்கு முதற் குறிப்பு என்று சொல்லப்படும்.

**பின்னர்** அதாவது:- இரு கவனிப்புகளில் ஒன்று இந்த பங்குகளளவில் பங்காகும்படியான இரண்டு கவனிப்புகளுக்கிடையில் பிரிவை உண்டாக்கும்படியான 'ஹகீகத்துல் முஹம்மதிய்யா'வை கவனித்ததின் பின்னர் **'வாஹிதிய்யத்'துடைய வில்லை** அதில் பொதுப்படையாக பிரிந்ததை விளக்கி வைப்பதற்காக வேண்டி **நான்கு பங்குகளாகப் பகிர்ந்து அதில் நான்கு கவனிப்புகளை** – அதாவது:- எதார்த்தத்திலில்லாமல் கவனிப்பின் புறத்தினாலான பிரிவாக பிரிந்த நான்கு கருமங்களை வைக்கப்பட்டிருக்கின்றது. **அவை உஜூது, இல்மு, நூர், ஷுஹூது – உள்ளமை, அறிவு, ஒளி, காட்சிகளாகும்.**

அவைகள் அசலில் பாகுபாட்டை விலக்கும்படியான முதல் குறிப்பில் நின்றுமுள்ளதாக இருந்தும் அவைகளை 'வாஹிதிய்யத்'தில் வைக்கப்பட்டதெல்லாம் அவைகளின் கொழுக்குகள் அதன் பேரில் தரிபட்டிருப்பதற்காகவேயாம்.

**ஏன்? ஹக்குதஆலா அவனுடைய முந்தின குறிப்பைக் கொண்டு** அதாவது அசலிய்யான கவனிப்பில் பிரிவினையில்லாமல், அஹதிய்யத்தையும், வாஹிதிய்யத்தையும் பொதிந்த வஹ்தத்தைக் கொண்டு **தன் நப்ஸுக்கு வெளியானான்.** அதுதான் அறிவு, **அது இலங்கியது**. அதுதான் ஒளி **அதைப் பெற்றுக் கொண்டான்.** அதுதான் உஜூது அதனுடனானான். அதுதான் காட்சியாகும்.

அல்லாஹுத்தஆலா அவனில் எதுவும் புதிதாக உண்டாகுவதை விட்டும் அவன் பரிசுத்தமானவனாக இருக்க, இப்போது சொன்ன சொல்லின் வெளிரங்கம் இவைகளெல்லாம் அவனில் இல்லாதிருந்து பின் உண்டானது என்ற சந்தேகத்தை எழுப்பக் கூடியதாக இருப்பதினால் (மூல ) நூலாசிரியர்,

அவனுக்கு மடமை, திரை, இழப்பு, மறைவு (முதலியன) முன்பு இருந்ததென்ற சந்தேகமில்லாமல் அதாவது:- அறிவின் பேரில் மடமையும், ஒளியின் பேரில் திரையும், பெற்றுக் கொள்வாதின் பேரில் இழந்திருப்பதும், காட்சியின் பேரில் மறைந்து இருப்பதும் (முன்பு இருந்ததென்ற சந்தேகமில்லாமல்) என்று சொன்னார்கள்.

எங்கிலும், முடிவான வார்த்தையாகிறது, இந்தக் குறிப்புக்கு முன் புத்தி அவைகளைக் கவனிக்கவில்லை என்பதுவேயாகும்.

பின்னர், மூல நூலாசிரியர், அவைகள் முந்தின குறிப்பிற்கு, அவசியமானதில் நின்றுமுள்ளதாக இருந்தும் அவைகளை அஹதிய்யத்திலல்லாமல், வாஹிதிய்யத்தின் வில்லைக் கொண்டு சொந்தமாக்கியதளவில் சயிக்கினை செய்து சொல்கிறார்கள்.

**இந்த நான்கும் அவற்றில் கவனிப்பினாலான பன்மையிருக்கிறதற்காக வேண்டி அவைகளை,** அதன் அசல் அலாதியாக பிரிவதுவாகிய வாஹிதிய்யத்தின் வில்லில் சேர்க்கப்பட்டது.

நூலாசிரியர் 'கவனிப்பிலான பன்மை' என்று வர்ணித்தார்கள் ஏன்? அது பொதுப்படையான நிலைமையில் வெறும் கவனிப்புத்தானே! எனவே எதில் ஏதோ ஒரு வகையில் பிரிவினை இருக்கிறதோ அதை அதில் நின்றும் ஆக்கப்பட்டது. அஹதிய்யத்தில் நின்றுமல்ல.

**ஏன்? அஹதிய்யத்தில்,** அது இத்லாக்கிற்கு சமீபமாக இருப்பதினால் அதில் **அவைகளுக்கு அடியோடு பாகுபாடு விபரம் இல்லாதிருப்பதற்காக. எங்கிலும் அதில் அவைகளில் நின்றும் ஒவ்வொன்றும் மற்றது தானாகவே இருக்கிறது.**

பின்னர் (மூல) நூலாசிரியர், அவர்கள் முதலாவது தஜல்லியிருப்பதைப் பற்றி, அறியாமை முன்பு இருந்ததென்று சந்தேகம் கொள்ளப்படாதது போல் இரண்டாவது தஜல்லியில் இருப்பதைப் பற்றிய அறியாமையும், முதல் தஜல்லியில் முன்பு இ:ருந்ததாக சந்தேகம் கொள்ளலாகாது.

எனினும், முடிவான விஷயமாகிறது:- அவ்விடத்தில் பொதுப்படையான விதமாக அதை கவனிக்கப்படும். விபரமான விதத்தில் அல்ல என்பதளவில் சயிக்கினை செய்து சொன்னார்கள்.

**அறிந்து கொள்! முந்தின தஜல்லியாகிறது தாத்திய்யான கமாலையும்,** அதாவது:- அஹதிய்யத்தை கவனிப்பது கொண்டு, தாத்துடைய கமாலை அறிவதையும், **இன்னும்** வாஹிதிய்யத்தை கவனிப்பது கொண்டு **அஸ்மாயிய்யான கமாலை அறிவதையும் பொதுப்படையாகவும் பொதிந்து கொண்டிருக்கிறது.**

அதுவாகிறது:- விபரமான, சில்லரையானதாக அல்லாமல் பொதுப்படையான அறிவாக அறிவதாகும்.

**ஏன்? பூரணமாக விபரமான சில்லறையானதாகிறது** மூல நூலாசிரியர் 'பூரணமாக' என்று குறிப்பு போட்டிருக்கிறார்கள். ஏன்? வாஹிதிய்யத்திலும் ஒரு வகையான விபரமிருக்கிறதே! கலப்பற்ற பொதுப்படையாகிறது, அது அஹதிய்யத்திலேயே தான். **அது ஹகாயிகுகளெல்லாம் பிரிந்து அலாதியாகிறதின் பேரிலும்** ஏன்? அஸ்மாக்கள் ஹகாயிகுகளளவில் சம்பந்தம் கொண்டிருக்கிறதை கவனிப்பது கொண்டே அல்லாது, அவை தாத்துக்கு வேறாகாது.

அவை (அஸ்மாக்கள்) அவைகளளவில் (சிருஷ்டிகளளவில்) சம்பந்தம் கொள்கிறது. அவைகள் (சிருஷ்டிகள்) அலாதியாக பிரிந்த பின்னாலேயேயல்லாதில்லை.

**இன்னும், பின்னால்** இன்ஷாஅல்லாஹ் தஆலா நூலாசிரியர் 'அதுவாகிறது விபரமாக ஆலத்தைக் கொண்டும், அதன் பின்னால் பொதுவாக ஆதமைக் கொண்டும் ஷர்த்திடப்பட்டதாகும்.' என்று சொன்ன வார்த்தையிலிருந்து 'வரிசைக்கிரமமாக' என்று அவர்கள் சொன்னது வரைக்கும் **வரக்கூடியதின் பேரிலும் தரிபட்டிருப்பதற்காக.**

**இன்னும் அதன்பேரில் வஹ்தத்து மிகைத்திருப்பதினால் அதில்** முதல் தஜல்லியில் அதற்கு விபரத்திற்கு **இடமில்லை.** விபரமாகிறது பன்மையைத் தேடும்.

இன்னும் அது விபரத்தைப் பற்றி அறியாமல் இருப்பதை அவசியமாக்காது – அதனால் விபரமான அறிவு இல்லையென்று வராது. ஏன்? **தாத்திய்யான கமாலாகிறது** அதில் அஸ்மாயிய்யான கமாலை கவனிக்கப்படாதிருந்தாலும், அது விபரமாக காட்சியை விட்டும், **ஙினல் முத்லக்கை பொதுவாக தேவையற்றிருப்பதை அவசியமாக்கிக் கொள்கிறது.**

எப்படியென்றால் **அதுவாகிறது ஆதியில்** அஸ்மாக்களுடைய ஸூரத்துகளும், அதனுடைய ஆதாறு – குணபாடுகளும் வெளியாக முன்னால், தாத்தையும், அதன் ஷுவூன்களையும் **அவன் மொத்தமான காட்சியாக காட்சி காணுவது போல்.**

அஸ்மாக்களுடைய ஸூரத்துகளில் நின்றும் இன்னும் ஆதியிலிருந்து அந்தம் வரையிலும் உண்டாகக் கூடிய அதன் ஆதாறுகளில் - குணபாடுகுளில் நின்றும் **விபரமாகுகிற போக்கிலுள்ள அடங்கலையும் அவன் காட்சி காணுவதாகும்.** ஆகவே பொதுப்படையான விதத்தில் அவன் காட்சி காணுவான்.

எனவே அது விபரத்தை தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறதினால் **அவன் விபரத்தை விட்டும் தேவையற்று விடுகிறான்.** எங்கிலும், அஸ்மாயிய்யான கமாலாகிறது, ஹகாயிகுகள் விபரமாகப் பிரிவதைக் கொண்டே அல்லாமல் அது வெளியாகாததினால் இரண்டாவது குறிப்பைத் தேடினான்.

**ஆகவே இங்கு** - இரண்டாவது தஜல்லியில் **தேடப்பட்டதாகிறது,** அஸ்மாக்கள், ஆலத்தின் ஹகாயிகுகள் அளவிலும், ஆதம் அளவிலும் சம்பந்தம் கொண்டிருப்பதை கவனிப்பது கொண்டு **அஸ்மாயிய்யான கமாலாக இருக்கும்.**

அது பூரணமாக ஆவதாகிறது அஸ்மாக்களின் ஸூரத்துகளும், அதன் ஆதாறுகளும் உடந்தையாக வெளியாவது கொண்டாகும்.

**அதுவாகிறது** முதலாவதாக புத்தியிலும், இரண்டாவதாக வெளியிலும் எல்லாம் பூரணமாக **ஆலத்தைக் கொண்டு விபரமாக**

ஏன்? அதனுடைய பாகங்களிலிருந்து ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு குறிப்பான இஸ்முக்கு மள்ஹராக வெளியாகும் தானமாக அல்லது அதன் ஆதாறுக்கு – குணபாட்டிற்கு இடமாக இருக்கிறதே.

ஆலத்தின் சகல பாகங்களும் இரண்டு விதத்தில் ஒரு விதத்தைக் கொண்டு விபரமாக வெளியாகுமானால் அஸ்மாக்களுடைய கமாலாத்துகளும், புத்தியில் அல்லது வெளியில் விபரமாக வெளியாகி விடு;ம்.

**இன்னும் அதன் பின்னால்** அந்த விபரத்திற்குப் பின்னால் **பொதுவாக ஆதமைக் கொண்டு ஷர்த்திடப்பட்டதாகும்.** ஏன்?

அவர்கள் ஆலத்தின் சகல பாகங்களுடைய ஹகாயிகுகளையும் இலாஹிய்யான அஸ்மாக்கள் உடைய ஹகாயிகுகளையும் சேகரமாக்கிக் கொண்டு இருப்பதினால்.

அப்போது அஸ்மாக்களுடைய கமாலாத்துகள் அவை பிரிந்து கிடந்த பின் அவரைக் கொண்டு அவை சேர்ந்ததாகவும், விபரமாகவும் வெளியாகும். இந்த அஸ்மாயித்தான கமாலும் தாத்துடைய கமாலாத்தில் நின்றுமுள்ளதாகும்.

**ஏன்? தாத்து** அது தன் புறத்தினால் தேவையற்றதாக இருந்த போதிலும், முதலாவது குறிப்பில் அதை கமாலை **பொதுப்படையாக தேடியது** போல் இரண்டாவது குறிப்பிலும் அதற்குப் பின்னாலுள்ளதிலும் **அஸ்மா ஸிபாத்தின் புறத்தினால் அதை விபரமாக தேடியது.**

இந்த வஸ்துக்களெல்லாம் தாத்து தன்னில் தாத்து அஸ்மா ஸிபாத்துகளுக்கு வேறானதாக இல்லாத புறத்தில் நின்றும் தாத்தின் கமாலை கொண்டதாக இருக்கும்.

அஸ்மா சிபாத்துகள் தாத்து தானாக இல்லாத (வேறானதாக இருக்கிற) புறத்தினாலான **இ**( ந்த கமாலாகிற)**து** அது ஆலத்தைக் கொண்டும் ஆதமைக் கொண்டும் கொழுகி இருக்கிற புறத்தில் **வேறே ஒரு கமாலாக இருக்கும்.** அது வேறே ஒரு கமால் என்பதின் பேரில் அறிவிக்கிறது. அது **ஹகாயிகுகள் எல்லாம் விபரமாக அலாதியாவதைக் கொண்டும், இன்னும்** சிருஷ்டிகளளவிலுள்ள அஸ்மாக்களின் சம்பந்தங்கள் வேற்றுமையாகிறது அவசியமானதினால் சிருஷ்டிகள் அளவில் **அவைகளுக்குள்ள சம்பந்தத்தைக் கொண்டானாலும் சரி. அஸ்மாக்களுக்கு வேற்றுமை – அவை வேறாக இருப்பது தரிபடுவது கொண்டேயல்லாது உண்டாகாது.** (என்பது) எப்படி இது வேறொரு கமாலாக ஆகாதிருக்கும். ஏன் அது முதல் குறிப்பில் குறிப்பாக அஹதிய்யத்துடைய கவனிப்பில் ரூபமாகாதே.

**ஏன்? அஹதிய்யத்தில் அவை இரண்டளவிலும் பாதையில்லையே** – அதாவது: ஹகாயிகுகள் விபரமாக அலாதியாகிறதளவிலும், வேற்றுமையின் ஹுக்மு தரிபடுவதளவிலும் பாதையில்லையே. வஹ்தத்தோ அதில் நின்றும் சமீபமானதாக இருக்கும்.

**ஆகையினால் அஸ்மாயிய்யான கமால் வெளியாவது** தாத்து அதைக் கொண்டு கட்டுப்பட்டு இருக்கிறதை கொடுக்கும்படியான **வேறே ஒரு குறிப்பின் பேரிலும்** தாத்து அதைக் கொண்டு லட்சணம் பூண்டதாக வெளியாகும் படியான வேறே ஒரு **தஜல்லியின் - வெளிப்பாட்டின் பேரிலும் தரிபட்டது.**

அஸ்மாயிய்யான கமாலோ தாத்துக்கு தேடப்பட்டதாகும். ஆகையினால் தனது தாத்திய்யான கமாலைக் கொண்டு வெளியானது போல் **அதைக் கொண்டு வெளியானான்.**

அதெப்படியென்றால், அது மறைந்திருக்கிற விதத்தில் கஷ்டத்திற்கு ஒப்பாகிறது. ஆகவே முதலாவதை விட்டும் **இந்த** இரண்டாவது **வெளிப்பாடு** நம்மில் ஒருவர் அவருள்ளிருக்கும் உஷ்ணத்தை வெளியில் வெளியாக்கும் போது **சுவாசம் பறியும் விதமாக வெளியானது.**

**ஆகவே** இலாஹிய்யான அஸ்மாக்கள், சிபத்துக்கள் விபரமாக ஆவதாகிறது பிரிந்து அலாதியாவதற்காக வேண்டி அந்த அஸ்மாக்களளவில் சேர்க்கப்படும்படியான ஹகாயிகுகள் விபரமாகிறதன் பேரில் தரிபடுகிறதாவுமிருக்க அவைகளை –(அஸ்மாக்களை) பொதுப்படையான சமூகத்தை விட்டும் வெளிப்படுத்தப்பட்டபோது, கௌனிய்யாவான ஹகாயிகுகள் பிரிந்து அலாதியாவது போல் குறிப்பானதினால் **அதைக் கொண்டு இலாஹிய்யான ஹகாயிகுகளும்,**

**இன்னும்** முந்திய தஜல்லியிலும், அதற்கு முந்திய இத்லாக்குடைய மற்தபாவிலும், ஷுவூன தாத்திய்யாவாக இருந்ததின் பின்னால் கௌனிய்யான (ஹகீகத்)தும், இன்னும் இலாஹிய்யான ஹகாயிகுகளையும், கௌனிய்யான ஹகாயிகுகளையும் சேகரமாக்கிய **இன்ஸானிய்யான ( ஹகீகத்)தும்,**

**இன்னும்** அஸ்மாயிய்யான காரணங்களளவில் போய் முடிவடையும் வரையிலும் காரணங்களுக்கும் காரியங்களுக்குமிடையில் உண்டான **வரிசைக் கிரமமப்படி விபரமாகிற போக்கிலுள்ள சில்லறையான** (ஹகாயிகு) **அடங்கலும்** இலாஹிய்யான அஸ்மாக்கள் வெளியாவதைக் கொண்டு இந்த சமூகத்தில் **பிரிந்து அலாதியானது**.

**இந்த சுவாசமாகிறது** தாத்தை அஸ்மாக்களும் சிபாத்துகளும், இன்னும் அதைப் போலNவு கௌனிய்யான ஹகாயிகுகளும், இன்ஸானிய்யான ஹகீகத்தும் மறைக்கிறதைக் கவனித்து, சூரியன் பேரில் ஒரு விதத்தில் திரையாக ஆகக் கூடிய **ஒரு லேசான மேகத்தைப் போல் இருக்கிறது.**

**அது அஹதிய்யத்து என்ற சூரியனை மறைத்துக் கொண்டிருக்கிறது.** ஏன்? அது (மேகம்) வெளியானபின் கலப்பற்ற அஹதிய்யத்து வெளியாகாதே.

**இதனளவில்தான்** - அதாவது லேசான மேகத்தைப் போன்றிருக்கிறதற்காகத்தான் **நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சயிக்கினை செய்து அவர்களிடம் சிருஷ்டிகளைப் படைக்குமுன் நம்முடைய றப்பு – போஷகன் எங்கேயிருந்தான் என்று.**

அதாவது:- இலாஹிய்யான அஸ்மாக்களுடைய ஸூரத்துகளையும், அதனுடைய ஆதாறு – குணபாடுகளையும் படைக்கும் முன் அவன் போஷகனென்று வெளியானது எந்த மற்தபாவிலென்று **கேட்கப்பட்டபோது, 'மேலும் ஆகாயமில்லாத கீழும் ஆகாயமில்லாத ஒரு அமாவில் இருந்தான் என்று சொன்னார்கள்.**

அதுவாகிறது:- இலாஹிய்யத்தான அஸ்மாக்கள் கௌனிய்யான ஹகாயிகுகள், இன்ஸானிய்யான ஹகீகத்து என்ற லேசான மேகமாகும்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (மேலும், கீழும் ஆகாயமில்லாத என்று) **ஆகாயத்தை மறுத்தார்கள். ஏன்? பழக்கமான மேகத்தை** கருதியதாக சந்தேகப்படாதிருப்பதற்காக.

ஏன்? அது (பழக்கமான மேகம்) மேலுள்ள ஆகாயத்தை விட்டும், கீழுள்ள ஆகாயத்தை விட்டும் ஒழியாதே.

இந்த மற்தபாவாகிறது:- அதாவது இலாஹிய்யத்தான ஹகாயிகுகளும், கௌனிய்யத்தான ஹகாயிகுகளும், இன்ஸானிய்யான ஹகீகத்தும், விபரமாக பிரியக் கூடிய மற்தபாவாகிறது, தாத்து அதன் அஸ்மாக்களைக் கொண்டு கட்டுப்பட்டதாக இருக்கிறதைக் கவனித்து,

**இதற்கு இரண்டாவது குறிப்பு என்றும், இன்னும்** முந்திய குறிப்பு முந்திய தஜல்லியில் நின்றும் இரண்டாவது மற்தபாவில் அஸ்மாக்களைக் கொண்டு கட்டுப்பட்டதாக அதன் தாத்துக்கு வெளியானதைக் கவனித்து இதற்கு இரண்டாவது –**தஜல்லி என்றும், இன்னும்,**

அது அஸ்மா ஸிபாத்துடைய ஆலத்தின் பேரிலும் அதனளவில் சேர்க்கப்படும்படியான கௌனிய்யான ஹகாயிகுகள் பேரிலும், இன்ஸானிய்யான ஹகீகத்தின் பேரிலும் பொதிந்திருப்பதினால் இதற்கு, **உலூஹிய்யத்துடைய மற்தபா என்றும், இன்னும்**

சகல வஸ்துக்களுடைய ஹயாத்தும்-ஜீவனும் இதில் நின்றுமே ஒலித்து வருவதினால் **இதற்கு பலக்குல் ஹயாத்- ஜீவ வானம் என்றும் சொல்லப்படும்.**

**இன்னும் இதற்கு 'பே' எனும் அட்சரம் என்றும் சொல்லப்படும். ஏன்?** 'பே' யாகிறது 'ஹிஜா' உடைய அட்சரங்களிலிருந்தும், 'அப்ஜத்'துடைய அட்சரங்களிலிருந்தும், அலிபுக்கு இரண்டாவதாக இருப்பதைப் போல் இந்த மற்தபாவும், மற்ற மற்தபாக்களில் இரண்டாவதான மற்தபாவாக இருப்பதற்காக.

**இந்த மூல நூலாசிரியர்** அஷ்ஷெய்குல் முஹக்கிகு ஷம்ஷூத்தீன் முஹம்மத் ஷீரீன் இப்னு இஸ்ஸுத்தீனுல் மஃரிபி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் **சொன்னார்கள்,**

**நான் இதை வரைந்த இரவில் கனவில் கண்டேன் ஒரு மனிதர் ஒரு பெரியாரைத் தொட்டும் 'பே' எனும் அட்சரம் இல்லையானால்** அதாவது:- அஸ்மா சிபாத்துகளின் பேரில் பொதிந்த இரண்டாவது குறிப்பின் ஹகீகத்து இல்லையானால் **சிருஷ்டிகள் சிருஷ்டி கர்த்தாவை** அதாவது:- அவனுடைய தாத்தை **நிதர்சனமாக பார்த்திருப்பார்கள் என்று அவர் சொன்னதாக எடுத்துரைத்தது போலிருந்தது.**

**ஏன்?** அவனுக்கும், அவர்களுக்குமிடையில்காரணமான வாஸிதா - இடையிலான பொருள் இல்லையே!

ஏன்? 'பே' என்பது அவர்களின் - ஆரிபீன்களின் பரிபாஷையில், அரபி பாஷையில் நெருக்கத்திற்கு காரணமான 'பே' யில் நின்றும் இரவலாக எடுக்கப்பட்டதாகும்.

**காரணம்** திரையென்று நாம் சொன்னதெல்லாம், ஏன்? அது **காரியத்திற்கு** அதில் எதார்த்தமாக குணபாடு செய்கிறவனை பார்ப்பதை விட்டும் **திரையாக இருக்கும்.**

அது அதில் குணபாடு செய்கிறவனுக்கு மள்ஹராக – வெளியாகும்தானமாக இருப்பதாகிறது, அது திரையாக ஆவதை விட்டும் விலக்காது. ஏன்? அதுவாகிறது:-

**மத்லூலுக்கும், ஸானிவுக்கும் - அறிவிக்கப்பட்டவைக்கும், செய்தவனுக்கும், திரையான தலீலையும், ஸூன்வுவையும் - அறிவிக்கக் கூடியதையும், செயலையும் போல். காரணம் தலீல், ஸூன்வு எல்லாமே வேறு ஒரு விதத்தில் அவனைப் பற்றி,**

அதாவது – காரணத்தைக் காரணமாக ஆக்கியவன் அறிவிக்கப்பட்டவன், செய்தவன் ஒவ்வொருவனைப் பற்றியும், **அறிவிக்கக் கூடியதாக இருந்தாலும் சரி,** ஏன்?

காரணமாகிறது, புதிதானவைகளடங்கலும் அதைப் புதிதாக உண்டாக்கியவன் அளவில் தேவையாகிக் கொண்டிருப்பதின் பேரில் அறிவிக்கிறது.

ஆகவே அதுவும் புதிதாக இருப்பதினால் அதைக் காரணமாக ஆக்கியவனளவில் அறிவிக்கிறது.

இன்னும் தலீலும், ஸுன்வும் (மத்லூலின் பேரிலும் ஸானிவுவின் பேரிலும்) அறிவிக்கிறது தெரிந்த விஷயம்தான்.

காரணமாகிறது (அதை) காரணமாக ஆக்கியவனைப் பற்றி அறிவிக்கிறதை விபரிக்கிறதற்காகத்தான் **'பே' யைக் கொண்டு** எதார்த்தமான **உஜூது – மெய்ப்பொருள்** சிருஷ்டிகளின் அஃயான்களில் **வெளியானது என்றும்,**

ஏன்? அது வெளியாகிறது இலாஹிய்யான அஸ்மாக்களைக் கொண்டுதானே. அவனுடைய உஜூதாகிறது, அதுவே அஃயானில் வெளியானதாகவும், வெளியான ஸூரத்துகள் ஸூரத்துடையவனின் மிதால் - பிரதிபிம்பமாகவும், ஆனால் அது இடத்தைக் கவனிப்பது கொண்N;டயல்லாது அவனை விட்டும் பிரியாது.

இதற்காகத்தான் **இன்னும் நுக்தாவைக் கொண்டு** அதாவது:- மாஹிய்யாத்து அல்லது இம்கான் எனும் நுக்'தாவை கொண்டு **ஆபிது, மஃபூதை விட்டும் - வணங்குகிறவன், வணங்கப்பட்டவனை விட்டும் அலாதியாகப் பிரிந்தான். அதாவது:- எதார்த்தமான உஜூது சிருஷ்டிகளில் அதற்கு முதலாவது மள்ஹராக இருக்கிற இரண்டாவது மற்தபாவைக் கொண்டு.**

அதாவது:- இரண்டாவத குறிப்பிலும் இரண்டாவது தஜல்லியிலும் வெளியான 'பே' என்று சொல்லப்பட்ட அஸ்மா சிபாத்துகளின் காரணத்தைக் கொண்டு.

**வெளியானது என்றும்,** ஏன்? அதுதானே காரணங்களெல்லாம் மீளுந்தானமாக இருக்கும். அது தாத்தின் பேரில் திரையாக இருந்ததைப் போல் அதைப் பற்றி அறிவிக்கக் கூடியதாகவும் ஆகிவிட்டது.

ஏன்? அதுவாகிறது, அதாவது:- அதனுடைய (உஜூதுடைய) முந்தின குறிப்பிற்கு முதலாவது மள்ஹராக இருக்கும்.

**அல்லது** சிருஷ்டிகளில் வெளிப்பாடு அஸ்மாக்களுக்குத்தான், எதார்த்த மெய்ப் பொருளுக்கல்ல என்று வைத்து அந்த வாக்கியத்தின் விரிவுரையில் **சிருஷ்டிகளை 'பே' யைக் கொண்டு** அதாவது:- அஸ்மாக்கள் அதில் வெளியாவது கொண்டு **உண்டாக்கப்பட்டது என்றும் சொல்லப்படும்.**

பின்னர், மூல நூலாசிரியர் அவர்கள் இரண்டாவது தஜல்லி, முந்தியதற்கு மள்ஹராக ஆனவிதத்தின் அளவில் சயிக்கினை செய்து அதுவாகிறது, இது (இரண்டாவது தஜல்லி) முந்தின தஜல்லி தன் உருவத்திலேயே உருவெடுத்திருக்கிறது. அதனாலேயே இதனுடைய வட்டம் முந்திய குறிப்பில் வட்டம் பொதிந்ததின் பேரில் பொதிந்ததாக ஆனதென்று சயிக்கினை செய்து சொன்னார்கள்.

**இந்த இரண்டாவது குறிப்பானது அதூன் சுவாச தஜல்லியாகும். அது முந்திய குறிப்பில் நின்றும் இனத்தைப் போன்று கிளம்பினதாக ஆனபோது,** அது இரண்டு வில்லின் பேரிலும், ஒரு கோட்டின் பேரிலும் பொதிந்திருப்பதில் தாய் தகப்பனின் ஸுரத்தில் பிள்ளை வெளியாவது போல் **அதன் உடைய ஸுரத்திலேயே வெளியானது.**

மூல நூலாசிரியர் 'சுவாச தஜல்லி' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏன்? அது அவனில் நின்றும் வெளியாவது போலிருக்கிறதென்று சயிக்கினை செய்வதற்காக!

**ஆகையினால் அது** முந்திய குறிப்பு **வாஹிதிய்யத்தின் பேரிலும் அஹதிய்யத்தின் பேரிலும் வஹ்தத்தின் பேரிலும் பொதிந்திருப்பதைப் போல் இந்த** இரண்டாவது **குறிப்பும் வஹ்தத்தின் பேரிலும் கத்றத்தின் பேரிலும் ஒருமையின் பேரிலும் பன்மையின் பேரிலும் இன்னும் ஒரு** விதத்தில் அவை இரண்டிற்கிடையில் **பிரிக்கக் கூடியதும் மற்றொரு** விதத்தில் அவையிரண்டையும் **சேகரித்ததுமான பர்ஜகின் பேரிலும் பொதிந்து கொண்டது.**

இதனுடைய வஹ்தத்தாகிறது, அதனுடைய அஹதிய்யத்திற்கு எதுகையாகவும், இதனுடைய கத்ரத்தாகிறது அதனுடைய வாஹிதிய்யத்திற்கு எதுகையாகவும், இதனுடைய பற்ஜகாகிறது அதனுடைய பற்ஜகுக்கு –அதாவது:- வஹ்தத்திற்கு எதுகையாகவும் இருக்கும்.

**அதனுடைய** – அதாவது:- இரண்டாவது குறிப்பினுடைய **வஹ்தத்திற்கு ளாஹிருல் உஜூது வெளி உஜூது என்று சொல்லப்படும்.**

ஏன்? அது அஸ்மாக்களைக் கொண்டு வெளியாகிற கட்டுப்பாட்டுடன் முந்தின குறிப்பின் அஹதிய்யத்தில் எடுக்கப்பட்ட உஜூதுதானே.

**அது உஜுபு எனும் லட்சணத்தைக் கொண்டு சொந்தமாக்கப்பட்டதுவாகும்**. ஏன்?

அஹதிய்யத்தில் இம்கானைக் கொண்டும், பற்ஜகைக் கொண்டும் லட்சணம் பூண்டதான ஒருi லட்சணமும் இல்லை. ஏன்? அது இரண்டு லட்சணத்திற்கிடையில் சேகரமாக்கிக் கொண்டிருப்பதினால் அவை இரண்டில் ஒன்றைக் கொண்டு சொந்தமானதாக ஆகாது.

**இன்னும் அதனுடைய கத்ரத்திற்கு** அதாவது இரண்டாவது குறிப்புடைய கத்ரத்திற்கு **ளாஹிருல் இல்மி – வெளி அறிவு என்றும் சொல்லப்படும்**. ஏன்?

அது முந்தின குறிப்பின் வாஹிதிய்த்தில் பொதுப்படையானதை வெளியாகிற கட்டுப்பாட்டுடன் எடுக்கப்பட்ட அறிவுதானே! ஏன்?

இது விபரத்துடைய சமூகம்தானே!

ஆகவே அதனுடைய பன்மையாகிறது, **அது** தாத்தைக் கொண்டு விதர்ப்பமான **சிருஷ்டியான ஹகாயிகுகளைக் கொண்டு கொழுகி இருக்கிற புறத்தினால்** இதற்காகவே **அது இம்கானுக்கு மல்ஸூமாகும் - இம்கான் அவசியமாக்கப்பட்டதுவாகும்.** ஏன்?

மும்கின் என்பது இல்முடைய சமூகத்தில் தரிபாடாக இருக்கிற நிலைமையில் சிருஷ்டிகளான வஸ்துக்களின் ஹகாயிகுகள் தானே!

அதுவல்ல என்றால், அது பிறரைக் கொண்டு வாஜிபானதாக – அவசியமானதாக இருக்கும். அல்லது பிறரைக் கொண்டு மும்தனிவு – அசாத்தியமானதாக இருக்கும்.

முந்தின குறிப்பில் நின்றுமுள்ள **அஹதிய்யத்திற்கு ஸூரத்தாகிய** விதத்தில் இருக்கிற **இந்த வெளி உஜூதுக்கு அது இதில் ஊடுருவியிருப்பதினால்** அதாவது:- அஹதிய்யத்து இந்த வஹ்தத்துடைய வில்லில் வெளியாகியிருப்பதினால் **வஹ்தத்து ஹகீகிய்யா – எதார்த்தமான ஒருமை உண்டு.**

இதை இப்படி வெளியாகியிருப்பதைக் கவனித்து எல்லாவற்றிற்கும் வெளி உஜூது என்று சொல்லப்படும்.

**இன்னும் அதற்கு** – வஹ்தத்தாகிய வெளி உஜூதிற்கு, அதில் தாத்து அஸ்மாக்களைக் கொண்டு கெனிய்யத்தான ஹகாயிகுகள் அளவிலும், இன்ஸானிய்யத்தான ஹகீகத்தளவிலும் சம்பந்தம் கொண்டிருப்பதை கவனிப்பது கொண்டு இந்த வஹ்தத்து அது அஹதிய்யத்திற்கு ஸூறத்தாக இருந்தாலும் சரி, அது சிபத்துடைய இடமாக இருப்பதினால் அது முந்தின குறிப்பின் வாஹிதிய்யத்திற்கு ஒப்பாகிறதை விட்டும் ஒழியாது. அதுவாகிறது:-

**அதில்** - அந்த வஹ்தத்துடைய வில்லில் **வாஹிதிய்யத்து ஊடுருவியதினால்** - வெளியானதினால் மேலும் **கத்றத்து நிஸபிய்யாவும் - சம்பந்தத்தினாலான பன்மையும் உண்டு.**

அதனுடைய (அந்த ளாஹிருல் உஜூதின் வில்லுடைய ) வஹ்தத்து அஹதிய்யத்திற்கு மள்ஹராக இருப்பது இந்த கத்றத்தை மறுக்காது. ஏன்?

**அதனுடைய வஹ்தத்தாகிறது:-** அதாவது – ளாஹிருல் உஜூதுடைய வில்லின் வஹ்தத்தாகிறது, அது முந்தின குறிப்பில் நின்றுமுள்ள அஹதிய்யத்திற்கு மள்ஹறாக

இருந்தாலும் சரி. அது அஹதிய்யத்து பொதிந்த **ஷூவூனு குல்லியாக்களின் பேரிலும்** பொதிந்ததாகும். ஆனாலும் அவைகள் அங்கே அலாதியாக பிரியவில்லை.

அதனால் அவைகளுக்கு அஃயான தாபிதா என்ற பெயரும் சொல்லப்படவில்லை.

இன்னும் இந்த வஹ்தத்தாகிறது, உஜூது, இல்மு, நூர், ஷுஹூதுகளாகிய **அசலிய்யத்தான கவனிப்புகளின் பேரிலும் பொதிந்து கொண்டதாகவுமிருக்கும்.**

அவைகள் முதல் குறிப்பின் அஹதிய்யத்தில் குறிப்பாகாமல் இருந்தாலும் சரி. என்றாலும் அவைகள் அதில் மறைந்ததாக இருந்தன. இந்த சமூகமாகிறது, அதில் மூடலாக உள்ளவைகளுக்கெல்லாம் விபரமான சமூகமாக இருப்பதினால் அவைகள் இதில் வெளியாயின.

ஆனால் இது வாஹிதிய்யத்திற்கும் கூட, மள்ஹராக இருப்பதைக் கவனித்து அவைகளை இதனளவில் சேர்க்கப்பட்டது. ஏன்? வாஹிதிய்யத்தாகிறது, அசலில் விபரத்திற்கு உற்பத்தியிடமாக இருக்கிறதே.

**இன்னும் அதனுடைய** – அந்த ளாஹிருல் உஜூதின் வில்லுடைய **கத்றத்தாகிறது அஸ்மா, ஸிபாத்துகளின் உற்பத்தியிடமாக இருக்கும்.**

அதாவது:- அவை விபரமாகப் பிரிவதற்கு ஆரம்ப இடமாகும். ஏன்? கலப்பற்ற வஹ்தத்தாகிறது பிரிவினையை மறுக்குமே.

இன்னும் இரண்டாவது குறிப்பிலுள்ள ளாஹிரான இல்முக்கு – வெளியான அறிவுக்கு ளாஹிரான உஜூதுக்கு – வெளியான உஜூதுக்கு உள்ளது போன்று வஹ்தத்தும், கத்றத்தும் உண்டு.

ஆனால் அவை இரண்டும் ஹகீகி, நிஸபி – எதார்த்தமானது, கவனிப்பினாலானது என்பதில் மாற்றமாக இருக்கும்.

எனவே முதல் குறிப்பிலுள்ள **வாஹிதிய்யத்திற்கு ஸூரத்தாகிய** இரண்டாம் குறிப்பிலுள்ள **இந்த ளாஹிரான இல்முக்கு – வெளியான அறிவுக்கு அது இதில் ஊடுருவியிருப்பதினால் கத்றத்து ஹகீகிய்யாகவும் -எதார்த்தமான பன்மையும் உண்டு.**

கத்றத்தாகிறது வாஹிதிய்யத்தில் ஹகீகிய்யா அல்லாததாக இருந்தாலும் சரி, ஏன்? அது பொதுப்படையான சமூகமாகும். அது விபரமாக ஆனதும் ஹகீகிய்யாவாக – எதார்த்தமான பன்மையாக ஆகிவிட்டது.

**இன்னும் இதில்** முதல் குறிப்பிலுள்ள **அஹதிய்யத்துடைய குணபாட்டினால் - அதாவது:-** இதில் அது ஒரு விதத்தில் வெளியாகிறதினால் ஏன்? இது வாஹிதிய்யத்திற்கு மள்ஹராக வெளியாகும் காரணமாக ஆனபோது, இது அஹதிய்யத்தின் பேரிலேயும் பொதிந்த வஹ்தத்தை தன்னுள் அடக்கிக் கொண்டதுவாகும்.

அதனால் இதில், **வஹ்தத்து நிஸபிய்யா மஜ்முயிய்யாவும் - சேர்த்து பார்ப்பதினாலான சேகரமாக்கப்பட்ட ஒருமையும் உண்டு.**

அதாவது:- பிந்திய மற்தபாக்களளவல் சேர்த்துப் பார்ப்பது கொண்டு சேர்த்து பார்ப்பதினால் ஆனதும், அதனளவில் நோட்டமிட்டால் எல்லாம் சேகரமாக்கப்பட்;டதானதும், அதாவது:- இதை 'வாஹிது –ஒன்றானது' என்று எசால்லப்படும் விதத்தில் அந்த மொத்தத்தையும் இதில் ஆக்கினதினால் எல்லாவற்றையும் சேகரமாக்கப்பட்டதுமான ஒருமையும் உண்டு.

இல்மிய்யான **இந்த கத்றத்திற்கு 'அ:ஃயானுல் மும்கினாத்' என்று சொல்லப்படும். இது தான் ஹகாயிகுல் கௌனிய்யாவாகும். – உலகாதி வஸ்துக்களின் அகமியங்களாகும்.**

ஏன்? அவைகள் தன்னிலேயே விதர்ப்பமானவைகளாகும்.

**ஆகையினால் இதற்காக வேண்டி** அதாவது:- எதார்த்தமான பன்மைகளுக்காக வேண்டி எதார்த்தமான பன்மையுண்டு. அஸ்மாக்களுடைய பன்மையோ அவைகள் விதர்ப்பமாகுவது இல்லாத்ததினால் அது இ:ஃதிபாரியாகும்- கவனிப்பினாலானதுவாகும்.

இல்மிய்யா **இந்த வஹ்தத்திற்கு ஹளரத்துல் இற்திஸாம் - பதிவு சமூகம் என்றும்** சொல்லப்படும். ஏன்? இதில் அ:ஃயான தாபிதாக்கள் பதிவாகிறதினால் அவைகள் மிகுதமாக இருந்த போதிலும், அவைகளுக்கு பல ஸ்தலங்களில்லை. எனினும், அவைகளுடைய ஸ்தலம் ஒன்றே ஒன்றுதான். அதுதான் இல்மு இலாஹி –அல்லாஹ்வின் அறிவு அவனுடைய ஸிபத்துகளில் எண்ணிக்கையில்லை – பல அறிவு இல்லை.

இதனாலேயே அவன் ஒரு அறிவைக் கொண்டே, அறியப்படுபவைகள் அனைத்தையும் அறிவான் என்பதும், ஒரு பேச்சைக் கொண்டே கருத்துகள் அனைத்தையும் தொட்டும் பேசுவான் என்பதும் உண்மையானதாகும்.

**இன்னும்** இதற்கு **ஆலமுல் மஆனி – கருத்துக்களின் உலகம் என்றும் சொல்லப்படும்.** ஏன்? அ:ஃயான தாபித்தாக்களாகிறது வஸ்துக்களின் கருத்துகள் தானே.

இன்னும் குர்ஆனில் 'நூன்' என்று சயிக்கினை செய்யப்பட்ட பஹ்ருல் இம்கான் -இம்கானுடைய சமுத்திரம் என்றும், சொல்லப்படும். ஏன்?

தீhமானம் முடிவு இல்லாத மும்கினாத்துகளெல்லாம் - சிருஷ்டிகளெல்லாம் அதில் சேகரமாகி இருக்கிறதற்காக. இதற்கு முன்னால் உள்ளதாகிறது, ஆலமுல் உஜூபுத் தாத்திய்யி தனக்காகவே இரு:ப்பது அவசியமான உலகமாகும்.

இதற்கு பின்னாலுள்ளதாகிறது, ஒன்றிருக்கில் வாஜிபுன் பில் ஙைரியாக – மற்றதைக் கொண்டு இருப்பு அவசியமானதுவாக, அல்லது மும்தனிவுன் பில் ஙைரியாக – மற்றதைக் கொண்டு இருப்பு விலக்கானதுவாக இருக்கும்.

இம்கான் உடைய சமுத்தரமாகிறது:- அல்லாஹ் தஆலா

نٓ وَالْقَلَمِ وَمَا يَسْطُرُوْنَ

நூன் வல் கலமி யஸ்துறூன் நூனின் - பேரிலும், கலமின் பேரிலும், அவர்கள் எழுதுகிறதின் பேரிலும், சத்தியமாக என்று சொல்கிறான். ஏன்?

அது தன்னில் மும்கினாகும் - இருப்பும், இல்லாமையும், ஆமானதுவாகும். அது குன் - உண்டாகு எனும் ஏவலினால் உண்டானது. அது (அந்த ஏவல்) உண்டானதுக்குத் தான் கௌனு – உலகு என்று சொல்லப்படும்.

நூன் என்பது அரபி பாஷையில் அதற்கு (குன் என்ற ஏவலுக்கு) அவசியமானதில் நின்றும் உள்ளதாகும்.

**இன்னும் ளாஹிருல் உஜூதுக்;கும் ளாஹிருல் இல்முக்கும் இடையில் பிரிக்கக் கூடிய பற்ஜக் ஆகிறது** அதாவது:- முதலாவது குறிப்பின் வஹ்தத்துக்கு மிதாலாகிய – நிழலாகிய இரண்டாவது குறிப்பின் பற்ஜகாகிறது அதுதான் அங்கே வஹ்தத்து, அஹதிய்யத்திற்கும், வாஹிதிய்யத்திற்குமிடையில் பிரித்ததுபோல் இங்கு ளாஹிருல் உஜூதுக்கும் ளாஹிருல் இல்முக்குமிடையில் பிரிக்கும்படியான கோடாக இருக்கும்.

அது தான் ஹகீகத்துல் இன்ஸானிய்யாவாகும். மானுஷீக அந்தரங்கமாகும்.

ஏன்? அது இலாஹிய்யத்தான அஸ்மாக்களுக்கும் கௌனிய்யத்தான அஸ்மாக்களை சேகரமாக்கிக் கொண்டதாக இருப்பதற்காக, இது ஹகீகத்துல் முஹம்மதிய்யாவாகிய பெரிய பற்ஜகை விட்டும் பிந்திருப்பதற்கான காரணத்தை (நூலாசிரியர்) கூறியிருக்கிறார்கள்.

இந்த மற்தபா அதாவது இரண்டாவது குறிப்பின் மற்தபா சரியாக விளக்கமாகியதற்காகத்தான், நீ பார்ப்பது போல் வேறொரு வட்டத்தையும் உண்டாக்கப்படுகிறது.



நாம் சொல்கிறோம், **ளாஹிருல் உஜூதின் பேரிலும், ளாஹிருல் இல்மின் பேரிலும், ஹகீகத்துல் இன்ஸானிய்யாவின் பேரிலும், பொதிந்த** இரண்டாவது குறிப்பின் **இரண்டாவது வட்டமாகிறது, அதுவும்** முந்திய வட்டத்தைப் போல் **இரண்டு வில்லுக்கும் இடையில்** நடுமத்திப் புள்ளியின் பேரில் **சென்று** வட்டத்தின் இரு பாகத்தளவிலும் **போகிப் பிரிக்கிற ஒரு கோட்டுடன் இரண்டு வில்லின் பேரில் பங்காகிறது**.

**அவை இரண்டில் ஒன்று,** இலாஹிய்யத்தான அஸ்மாக்களைப் பொதிந்த **ளாஹிருல் உஜூதின்** வில்லும் மற்றது, கௌனிய்யாவான அஸ்மாக்களின் பேரில் பொதிந்த **ளாஹிருல் இல்மின் வில்லுமாகும்**.

**அவை இரண்டிற்குமடையில் செல்லும்படியான கோடாகிறது,** அது தான் இரண்டாவது பற்ஜக் என்று சொல்லப்பட்ட **ஹகீகத்துல் இன்ஸானிய்யாவாக இருக்கும்**.

ஏன் அது ஹகீகத்துல் முஹம்மதிய்யாவென்று சொல்லப்பட்ட **முந்திய பற்ஜகுக்கு ஸூரத்தாக இருக்கிறதே**.

**முந்தியதாகிறது,** அதாவது: ளாஹிருல் உஜூதுடைய வில்லாகிறது **அதனுடைய நிஸபிய்யான கத்ரத்தை கவனிப்பது கொண்டு – சம்பந்தத்தினாலான பன்மையைக் கவனிப்பது கொண்டு இலாஹிய்யான அஸ்மாக்களுக்கு உற்பத்தியிடமாக** – அவை பிரிவதற்கு ஆரம்ப இடமாக **ஆனபோது** கௌனிய்யான ஹகாயிகுகளின் எண்ணிக்கையின் படி **அதில் இருபத்தியெட்டு இலாஹிய்யான மொத்தமான இஸ்முகளை வைக்கப்பட்டது**.

ஏன் சில்லறைகளுக்கு மட்டில்லையே.

**இன்னும் இரண்டாவதானது,** அதாவது:- ளாஹிருல் இல்முடைய வில்லாகிறது **ஹகீகிய்யான கத்ரத்தை – எதார்த்தமான பன்மையை கவனிப்பது கொண்டு கௌனிய்யான ஹகாயிகுகளுக்கு உற்பத்தியிடமாக ஆனபோது,**

அதாவது:- அவை பிரிவதற்கு ஆரம்ப இடமாக ஆனபோது, அரபி பாஷையில் மொழியப்பட்ட அட்சரங்களின் எண்ணிக்கையின்படி **அதில் இருபத்தியெட்டு கௌனிய்யான மொத்தமான இஸ்முகளை வைக்கப்பட்டது**. ஏன்?

கௌனிய்யான ஹகாயிகுகளானது அவற்றிற்கு ஹுறூபுன் ஆலியாத்து – உயர்த்தியான அட்சரங்கள் என்று சொல்லப்படுகிறதே!

மொழியப்பட்ட அட்சரங்களாகிறது அதற்கு மள்ஹர்களாகும் - வெளியாகும் தானங்களாகும். ஆகையினால் ளாஹிருல் இல்முடைய வில்லிலுள்ள ஒவ்வொரு இஸ்மையும், ளாஹிருல் உஜுடைய வில்லிலுள்ள இஸ்முக்கும், அவை இரண்டிற்கும் இடையில் அதிகமான நேர்ப்பாடு இருப்பதினால் இன்ஷாஅல்லாஹ் பின்னால் வருவதைப் போல் நேராக வைக்கப்பட்டது.

**இன்னும் ஹகீகத்துல் இன்ஸானிய்யாவாகிறது:-** அது பற்ஜகாக இருப்பதைக் கவனித்து அது **இரண்டு வில்லுகளையும் சேகரமாக்கிக் கொண்டதாக ஆனபோது அது ஜ.்.மி.்.வான இஸ்முக்கு சகலத்தையும் சேகரித்துக் கொண்ட இஸ்முக்கு** அதாவது:- அல்லாஹ் எனும் இஸ்முக்கு **மள்ஹராக ஆகிவிட்டது.**

ஆகையினால் அதையும் ளாஹிருல் இல்முடைய வில்லிலேயே வைக்கப்பட்டது.

மேலும் அவன் - மனிதன் எட்டிக் கொள்ளக் கூடியதையெல்லாம் எட்டிக் கொண்டானேயானாலும் சரி கௌனிய்யான ஹகாயிகுகளின் எல்லையை விட்டும் அவன் கடக்க மாட்டான்.

இன்னும் அவன் அல்லாஹ்வில் பனாவாகி அவனைக் கொண்டே பகாவானவனாக – தரிபட்டவனாக ஆனாலும் சரி, அவன் இலாஹிய்யான பதவியை எட்டிக் கொள்ளவும் மாட்டான் என்பதின் பேரிலும் இதில் அறிவிப்பு உண்டு, சில மடையர்கள் சந்தேகிப்பதற்கு மாற்றமாக.

அது எல்லாவற்றையும் சேகரமாக்கிக் கொண்டு இருப்பதானது:- அது ளாஹிருல் இல்மின் வில்லைக் கொண்டு சொந்தமாகுவதை மறுக்காது.

ஏன் அதற்கு நிகரானது ஒன்று உண்டு. அதாகிறது:- ரஹ்மான் எனும் இஸ்மாகிறது அது ளாஹிருல் உஜுதின் வி;ல்லைக் கொண்டே சொந்தமானதாக இருப்பதுடன் இலாஹிய்யத்தான ஹகாயிகுகள் (அதாவது அஸ்மாக்கள்) கௌனிய்யத்தான ஹகாயிகுகள் (அதாவது அ.்.யான தாபிதா) **எல்லாமுமே வெளியானது, நப்ஸு ற்றஹ்மானிய்யில் - றஹ்மானின் சுவாசத்தில் நின்றுமே தானே.**

அ(ப்படி ளாஹிருல் உஜூதுடைய வில்லைக் கொண்டு சொந்தமான) தாகிறது, ஏன்? ரஹ்மான் என்ற இஸ்மு அது முந்தி அலாதியாகி பிரியததைக் கவனிப்பது கொண்டு தனக்கும், மற்ற அஸ்மாக்களுக்கும், அஃயானுகளுக்கும் அலாதியாக பிரிவதைக் கொண்டு கிருபை செய்தானே!

இன்னும் நப்ஸுற் றஹ்மானியில் நின்றும் வெளியானது எல்லாமுமே ஆலமுல் கௌனில் நின்றுமுள்ளதாக சிருஷ்டி உலகில் நின்றுமுள்ளதாக இருப்பது அவசியமில்லை. மிகுதம் பேர் சந்தேகிப்பது போல்.

**எனினும் இந்த கௌனிய்யான ஹர்புகள்** அதாவது:- சிருஷ்டிகளின் ஹகாயிகுகள் **அதில் நின்றும் வெளியாவதற்கு ஆலம்** என்றும் சொல்லப்படும்.

இன்னும் வெளியாவதற்கு முன் அது ஆலத்தில் நின்றுமுள்ளதில்லை. ஏன்? அது ஆலத்தில் நின்றுமாக ஆனதெல்லாம் அதற்கு **மாஸிவல்லாஹ் - அல்லாஹ் அல்லாதவை** என்று பெயர் வைக்கப்பட்டதின் பின்னால் தான்.

இன்னும் அதுவாகிறது அவை புதிதாக உண்டானதை கவனித்து அதற்கு **காயினாத்து** என்ற பெயரைக் கொண்டும்,

**இன்னும்** அதில் உஜூது வெளியாகி இருப்பதைக் கவனித்து அதற்கு **மவ்ஜூதாத்து என்றும்** பெயர் **சொல்லப்படும்** பொழுதேயாகும்.

பின்னர், ரஹ்மானிய்யத்தாகிறது இந்த குறிப்பிற்கு முன்னால் அது குறிப்பானதாக – பிரிவினையானதாக இல்லாதிருக்கும் போது அதற்கு இந்த சுவாசம் எங்கிருந்து உண்டானதென்ற ஒரு கேள்வி வருமென்பதை மூல நூலாசிரியர் உணர்ந்ததும் சொல்கிறார்கள்:

'ரஹ்மான்' எனும் இஸ்மும், அதன் தொகுப்பில் நின்றுமுள்ளதாக இருக்கிற இலாஹிய்யான அஸ்மாக்களை வெளியாக்குகிற ரஹ்மானிய்யான **சுவாசம் ஹற்புகளோடு வெளியாகிறதானது.**

அதாவது கௌனிய்யான ஹகாயிகுகளோடு வெளியாகிறதானது ஏன்? அஸ்மாக்கள் (அவைகளுக்கிடையில்) பிரிவினையாகிறதாகிறது அவைகள் (அஸ்மாக்கள்) அவைகளோடு( கௌனிய்யான ஹகாயிகுகளோடு) சம்பந்தம் கொண்டிருப்பதைக் கவனிப்பது கொண்டுண்டானதாக ஆனபோது அவைகள் பிரிவினையாகிறது. அந்த சுவாசத்திற்கு பின்னால் வேறொரு சுவாசத்தைக் கொண்டு உண்டாகிறதில்லையே.

**சுவாசமிடுகிறவனின் உள்ளில் நின்றுமேயாகும்.** அதாவது:- அவைகளை தன்னுள் அடக்கிக் கொண்ட ஙைபுல் ஹுவிய்யத்தில் நின்றுமாகும். அவை அதில் கஷ்டத்தைப் போன்றிருந்தது. அதைத் தொட்டும் மூச்சு விட்டான். இந்த உள்ளானது அவைகளுக்கு ஸ்தலமாக இருக்கவில்லை.

எனினும் இ(ந்த உள்ளான) து அவனல்லாதவைகளுக்கு இடமாக இல்லாமல் எங்கிலும் அவைகளை தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிற ஹக்கு தானாகவேயாகும்.

நிச்சயமாக இலாஹிய்யான அஸ்மாக்களைப் பொதிந்த சுவாசமும் இன்னும் கௌனிய்யான ஹர்புகளும் - அட்சரங்களும் உள்ளடங்கிய விதத்தில் அவனிலே இருந்தது.

எனினும் இந்த உள்ளடக்கம் குல்லு, ஜுஸ்வு – வியஷ்டி, சமஷ்டியை உள்ளடக்குவது போலவோ, ள்ர்பு மள்றூபை – பாத்திரம், பாத்திரத்திவுள்ளதை உள்ளடக்குவது போலவோ அல்ல. அவன் தானாகவே இருந்தன.

அது எப்படி போலென்றால் கண்ணாடியில் வெளியான ( தோற்றம்) உருவமானது. அதுகண்ணாடியில் வெளியாவதற்கு முன்னால் உருவமுடையவன் தானாகவே இருக்கம். அது கண்ணாடியில் வெளியாகுமானால் அது உருவம் உடையவனை விட்டும் நீங்காமலும் அவனில் நின்றும் கண்ணாடியளவில் பிரிந்து போகாமலும் அது வேறாக ஆகி விடுகிறது.

எனினும், அது அவனில் மறைந்து இருந்து பின்பு அவனில் வெளியானது போலிருக்கிறது.

**அவன் ளாஹிராக இருக்கிற விதத்தில்** அதாவது:- வஸ்துக்களின் ஹகாயிகுகளும், அவைகளின் உஜூதுகளும் அவன், தன் தாத்தில் வெளியானதின் பின்னால் அவைகளில் அவன் வெளியாவதைக் கொண்டு உண்டானது என்ற விதத்தில்,

**அவன் ஆகிராக பிந்தியவனாக இ:ருப்பது போல், அவன் பாத்தினாக இருக்கிற விதத்தில்,** அதாவது:- அவன் சுவாசத்திற்கும் ஹர்புகளுக்கும் பாத்தினாக இருக்கிற விதத்தில் மனிதன் கண்ணாடியிலுள்ள தனது ஸூரத்திற்கு முந்தினவனாகவும் அசலாகவும் இருப்பது போல்,

**அவன் வஸ்துக்களின் ஹகாயிகுகளுக்கும், அவைகளின் உஜூதுகளுக்கும் அசலாகவும், அவ்வலாகவும் - முந்தியவனாகவும் இருக்கும்.**

பின்னர் வெளியானதாவது, அது பன்மையாக இருப்பதுடன் உள்ளானது ஒருமையாக இருக்க எப்படி அது தானாக ஆகுமென்ற ஒரு கேள்வியை மூல நூலாசிரியரவர்கள் உணர்ந்ததும் சொல்கிறார்கள்.

இரண்டாவது குறிப்பிலும், அதற்குப் பின்னால் உள்ளதிலும் **ளாஹிரான இந்த கத்ரத்தாகிறது – வெளியான இந்த பன்மையாகிறது**, ஹக்குதஆலா பாத்தினாக இருப்பதையும், அதனால் சகலமும் ஹக்கு தானாக இருப்பதையும் கவனிப்பது கொண்டு எல்லாவற்றிற்குமுள்ள **வஹ்தத்தில் அதை குறைவாக கருதப்பட மாட்டாது.**

எப்படியென்றால், **ஜைது என்பவனுடைய உறுப்புக்கள் பலதாக இருப்பதும், அவனுடைய** எட்டிக் கொள்ளும்படியான, இன்னும் அசைத்து ஆட்டும்படியான **சக்திகளும்,** இவைகள்தான் ஜைதின் ஹகீகத்தின் மள்ஹர்களாகும். **பலதாயிருப்பதும் ஜைதை** அவனுடைய ஹகீகத்தின் புறத்தில் **பலதாக ஆக்காதது போல்.**

எனவே ஹக்குதஆலா அவனுடைய மள்ஹர்கள் பலதாக இருப்பதைக் கொண்டு அவன் பலதாக ஆக மாட்டான். அவனுடைய மள்ஹர்களுக்கு இலாஹிய்யத்துடைய – தெய்வீகத் தன்மையின் ஹு;மு இல்லை – தெய்வம் என்று சொல்லப்பட மாட்டாது.

**ஆகையினால் எவனாவது அக்லையோ**, அல்லது நப்ஸையோ **அல்லது** குல்லியத்தான **தபீஅத்தையோ அல்லது அதற்கு கீழே உள்ள** நட்சத்திரங்கள், அனாஸிறுகள் - பூதங்கள், முவல்லதாத்துகள் - குட்டிகளின் அவைகளினால் உண்டான நிரஸ பொருள், தாவர பொருள், ஜீவ பொருள் அவைகள் ஹக்குக்கு மள்ஹராக இருப்பதைக் கவனித்து **அவற்றையோ தெய்வமென்று சொல்வானேயானால் நிச்சயமாக அவன் பிழை செய்து விட்டான். ஜைதுடைய கையைப் பார்த்து அது ஜைது என்று சொன்னவன் பிழை செய்தானே அதைப் போல்.** அவனின் கை அவனின் மள்ஹறின் தொகுப்பில் நின்றுமுள்ளதாகவே இருந்தாலும் சரி.

தெய்வமாக இல்லாததை தெய்வமென்று சொன்னதில் **அவன் பிழை செய்தவனாக ஆன போது நிச்சயமாக அவன் காபிராகி விட்டான். ஜின்தீக்காகி விட்டான்.**

சகலத்திலும் வெளியானது ஹக்கின் உஜூதும் அவனுடைய அஸ்மாக்களும் என்று நாம் சொன்னோமானால் (அதனால்) அவனுடைய உஜூது வஸ்துக்கள் ஒவ்வொன்றிலுதட அதன் பூரணத்தைக் கொண்டு அது வெளியானது என்ற விதத்தைக் கொண்டல்ல.

இன்னும், சகலத்திலும் வஹ்தத்துல் உஜூது – ஒரு உஜூது தான் என்ற பேச்சாகிறது:-

நாமும் சகலத்திலும் உஜூது ஒன்றுதான் என்று சொன்னாலும் சரி, ஒவ்வொரு வஸ்துவும் இலாஹு - தெய்வம் என்று சொல்ல ஆமாக்காது – அனுமதிக்காது.

**ஏன்? பேச்சாகிறது:-** அதாவது வஹ்தத்துல் உஜூது – சகலத்தின் உஜூது ஒன்று என்று சொன்னவர்களுடைய பேச்சாகிறது:-

**அதுவெல்லாம் சேர்ந்ததாகிறது:- அதாவது, சகல** வஸ்துக்களின் உஜூதுகளெல்லாம் சேர்ந்ததாகிறது:- **ஒரு கருமமாகும் என்பதிலேயேயாகும்**. அது சகலத்திலும் ஹக்குடைய வெளிப்பாடாகும். **ஏன்?** சிருஷ்களில் நின்றும் **ஒவ்வொன்றுமாகிறது,** அதுவாகிறது மள்ஹருக்கு ளாஹிருடைய – வெளியாகுந் தானத்திற்கு வெளியானதுடைய ஹுக்மு உண்டு என்ற பேச்சு சரியானால் அது ஹக்குடைய உஜூதுக்கு மள்ஹராக வெளியாகும் தானமாக இருப்பதை கவனித்து அதில் ஹக்குடைய உஜூது இருப்பதினால் அதையும் மஜாஸாக - இரவலாக, இலாஹு- தெய்வம் என்று சொல்வது சரியாகிற அளவுக்கு ஹக்கு அதில் பூரணமாக வெளியான **சேர்ந்ததுவேயாகும்.**

அந்த ஒரு உஜூதாகிறது, அதுதான் சேர்ந்ததுவாகும். அதில் நின்றும் (அந்த சிருஷ்டிகள் நின்றும்) ஒவ்வொன்றுமில்லை என்பதற்கு அத்தாட்சியாகிறது:-

**அல்லாஹு தஆலா சொல்கிறான்:- ஹுவல் அவ்வலு வல் ஆகிறு வள்ளாஹிறு வல் பாதினு – அவனே முந்தினவனும், பிந்தினவனும், வெளியானவனும், உள்ளானவனுமாகும்.**

எனவே (இங்கு) சேர்ந்தது ஒன்று என்று கவனித்து, சேர்ந்ததை ஒன்றின் பேரில் சுமத்தாட்;டப்பட்டிருக்கிறது. ஒன்றை சேர்ந்ததின் பேரிலுமல்ல. ஒவ்வொன்றின் பேரிலுமல்ல.

(அதாவது:- முந்தினது, பிந்தினது, வெளியானது, உள்ளானது என்பதில் எத்தனையோ பொருள்கள் இருக்கின்றன. இப்படிப் பல பொருட்களும் சேர்ந்ததை அவைகளெல்லாம் ஒன்று என்பதாக கவனித்து அதை 'ஹுவ – அவன்' எனும் ஒன்றாக இருக்கிற எழுவாயின் பேரில் பயனிலையாக சுமத்தாட்டப்பட்டிருக்கிறது.

தனிமையாக ஒன்றாக இருப்பதை சேர்ந்ததான எழுவாயின் பேரிலோ அல்லது தனிமையாக ஒன்றான எழுவாய்கள் ஒவ்வொன்றின் பேரிலோ பயனிலையாக சுமத்தாட்டப்படவில்லை.)

பின்னர் அதற்கு 'ஸிவா' என்றும் 'கைறு – வேறு' என்றும் பெயர் சொல்லப்படுவதோடு அது மிருதுவானதளவிலும் திண்ணமானதளவிலும் பங்காகியதினால் அதில் கத்ரத்து –பன்மை வெளியாகி இருக்க ஒன்றை மஜ்மூயின் பேரிலோ, அல்லது ஒவ்வொன்றின் பேரிலோ எப்படி சுமத்தாட்டப்படும்- சொல்லப்படும் என்பதளவில் நூலாசிரியர் சைக்கினை செய்து சொல்கிறார்கள்.

**'ஸிவா' என்றும் 'கைர்' என்றும் சொல்லப்பட்ட புதிதான உலகமாகிறது,** நூலாசிரியரின் இந்த வார்த்தையில் இலாஹிய்த்தான அஸ்மாக்களுக்கும், ஸிபாத்துக்களும் அவைகளை ஐனு – தாத்து தானானது என்று சொல்லப்படாதது போல் அவைகளை ஸிவா, கைறு-தாத்துக்கு வேறானதென்றும் சொல்லப்படாதென்பதளவில் சையிக்கினை இருக்கிறது. **இரண்டு பங்குகளாகும்.**

பாதினுக்கு மள்ஹரான மிருதுவானதும், அது இன்ஸானிய்யத்தான அர்வாஹ் உடைய ஆலமும், கற்றூபிய்யான மலக்குகளாகிய அக்லுகளும், வானத்தைச் சேர்ந்த மலக்குகளான நப்ஸுகளுமாகும்.

இன்னும் ளாஹிருக்கு மள்ஹரான திண்ணமானதுவும் அது அர்ஷாகிய வளைத்து சூழ்ந்து கொண்டிருக்கிறதிலிருந்து மர்கஸு-நடுமத்தி வரையிலுமுள்ள ஸ்தூல உலகமாகும்.

மர்கஸு என்பதாகிறது உலக (பந்தின்) நடுவில் இருந்து நேராக நாலா பக்கமுள்ள சுற்று வளைவு வரையிலும் போகும்படியான கோடுகளெல்லாம் சரி சமமாக ஆகும்படியான புள்ளியாகும். இந்த மர்கஸும் ஸ்தூல உலகின் நடுமத்தியாக இருப்பதினால் இதுவும் அர்ஷில் நின்றும் ஒரு பாகமாகவேயாகும்.

மிருதுவானதும், திண்ணமானதுவுமான **இந்த இரு பங்குகளும்**, அவை ளாஹிருல் உஜூது ளாஹிருல் இல்மைக் கொண்டும், அல்லது இரண்டாவது குறிப்பைக் கொண்டும் சொந்தமானதாக இருந்தாலும **இந்த தாயிறாவில் - வட்டத்தில் வெளியாகும். ஏன்?**

**அதுவாகிறது அசலில் அதைக் கொண்டு தான் நப்ஸுற் றஹ்மானி அளவில் சைக்கினை செய்யப்பட்டதுவாகும்.**

நப்ஸாகிறது – சுவாசமாகிறது, உள்ளிருந்து வெளியே வரக் கூடியது எல்லாவற்றையும் பொதிந்து கொண்டிருக்கிறது எப்படி (பொதியாது?) அதைக் கொண்டு கருதப்பட்டதோ, தாத்தில் பொதுப்படையாக இருப்பதையெல்லாம் விபரித்து தானே.

**ஆகவே அதில் ஹர்புகளை சேகரித்த** அதாவது:- நப்ஸுற் றஹ்மானியுடைய குல்லிய்யாத்து – மொத்தமானவைகளான இலாஹிய்யத்தான அஸ்மாக்களையும் அவைகளின் மள்ஹர்களான குல்லிய்யத்தான ஹர்புகளை – அதாவது அரபி பாஷையில் மொழியப்பட்ட அட்சரங்களின் எண்ணிக்கையின்படி உலகத்தின் இருபத்தியெட்டு மொத்தமான ஹகீகத்துகளையும் சேகரித்த **இன்ஸானுடன் உலகத்தின் தனிப்படட்டவைகளின்,** அதாவது உலகத்தின் பஸீத்தான – விரிந்த ஹகீகத்தின் **விபரமும்,**

அது போலவே அதின் முரக்கபாத்து – சேர்க்கப்பட்டவை அதன் சேகரிப்பில் எட்டிக் கொண்டதையெல்லாம் எட்டிக் கொண்டாலும் சரி. அது நப்ஸை – சுவாசத்தை விட்டும் பிந்தியிருப்பதைக் கவனிக்காமல் அதனுடைய விபரமும் **இருக்கிறது.**

இன்னும் எப்படி நப்ஸு றஹ்மானி இவைகளையெல்லாம் பொதியாமலிருக்கும்? குர்ஆனில் அது விரிந்து கிடக்கிறதாக சொல்லப்பட்டிருக்கிறதே ஏன்? குர்ஆனில் வந்த றக்குல் மன்ஷூறு- பரத்தப்பட்ட ஏடு என்பது

இலாஹிய்யத்தான ஹகாயிகுகளைக் கொண்டும் கௌனிய்hன ஹகாயிகுகளைக் கொண்டும் இன்ஸானிய்யான ஹகீகத்துகளைக் கொண்டும், **இந்த நப்ஸின் விசாலத்தை** விரிந்து இருப்பதைப் **பற்றிய சமிக்ஞையாகும்.**

எப்படி அதில் கௌனிய்யான ஹகாயிகுகள் புகுதாதிருக்கும்? குர்ஆனில் வந்த **வல் கிதாபில் மஸ்தூரி பீ ரக்கின் மன்ஷுரின்** - பரத்தப்பட்ட ஏட்டில் **வரையப்பட்ட நூல் என்பது, உலகம்** அதன் ஹகீகத்துகளுடன் **அதில் தரிபட்டிருப்பதளவில் சைக்கினையாகும்.**

பின்னர், இந்த வட்டமாகிறது, அதில் உருவப்படுத்தி தரிபடுத்தப்பட்டதைக் கொண்டு மட்டும் சொந்தமாக்கப்படாது என்பதளவில் நூலாசிரியர் சைக்கினை செய்து சொல்கிறார்கள்.

**மேலும் இந்த வட்டத்தின் எல்லைக்குள் ஸிராத்தும்**, ஏன்? அது இந்த வட்டத்தில் தரிபடுத்ப்பட்ட நரகத்தின் முதுகின் பேரில் வைக்கப்பட்டது தானே.

மேலும் அந்த நரகத்தின் முன்னால் வைக்கப்பட்ட **மீஜானும், மேலும் சுவர்க்கமும், நரகமும் புகுந்ததில் நின்றுமுள்ளதுவாகும். எப்படி அவை இரண்டும் அதன் எல்லைக்குள் புகுதாமலிருக்கும்?**

**ஹதீதில் சுவர்க்கத்தின் பூமியாகிறது, குர்ஸியாகும். அதன் முகடாகிறது றஹ்மானுடைய அர்ஷாகும். அதிலிருந்து** – அந்த அர்ஷிலிருந்து தான் ஆறுகள் - சுவர்க்கத்தின் ஆறுகள் **ஒலித்தோடுகின்றன என்று வந்திருக்கிறது.**

**இன்னும்** இந்த வட்டத்தின் எல்லைக்குள் **அர்ஷும் குர்ஸியும்** புகுந்திருக்கின்றன. அப்போது அவை இரண்டிலும் அவை இரண்டிற்கும் இடையிலுள்ளதும் புகுந்து விடும்.

**இன்னும்** நரகமாகிறது அது ஏழு வானங்களிலும் புகுந்ததாக இருப்பதற்காக நிச்சயமாக **கியாமத்து நாளில் நரகத்தின் தட்டங்களாகக் கூடிய ஏழு வானங்களும்** புகுந்து விட்டனவே!

**அது** இப்போது உலகத்தின் நடுமத்திப் புள்ளயின் சூழாலே இருக்கின்றது ஏன்? அதாகிறது அதின் எல்கை கியாமத்து நாளில் **பலக்குல் மனாஜிலுடைய அடியிலிருந்து ஆக கீழுக்குக் கீழ்** உலகத்தின் மற்கஸ்- நடுமத்திப் புள்ளி **வரையிலுமாகும்.**

அது பல குத்தவாபிதாகும் - ராசிகளின் வானமாகும். அது முஹ்யித்தீன் இப்னு அரபி ரஹிமஹுல்லாஹுல்லாஹ் அவர்களிடத்தில் குர்ஸியல்லாத வேறொன்று ஆகும்.

இஸ்லாமிய பலாஸிபிய்hக்களிடத்தில் அது குர்ஸியேதான். எப்படி இந்த கருமங்களெல்லாம் இந்த வட்டத்தை விட்டும் புறப்படும்?

**அவைகளில் நின்றும் ஒவ்வொன்றும் இந்த வட்டம் ரூபப்படுத்தி காட்டுவதற்காக உள்ள நப்ஸு உடைய அட்சரங்களில் நின்றுமுள்ளதாகும்.**

பின்னர் இந்த வட்டத்தில் பல கருமங்களும் புகுந்திருக்க இதில் தரிபடுத்தப்பட்டதை மட்டும் சொந்தமாக்கியதற்கு காரணத்தளவில் மூல நூலாசிரியர் அவர்கள் சைக்கினை செய்து சொல்கிறார்கள்.

இம்கான் அதன் அவசியத்தில் நின்றுமுள்ளதாக இருக்கிற ளாஹிருல் இல்முடைய வில்லில் தரிப்படுத்தப்பட்ட **இந்த கௌனிய்யான அஸ்மாக்களாகிறது, ஆன்ம, ஸ்தூல உலகத்தின் மொத்தமானவைகளாகும்.**

ஸிறாத்து, மீஜான், சுவர்க்கம், நரகத்திற்கு மாற்றமாக. அவைகள் ஜுஸ்யிய்யாத்தில் - சில்லறைகளில் நின்றுமுள்ளவைகளாகும்.

இந்த வட்டத்தில் தரிபடுத்தப்பட்டவைகள் மொத்தமானவைகளாக ஆனதெல்லாம் **ஏன்? அவைகளில் நின்றும் ஒவ்வொன்றும் அதற்குக் கீழாலுள்ள சில்லறையானவைகளை சூழ்ந்த** வட்டமாக இருக்கிறது.

**அது** சில சூறத்தில் **அதற்கு மேலுள்ளவைகளைக் கொண்டு சூழப்பட்ட** சில்லறையான**தாக இருந்தாலும் சரி.** ஏன்? கவனிப்பினாலான சில்லறையாகிறது, மொத்தமாக இருப்பதை மறுக்காதே.

**ஆகவே** ளாஹிருல் இல்மின் வில்லில் தரிபடுத்தப்ட்ட **அக்லுல் குல்லுவாகிறது,** அதில் தரிபடுத்தப்படாத மற்ற **அக்லுகளை சூழ்ந்து கொண்டதாகும்.**

இன்னும் ளாஹிருல் இல்மின் வில்லில் தரிபடுத்தப்பட்ட நப்ஸு குல்லியாகவும், **அது அக்லைக் கொண்டு சூழப்பட்டதான நிலையில்** இருந்தாலும் சரி, மற்ற நப்ஸுகளைக் கொண்டு சூழ்ந்ததாக இருக்கும்.

அதுவாகிறது:- அப்படி அக்லைக் கொண்டு சூழப்பட்டதாக ஆனதாகிறது, அது நப்ஸுகளை சூழ்ந்து கொண்டிருப்பதை மறுக்காது. ஆகவே ளாஹிருல் இல்முடைய வில்லில் தரிபடுத்தப்பட்டவைகளெல்லாம் புதிதான உலகத்தின் மொத்தமானவைகளாகும்.

**ளாஹிருல் உஜூதின் வில்லில் தரிப்படுத்தப்பட்ட இலாஹிய்யத்தான அஸ்மாக்கள், மொத்தமான அஸ்மாக்களாக இருப்பதைப் போல்.**

அவை குல்லியாக ஆனதெல்லாம், **ஏன்? அவைகளில் நின்றும் ஒவ்வொன்றுமாகிறது,** அந்த சில்லறையான அஸ்மாக்களும், **அவைகளுக்கு கீழ் உள்ளவைகளுடன்** சூழப்பட்டதாக இருப்பதை கவனிப்பது கொண்டு மொத்தமானதாக இருந்தாலும் சரி. **அவைகளின் சில்லறையானதுகளுடைய வட்டமாகும்.**

பின்னர், அதில் தரிப்படுத்தப்படாததாகிறது, அதில் தரிபட்டதின் கருத்திலேயே இருக்கிறதென்பதளவில் (மூல) நூலாசிரியர் அவர்கள் சையிக்கினை செய்து சொல்கிறார்கள்.

**ஒவ்வொரு சில்லறையானதும்** சந்தேகமில்லாமல் அது **அவை இரண்டின் இரு வில்லிலேயும் தரிபடுத்தப்பட்ட இலாஹிய்யத்தான அஸ்மாக்களில் நின்றும், கௌனிய்யான அஸ்மாக்களில் நின்றும்,**

**இன்னும், இலாஹிய்யத்தான மொத்தமான அஸ்மாக்களில் நின்றும் கௌனிய்யத்தான மொத்தமான அஸ்மாக்களில் நின்றும் உள்ளதானாலும் சரி. மொத்தமானதற்கு கீழ் புகுந்ததாக இருக்கும்.**

ஆகவே அதில் இலாஹிய்யத்தான சில்லறை அஸ்மாக்களையும், கௌனிய்யத்தான சில்லறை அஸ்மாக்களையும் அதில் தரிபடுத்தப்பட்டது போலிருக்கிறது. இரண்டு வில்களும், அவைகள் தீர்மானத்திலானதாகவும், தீர்மானத்திலானது மொத்தமான கருமங்களுக்கும், இன்னும் எல்லைக்குள் கட்டுப்படாத சில்லறைகளுக்கும் விஸ்தீரனமாகாததாகவே இருந்தாலும் சரி.

எனினும் மொத்தமானதுகளும், எல்லைக்குள் கட்டுப்படாத சில்லறைகளும், அதில் வெளியாக அது விஸ்தீரனமானதாக ஆகும்.

உதாரணமாக கண்ணாடியைப் போல். அதில் அதைவிடவும் எத்தனையோ மடங்கு பெரியதானதும் அதை விடவும் அதிகமானதுவான உருவங்களெல்லாம் வெளியாக அது விஸ்தீரனமாக இருக்கிறது.

**ஆகவே** இலாஹிய்யத்தான அஸ்மாக்களில் நின்றும், கௌனிய்யான அஸ்மாக்களில் நின்றும் **மொத்தமானவைகளும், சில்லறையானவைகளும் அவை மட்டில்லாது** இருந்தாலும் **அவை இரண்டில் நின்றுமே வெளியாகிறது**.

பின்னர், கௌனிய்யான ஒவ்வொரு இஸ்மையும் இலாஹிய்யான இஸ்முக்கு எதுகையில் தரிபடுத்தியதற்கு காரணத்தளவில் மூல நூலாசிரியர் சைக்கினை செய்து சொன்னார்கள்:-

**ஒவ்வொரு இலாஹிய்யான குல்லிய்யான – மொத்தமான இஸ்மும், கௌனிய்யான குல்லிய்யான மொத்தமான இஸ்முக்கு றப்பாக – போஷிக்கக் கூடியதாக இருக்கும்.**

அவை இரண்டும் உஜூதை – உண்டாவதை விலக்கும்படியான குல்லியென்று லட்சணம் பெற்று இருப்பதானது:- அது றப்பாக இருப்பதை விட்டும் விலக்காது. ஏன்? அது உஜூது விலக்கு உண்டாகக் கூடாது என்பது மன்திகிய்யான, அக்லிய்யான குல்லியைக் கொண்டு சொந்தமாகும்.

இவ்விடத்தில் குல்லியானது,அது தபீயியாக இருக்கும். அது றப்பாக இருக்கிறதைக் கொண்டு கருத்து, தாத்து இல்லாமல் இந்த இலாஹிய்யான இஸ்மேதான். அந்த கௌனிய்யான இஸ்மை உண்டாக்கியதென்பதல்ல.

எனினும், கருத்து அந்த கௌனிய்யான இஸ்மாகிறது, **அதற்கு** – அந்த இலாஹிய்யான இஸ்முக்கு **மள்ஹராகும்**.- **உதய ஸ்தானம் என்பதாகும்.**

**இன்னும்** இலாஹிய்யான அஸ்மாக்களாகிறது, கௌனிய்யான அஸ்மாக்களைக் கொண்டே அதன் வெளிப்பாடு உண்டாவதாக இருப்பதோடு, அது இதைக் கொண்டு வெளியாவதைக் கவனித்து அது இதற்கு மற்பூபாக - இதனால் போஷிக்கப்பட்டதென்று ஆகாதெல்லாம், ஏன்?

முடிவான கருமமாகிறது:- **நிச்சயமாக இலாஹிய்யான ஹகாயிகுகளாகிறது அது வெளியாவதில்** அதாவது:- அதன் ஸூரத்துகளும், அதன் குணப்பாடுகளும் வெளியாவதில் **கௌனிய்யான ஹகாயிகுகளைக் கொண்டு கட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும்.**

ஒரு வஸ்துவைக் கொண்டு கட்டுப்பட்டது அதற்கு மற்பூபாக – அதனால் போஷிக்கப்பட்டதாக ஆவது அவசியமில்லை.

இன்னும் கௌனிய்யான அஸ்மாக்கள் இலாஹிய்யான அஸ்மாக்களுக்கு மற்பூபாக – அதனால் போஷிக்கப்பட்டதுவாக ஆவது அவசியமில்லை.

**இன்னும்** கௌனிய்யான அஸ்மாக்கள் இலாஹிய்யான அஸ்மாக்களுக்கு மற்பூபாக – அதனால் போஷிக்கப்பட்டதுவாக ஆனதெல்லாம் ஏன்? **இது உஜூதில் - உண்டாகுவதில் அதைக் கொண்டு** அந்த இலாஹிய்யான அஸ்மாக்களைக் கொண்டு **ஷர்த்திடப்பட்டதாகும்.**

ஆகவே இதனுடைய உஜூதாகிறது, அதைக் கொண்டு, உண்டானதாகும். ஏதொன்று அதனால் ஒரு வஸ்துவுக்கு அதனுடைய உஜூது உண்டாகிறதோ அது அதற்கு றப்பாக – போஷிப்பவையாக ஆகும்.

நாம் ஒவ்வொரு றப்புக்கும் அதனுடைய மற்பூபுடனான சம்பந்தத்தை கூறுகிறோம் நாம் சொல்லுகிறோம்:-

பதீவு - நூதனமாக உண்டாக்குபவன் என்பது அக்லுல் குல்லுக்கு றப்பாகும் ஏன்?

அது நூதனமாக உண்டாக்கப்பட்டதாகும். அதற்கு அறவே மூல் பொருளில்லை.

பாஇது – எழுப்பி விடுகிறவன் என்பது நபஸு குல்லிய்யாவுக்கு றப்பாகும். ஏன்? அது அக்லை ஜடலத்தில் ஆட்சி செய்யும்படி எழுப்பி விடுகிறது. அதற்கு அதன் ஆட்சி ஜடலத்தோடு கொழுகிறதெல்லாம் நப்ஸின் வாஸிதாவினாலாகும்.

பாதின் - உள்ளானவன் என்பது தபீஅதுல் குல்லிய்யாவின் றப்பாகும். ஏன் அது உள்ளிலுள்ள உஷ்ணத்தை வெளியாக்குவதிலும், வெளியிலுள்ள குளுமையை உள்ளில் புகுத வைப்பதிலும் மனித சுவாசத்திற்கு ஒப்பான நபஸு றஹ்மானி – றஹ்மானின் சுவாசத்தினால் உண்டானதாக இருப்பதற்காக.

ஆகவே அது இலாஹிய்யான பாதின் - உள்ளானவன் எனும் இஸ்மினால் உண்டான நபஸு றஹ்மானியினால் உண்டானதாகும்.

ஆகிறு – பிந்தினவன் என்பது ஹபா - ஹயூலாவின் றப்பாக இருக்கும். ஏன்? அது உஜூதுடைய வெளிப்பாட்டின் மற்தபாக்களில் கடைசியானதாக இருக்கும். அது அங்கு கடைசியான தாழ்வில் இருக்கிறது.

ஹகீம் - பூராயமானவன் என்பது ஜிஸ்முகுல்லி உடைய றப்பாக இருக்கும். ஏன்? விதர்ப்பமான தபீஅத்துக்கள் அதில் சேகரமாகிறது அவனுடைய ஹிக்மத்தில் - பூராயத்தில் நின்றுமாகும்.

முஹீத்து – சூழ்ந்தவன் என்பது அர்ஷு உடைய றப்பாக இருக்கும். அது ஜடப் பொருட்களையெல்லாம் சூழ்ந்து கொண்டிருப்பதினால். ஷகூறு – நன்றி உள்ளவன் என்பது குர்ஸி உடைய றப்பாக இருக்கும். ஏன்? அது மார்க்கத்திலுள்ள ஏவல் விலக்கல்கள் விபரமாவதற்கு ஆரம்ப இ;டமாகும். ஏன்? ஷுக்ரை உண்டாக்கக் கூடிய வார்த்தைகளை அது கொடுக்கிறது.

ஙனீ – தேவையற்றவன் என்பது பலகுல் புறூஜ் உடைய றப்பாக இருக்கும். அது நட்சத்திரங்களை விட்டும தேவையற்றிருப்பதற்காக.

முக்ததிறு- வல்லமை உடையவன் என்பது பலகுல் மனாஸில் உடைய றப்பாகும். ஏன்? அதுதான் பூத உலகத்தில் உண்டாகக் கூடியதற்கும், அழியக் கூடியதற்கும் காரணமாகும்.

றப்பு – வளர்ப்பவன் என்பது பலகுல் ஸூஹல் உடைய றப்பாகும். ஏன்? அது ஸையாறா – ஓடும்படியான நட்சத்திரங்களுள் மேலாலிருக்கிறது. அதுதான் தலைவர்கள் (போன்ற) பெருமைக்குரியவர்கள் உடைய நட்சத்திரமாகும்.

அலீம் - அறிந்தவன் என்பது பலகுல் முஷ்தரீயுடைய றப்பாகும். ஏன்? அது உலமாக்களுடைய நட்சத்திரமாகும்.

காஹிர் - அடக்கி ஆள்பவன் என்பது பலகுல் மிர்ரீகு உடைய றப்பாகும். ஏன் அதன் சுபாவத்திலுள்ளது அடக்கி ஆளும் குணம்.

நூர் - ஒளியென்பது பலகுஷ் ஷம்ஸுடைய றப்பாகும். ஏன்? அதுதான் வெளிச்சத்தாலும், உலகுக்கு வெளிச்சம் கொடுப்பதாலும் சக நட்சத்திரங்களிலும் (அது) சம்பூரனமானதாகும்.

முஸவ்விறு – உருவம் அளிப்பவன் என்பது பலகுஸ் ஸுஹறாவுடைய றப்பாகும். ஏன்? கர்ப்பத்தில் சிசுக்களுக்கு உருவம் அமைப்பதை அதனளவில்தான் சேர்க்கப்படுகிறது.

முஹ்லி – சூழ்ந்தறிந்தவன் என்பது பலகுல் காதிபு அதாரிது உடைய றப்பாக இருக்கும். ஏன்? அதன் அளவில் தான் கணக்குப் பார்க்கிறவர்களையும், அஹ்ல தீவான்களையும் சேர்க்கப்படுகின்றன.

முபீன் - வெளியாக்கிறவன் என்பது பலகுல் கமறு உடைய றப்பாக இருக்கும். ஏன்? அதன் நடையைக் கொண்டு தான் காலங்களின் அளவு வெளியாகிறது.

காபிலு - இறுகப் பிடிக்கிறவன் என்பது பலகுல் அதீற் - நெருப்பு உடைய றப்பாக இருக்கும். ஏன்? அது வறட்சியைக் கொடுக்கிறது.

ஹைய்யு – ஜீவனுள்ளவன் என்பது குரத்துல் ஹவா – காற்று மண்டலத்தின் றப்பாகும். ஏன்? அதைக் கொண்டு தான் ஜீவராசிகளின் ஜீவியமும், அவற்றின் ஜீவியத்தின் நிலைப்பாடும் இருக்கிறது.

முஹ்யீ – உயிராக்கிறவன் என்பது குரத்துல்மா – தண்ணீர் மண்டலத்தின் றப்பாகும். ஏன்? அல்லாஹ் தஆலா தண்ணீரில் நின்றும் தான் உயிர் உள்ள வஸ்துக்கள் அனைத்தையும படைத்தான். அதைப் பற்றி அவனுடைய திரு வேதத்தில் சொல்லியது போல்.

முமீது – மரணிக்கச் செய்கிறவன் என்பது குரதுத் துறாபு – பூ மண்டலத்தின் றப்பாகும். ஏன்? அதுதான் மௌத்தானவர்கள் போய் மீளும் தானம் ஆகும். அதில் மிகுந்த பிராணிகள் ஜீவிக்காது.

அஸீஸு - அபூர்வமானவன் என்பது நிரஸ வஸ்துக்களின் றப்பாக இருக்கும். ஏன்? அதில் நின்றுமுள்ளதுதான் தங்கம், வெள்ளி (முதலிய) விலை உயர்ந்த இரத்தினங்கள். இது பாமர மக்களிடத்தில் மிக அபூர்வமானதாக ஆகும்.

றஸ்ஸாக்கு – இரணம் அளிப்பவன் என்பது தாவரங்களின் றப்பாக இருக்கும். ஏன்? அதில் நின்றும் தான் உயிர் பிராணிகளுக்கு இரணம் இருக்கிறது.

முதில்லு – தழுமையாக்கிறவன் என்பது மிருகங்களின் றப்பாக இருக்கும். ஏன்? அது மனிதனுக்கு தாழ்மைப்படுத்தப்பட்டதாகும். அதில் சவாரி செய்கிறான். மிகச் சிரமப்படாது, செல்ல முடியா ஊர்களுக்கு அதில் சுமைகளை ஏற்றிச் செல்கிறான் (அது) அவனை விட அதிக சக்தியுடையதாக இருந்தும் (மனிதனுக்கு) வசப்பட்டு கிடக்கிறது.

கவிய்யு – சக்தியுள்ளவன் என்பது மலக்குடைய றப்பாகும். மலக்குகள் சக்தியில் கடுமையானவர்கள். ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களும், அவர்களில் நின்றும் உள்ளவர்களேயாவார்கள். அவர்கள் தங்களுடைய ஒரு இறகைக் கொண்டு லூத் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கூட்டத்தார்களின் கிராமத்தை உயர உயர்த்தி விட்டார்கள்.

லத்தீபு- மிருதுவானவன் என்பது ஜின்னின் றப்பாக இருக்கும். ஏன்? அவர்களுடைய திரேகங்கள் மிக மிருதுவானவைகளாகும். அவர்களைப் பார்க்கவும் முடியாது.

ஜாமிவு – சேகரித்தவன் என்பது இன்ஸானுடைய றப்பாகும். ஏன்? அவன் இலாஹிய்யான அஸ்மாக்களுடைய இரகசியங்களையும், கௌனிய்யான ஹகாயிகுகளையும் சேகரித்துக் கொண்டிருக்கிறான்.

றபீவுத் தறஜாத்தி – பதவி உயர்ந்தவன் என்பது ஜாமிவுவான மர்தபாவுக்கு. அதாவது ஹகீகத்துல் முஹம்மதிய்யாவுக்கு றப்பாக இருக்கும். ஏன்? அது ஹகீகத்ததுல் இன்ஸானிய்யாவுக்கு மேலே உயர்ந்தது ஆகும். முன் சொன்னது போல்.

பின்னர் றப்புகள்,மற்பூபுகளைக் கொண்டு வெளியானது. மற்பூபு தனக்காக வேண்டியல்ல. எனினும், அவைகள் இன்ஸானுக்கு பீடிகை போலவும் சம்பூரணமாக்கக் கூடியவைகள் போலவும், இருக்கிறதற்காகத்தான் என்பதளவில் மூல நூலாசிரியர் அவர்கள் சைக்கினை செய்து சொல்கிறார்கள்:-

**அவை இரண்டில் நின்றும்** அதாவது:- போஷிக்கிறவைகள், போஷிக்கப்பட்டவைகள் இரண்டில் நின்றும் **ஒவ்வொன்றும் அலாதியாகப் பிரிவதாகிறது இன்ஸானிய்யத்தான பற்ஜகிய்யத்தான ஹகீகத்தைக் கொண்டு கொழுகப்பட்டதாக இருக்கும்.**

வட்டத்தின் இரு வில்லுகளும் அலாதியாகப் பிரிவது அவை இரண்டிற்குமிடையில் பிரிக்கும்படியான கோட்டைக் கொண்டானதாகவும், இன்னும் பிரிக்கும்படியான கோடு இரண்டு ஓரங்களையும் சேர்த்துக் கொண்டதாகவும் இருப்பது போல் தான் இன்ஸானிய்யத்தான பற்ஸகும். மேலும் இது அதை விடவும் அதிகமானதாகும்.

எனவே அது இன்ஸானிய்யத்தான பற்ஸகு எல்லா இலாஹிய்யத்தான ஹகாயிகுகளின் பேரிலும் கௌனிய்யான ஹகாயிகுகளின் பேரிலும் அதாவது:- றப்புகளின் பேரிலும் மற்பூபுகளின் பேரிலும் சூழ்ந்ததாக இருக்கும்.

இதற்காகத்தான் அதை (இன்ஸானிய்யத்தான பற்ஸகை) ளாஹிருல் இல்முடைய வில்லில் ஆக்கப்பட்ட பின் இரண்டு வில்லுக்கும் மத்தியான ஒரு கோடாக தரிபடுத்தப்பட்டது.

இன்னும் உயர்வான அக்லுகளும், நப்ஸுகளும் அவைகளின் தகுதி வலுப்பமாக இருந்தும், அவைகளுக்கு அதை ஆக்கப்படவில்லை. ஏனெனில் மற்ற ஹகாயிகுகளுக்கு இந்தச் சூழுதல் இல்லை. அவை கமாலில் எட்டியதையெல்லாம் எட்டியிருந்தாலும் சரி. இதனாலேயே அவைகளில் இன்ஸானில் இருப்பது போன்று மஃரிபாவும் இபாதத்தும் இல்லை.

**ஆகவே அவை அறியாது,** அதாவது:- இலாஹிய்யத்தான அஸ்மாக்களை **அல்லாஹ்வை** அவன் உடைய அஸ்மாக்களில் நின்றும் ஒன்றையும் கொண்டு **அவை தஸ்பீஹ் செய்யாது. அவை அவைகளுக்கு றப்புகளாகிய** குறிப்பான **அஸ்மாக்கள் அல்லாததை வணங்காது. ஹகீகத்துல் இன்ஸானிய்யாவுக்கு மாற்றமாக.** ஏன்? அதற்கு இபாதத்தில் நின்றும், மஃரிபத்தில் நின்றும் மிக உயர்ந்த ஸ்தானமுண்டு. **ஏன்? அது** அவனுடைய எல்லா அஸ்மாக்களையும் **வணங்கக் கூடியதும்** எல்லாவற்றையும் அறியக் கூடியதும், **எல்லாவற்றைக் கொண்டு தஸ்பீஹ் செய்யக் கூடியதுமாகும்.**

ஏன்? அது சேகரித்துக் கொண்டது பூரணமானதாக இருப்பதினால், சகலத்தின் பேரிலும் உதயமாகி பார்ப்பது அதற்கு இலகுவாகிவிட்டது.

இன்னும் அதனிடத்தில் சகல வணக்கங்களின் கருவிகளும் உண்டு. இப்படி சேகரித்துக் கொண்டிருப்பதாகிறது அது தான் இன்ஸானிய்யத்தான ஹகீகத்தைக் கொண்டு வெளியானவர்களின் ஹக்கில் - அதாவது:- ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் ஹக்கில் - ' **வஅல்லம ஆதமல் அஸ்மாஅ குல்லஹா ஆதமுக்கு அஸ்மாக்கள் யளாவற்றையும் படித்துக் கொடுத்தான்' என்று அல்லாஹ் தஆலா சொன்னதைக் கொண்டு அதன் பேரில் அறிவிக்கப்பட்டதுமாகும்.**

இது சிலருடைய யோசனையில், அவர் திறக் குறைச்சலானவராக இருந்ததினால் இந்த ஆயத்து ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இலாஹிய்யத்தான அஸ்மடாக்கள் சேகரித்துக் கொண்டிருப்பதின் பேரில் அறிவிக்காமல் போனாலும் சரி.

**நீ ஆழ்ந்து சிந்தித்து பார்த்தாயானால்,** இன்னும் இலாஹிய்யத்தான அஸ்மாக்களை அறிவது அவைகளின் மற்பூபு அவைகளால் போஷிக்கப்பட்டவைகளை அறிவதைக் கொண்டு கொழுகப்பட்டதாகும்.

ஒரு வஸ்து மற்றொன்றை அறிவது அது தன்னில் இல்லாதிருக்கும் காலமெல்லாம் அது பூரணமாகாது என்றும், அறிந்திருந்தாயானால் **ளாஹிருல் உஜூது உடையவும், ளாஹிருல் இல்முடையவும் இரண்டு வில்லையும்,** அதாவது இலாஹிய்யத்தான ஹகீகத்தையும், கௌனிய்யத்தான ஹகீகத்தையும் **ஹகீகத்துல் இன்ஸானிய்யாவுடைய உள்ரங்கமாகவும், அதன் வெளிரங்கமாகவும் பார்ப்பாய்.**

அதாவது:- ளாஹிருல் உஜூதுடைய வில்லை ஹகீகத்துல் இன்ஸானிய்யாவுடைய உள்ரங்கமாகவும் ளாஹிருல் இல்முடைய வில்லை அதன் வெளிரங்கமாகவும் பார்ப்பாய்.

**அதுதான்** அதாவது:- அல்லாஹ் (வின்) திருவசனத்தின் வெளிப்படையானது, அல்லாஹ் தஆலா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இலாஹிய்யத்தான, கௌனிய்யத்தான எல்லா அஸ்மாக்களையும் அறிவித்துக் கொடுத்தான் என்பதாக அறிவிப்பது போல் ஹகீகத்துல் இன்ஸானிய்யாதான் **அவை அடங்கலையும் சூழ்ந்ததாக இருக்கும்.** ஏன்? அவைகளுக்கு நேர்பாடானது அதில் இருப்பதைக் கொண்டு அது சூழ்ந்திருப்பதற்காக அவைகளுடைய ஹகாயிகுகளையெல்லாம் அது சேகரமாக்கியதளவில் நோட்டமிடப்பட்டால் **சொல்லப்படும்**.

**அதுவாகிறது,** அதாவது:- இலாஹிய்யத்தான ஹகாயிகுகளும், கௌனிய்யான ஹகாயிகுகளும் சேர்ந்ததுவாகிறது, **அதனுடைய** (ஹகீகத்துல் இன்ஸானிய்யாவுடைய) **பாகங்களாகும்.** இது கௌனிய்யான ஹகாயிகுகளிலாகும்.

**இன்னும் அதனுடைய ரூஹானிய்யத்தான சக்திகளுமாகும்..** இது இலாஹிய்யத்தான ஹகாயிகுகளிலாகும். கௌனிய்யான ஹகாயிகுகள் அதன் உடைய பாகங்களாக ஆகிறபோது **மலாயிகத்துகள்** அவர்களுக்கு ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு **ஸுஜூது செய்ததாகிறது:- ஒரு பாகம் அதன் முழுதுக்கு தழுமைப் பட்டதாகும்.**

ஏன்? மற்ற எல்லா பாகங்களும் சேர்ந்ததை அது ஏற்றுக் கொண்டிருப்பதற்காக. இப்படி தாழ்மையாகிறதை ஸுஜூதுடைய ஸூரத்துக்கு ஒப்பாக்கிக் காட்டப்பட்டது ஏன்? அதுதானே தாழ்மையாவதில் கடைசி முடிவாகும்.

பின்னர் இன்ஸான் ளாஹிருல் உஜூதுடைய வில்லைக் கொண்டும் ளாஹிருல் இல்முடைய வில்லைக் கொண்டும் சூழ்ந்திருப்பதினால் அவன் எல்லாவற்றையும் பூரணமாக சூழ்ந்திருப்பதாக ஆகாது. ஏன்? அந்த இரண்டு வில்லுகளிலும் ஹக்குதஆலாவுடைய ஸிபாத்துகளின் உயர்வான இனங்கள் இல்லையே என்ற ஒரு கேள்வியை நூலாசிரியர் உணர்ந்ததும் சொல்கிறார்கள்:-

**நிச்சயமாக ஹக்கு தஆலாவுடைய** அஸ்மாக்களுக்கு தாய்களான **ஸிபாத்துகளுக்கு தாய்களாக இருக்கிற விதத்தில் நின்றும்** ஹக்குத்தஆலாவின் மற்ற ஏனைய ஸிபாத்துகளெல்லாம் குட்டிகளாக வெளிப்படும் படியான **உயர்த்தியான இனங்களாகிறது அதுதான் ஹயாத்து, இல்மு, இறாதத்து, குத்ரத்து, ஸம்வு, பஸறு, கலாம்களாகும்.**

**இவைகள்** இரண்டாவது குறிப்பில் நின்றுமுள்ளதாகிய அதுதான் **இன்ஸானிய்யான** பற்ஸகாகும். **இரண்டாவதில்** பற்ஸகில் **தரிபட்டதாகும்.** அதை ளாஹிருல் இல்முடைய வில்லில் வைக்கவில்லை. ஏன்? அது கௌனிய்யான ஹகாயிகுகளில் நின்றுமுள்ளதல்லவே.

இன்னும் ளாஹிருல் உஜூதுடைய வில்லிலும் வைக்கப்படவில்லை. ஏன்? அதில் தரிபடுத்தப்பட்டதாகிறது, அதுவெல்லாம் அதற்கு நேர்பாட்டில் தரிபடுத்தப்பட்ட ஒரு குறிப்பான கருமத்திற்கு றப்பாக இருக்கக் கூடியதுவாகவேயாகும்.

ஹயாத்தாகிறது, அக்லுகளுக்கும், நப்ஸுகளுக்கும், ஜின்களுக்கும், மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும், தாவரங்களுக்கும் பொதுவானதாக இருக்கும்.

இல்மு ஆகிறது, மலக்குகளுக்கும், ஜின்களுக்கும், மனிதர்களுக்கும் பொதுவானதாக இருக்கும்.

மற்றவைகளும் அதாவது இறாதத்து, குத்ரத்து, ஸம்வு, பஸறு, கலாம்களும் தாவரத்தைத் தவிர மேலே கூறப்பட்டவைகள் எல்லாவற்றிற்கும் பொதுவானதாகும்.

அவைகள் இன்ஸானிய்யான பற்ஜகைக் கொண்டு சொந்தமானதாக இல்லாதிருந்தாலும் அது மற்றவைகளையும் சேகரமாக்கிக் கொண்டிருப்பதினால் அவைகளையும் அதிலேயே தரிபடுத்தப்பட்டது.

அந்த வில்லுகளுக்கு அவசியமானவைகளான உஜூபு, இம்கானுகளுக்கிடையில் நேர் முரண்பாடு இருப்பதைக் கவனித்து அது கௌனிய்யான ஹகாயிகுகளை சேகரமாக்கிக் கொண்டிருப்பதை மறுக்காது.

**ஏன்? இரண்டு வில்லுகளில் நின்றும் ஒவ்வொன்றும் மற்றதற்கு அவசியமானதின் பேரிலும் பொதிந்து கொள்ளும்.**

ஆகவே ளாஹிருல் உஜூதுடைய வில்லாகிறது, ஸிபத்துகள் அவை எதைக் கொண்டு நிற்குமோ, அந்த தாத்தளவில் தேவையாகிற விதத்தில் இம்கானின் பேரில் பொதிந்து கொள்ளும். ளாஹிருல் இல்முடைய வில்லாகிறது, ஹக்கு அதற்கு அவசியமாக்கி வைத்த விதத்தில் உஜூபின் பேரில் பொதிந்து கொள்ளும்.

எனினும் சொற்ப வித்தியாசத்தோடு. ஏன்? ளாஹிருல் உஜூதுடைய உஜூபாகிறது, ளாஹிருல் இல்முடைய உஜூபை விடவும் சக்தி வாய்ந்ததாகும். இன்னும் ளாஹிருல் இல்முடைய இம்கானாகிறது, ளாஹிருல் உஜூதுடைய இம்கானை விடவும் சக்தி வாய்ந்ததாக இருக்கும்.

பின்னர் இன்ஸானிய்யத்தான ஹகீகத்தாகிறது, அதை விட்டும் அஹதிய்யத்திற்கும், வாஹிதிய்யத்திற்கும் இடையிலான பற்ஸகு புறப்பட்டு அதனால் அவை இரண்டுமே அதை வி;ட்டும் புறப்பட்டதாக இருப்பது அவசியமானதாக இருக்க எப்படி அது சகலத்தையும் சூழ்ந்து கொண்டதாக ஆகுமென்ற ஒரு வினாவை மூல நூலாசிரியர் உணர்ந்ததும் சொல்கிறார்கள்:-

**நிச்சயமாக அஹதிய்யத்திற்கும், வாஹிதிய்யத்திற்கும் இடையிலான பற்ஜகாகிறது.** அது இன்ஸானிய்யத்தான ஹகீகத்தை விட்டும் மொத்தமாக புறப்பட்டதாக இல்லை.

எனினும் அதற்கு இரு கவனம் இருக்கிறது ஹகீகத்தை கொண்;டதாயிருக்கிற **முந்திய தஜல்லியை அது** சுமந்து கொண்டிருக்கிறதைக் **கவனிப்பது கொண்டு ஹகீகத்துல் முஹம்மதிய்யாவாக இருக்கும்.** ஹகீகத்துல் முஹம்மதிய்யாவென்று ஆக்கப்பட்டது அது புறப்படுகிற புறமாக இருக்கும்.

இன்னும் இரண்டாவது குறிப்பில் வெளியாகி இருப்பதைக் கவனித்து அது புறப்படாது.

**ஏன்?** இரண்டாவது குறிப்பில் **அதனுடைய ஸூரத்தாகிறது, இரண்டாவது பற்ஸகாக இருக்கும்.** அதெப்படி அதனுடைய ஸூறத்தாக ஆகாதிருக்கும்? அதுதான் **மற்றப் பெரிய நபிமார்களுடைய ஹகாயிகுகள் அதில் தரிபடுத்தப்பட்டதாக இருக்கும்.**

அவர்களுடைய ஹகாயிகுகள், ஹகீகத்துல் முஹம்மதிய்யா உடைய ஸூறத்தாக இருக்கும்.

மேலும், அவர்களுடைய ஹகாயிகுகள் அது தானாகவேயாகும். அதாவது அவர்களுடைய ஹகீகத்தாக இருக்கிற இரண்டாவது தஜல்லியை அது சுமந்து கொண்டிருக்கிறதைக் கவனித்து இரண்டாவது பற்ஸக் தானாகவே இருக்கும்.

அது முந்திய தஜல்லியை சுமந்திருக்கிறதைக் கவனித்து **பெரிய பற்ஸகாகிறது, ஹகீகத்து முஹம்மதிய்யா தானாக இருப்பது போல்.**

இன்னும், பற்ஸக் தஜல்லி தானாக இருப்பதானது அது அதைச் சுமந்திருப்பதை மறுக்காது. ஏன்? சுமந்திருப்பது ஆரம்பத்துடைய கவனத்தைக் கொண்டு ஆகும். தானாக இருப்பது முடிவைக் கவனிப்பது கொண்டாகும். ஏன்? **அஹதிய்யத்து வாஹிதிய்யத்துவாகிய இரு வில்லுகளின் முதல் காபாக நாணாகவும் இருக்கும்.** இதுவாகிறது, அதை அது சுமந்திருக்கிறதை கவனித்ததினாலாகும்.

**இது நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது மி:ராஜ் உடைய தீர்மானமாகும்.**

அவர்கள் அல்லாஹ்வில் பனாவாகி அவனைக் கொண்டு பகாவாகுவதற்கு முன்னால்,

**இன்னும் அவ் அத்னாவாகிறது** அதற்கு அவை இரண்டு தானானதாக இருப்பதளவில் சைக்கினையாகும். இது நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வில் பனாவாகி அவனைக் கொண்டு பகாவான பின் அவர்களின் மி:றாஜுடைய தீர்மானமாகும். ஏன்? **அது தாத்திய்யான தஜல்லியின் ஒளியின் அதிகாரத்தில்** பற்ஸகு மறைவது கொண்டு **இரண்டு வில்லுகளும் ஒன்றாக ஆகிறதளவில் சைக்கினையாகும்**.

இது ஹகீகத்துல் இன்ஸானிய்யாவை சூழ்ந்து கொண்டிருப்பதற்கு இடைஞ்சலாகாது. ஏன்? அதில் புகுந்து கொண்டிருக்கிற நபிமார்களுக்கும் மி:றாஜில் இந்த தீர்மானத்திற்கு ஒப்பானதுண்டு. ஏன்? இந்த பெரிய பற்ஸகாகிறது, இது நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய மி:றாஜின் தீர்மானமாக இருப்பதில் அஹதிய்யத்தின் ஸூறத்தாகிய **ளாஹிருல் உஜூதுடைய வில்லுக்கும் காபாகிய – நாணாகிய** இரண்டாவது தஜல்லியில் உள்ள **சிறிய பற்ஸகாகிறது இது உம்மஹாத்துஸ்ஸிபாத்துகளில் ஸிபாத்துகளின் தாய்களில் ஒன்றின் மிகைப்பின் ஹுக்மைக் கொண்டாகும். அதுதான் அதன் மிகைப்பின் கடுமையாகிறது அவர்களின் சில்லறையான அசலிய்யான சட்ட திட்டங்களின் நூல்களிலும், அவர்களின் நிலைமைகளான அனுபோகத்திலும் அவர்களின் காட்சி துறைகளிலும் வெளியானதாக இருக்கும்.**

**இந்த தாயிறாவிலும் - வட்டத்திலும், அதன் இரகசியங்களிலும், பேச்சு ஒரு எல்லையில் போய் முவடையாததாக ஆனபோது நாம் கூறி வந்ததின் பேரில் சுருக்கிக் கொள்வதை தேர்ந்தெடுத்துக் கொண்டோம். ஏன்? நேரம் அபூவர்மானதாகும். முக்கிய வேலை அதாவது:- ஆகிறத்ததுடைய வேலை நம் முன்னால் இருக்கிறது**.

தாயிறாவில் - வட்டத்தில் தரிபடுத்தப்பட்டு அதை அவர்கள் விபரிக்காமல் விட்டதை நாம் விபரித்து சொல்கிறோம்;.

வட்டமாகிறது இரண்டு வில்லுகளின் பேரில் பங்காகும். இரண்டில் ஒன்று:- 1. ளாஹிருல் உஜூதுடைய – உஜூதுடைய வெளிபாகத்துடைய வில்லாகும். ஏன்? உஜூது இதற்கு முந்தியதில் அல்லாமல், இதில் அஸ்மா சிபத்துகள் விபரமாகிறது கொண்டு இதில் வெளியாகி இருப்பதற்காக, இது உஜூபுடைய - இருப்பு அவசியத்துடைய சமூகமாகும். ஏன்?

இதற்கு முந்தியதாகிறது, அதில் லட்சணமே வெளியாகாமலான போது அதில் உஜூபு என்ற லட்சணமும் வெளியாகவில்லை. ஆகவே உஜூபு தாத்தி – தனக்காகவே இருப்பது அவசியம் எனும் லட்சணம் வெளியானதெல்லாம் இதில்தான்.

அது போலவே தாத்துக்காகவே, அஸ்மா ஸிபாத்துகளுடைய உஜூபும் தனக்காகவே அஸ்மா, ஸிபாத்துகள் இருப்பது அவசியம் எனும் லட்சணமும் (இதில்தான் வெளியானது.)

அது போலவே அது அவசியமாக்கி வைத்ததினால் அது அல்லாத்ததுடைய உஜூபும் (இதில் வெளியானது)

அது பஹ்ருல் ஜூதி – கொடையின் சமுத்திரம் ஆகும். ஏன்? அல்லாஹ்வின் கொடையாவது அவன் உடைய அஸ்மா, ஸிபாத்துகளின் வழியைக் கொண்டேயாகும். அதுதான் உஜூதுல் இலாபி – ஒன்றோடு சேர்த்துப் பார்த்து உண்டானதுவாகும். ஏன்? அது நிதர்சனமாக உண்டாகிற விதத்தில் அதற்கு சிருஷ்டிகளளவில் உள்ள சம்பந்தம் இதைக் கொண்டேதான் இருக்கிறது.

இதுதான் றப்ஸூற் றஹ்மானி – றஹ்மானின் சுவாசமாகும். ஏன்? இதில் அவன் தனது அஸ்மாக்களைக் கொண்டும், இன்னும் மும்கினாத்தின் அஃயான்களைக் கொண்டும் - சிருஷ்டிகளின் அகமியங்களைக் கொண்டு அவை பிரிவினையாக இருப்பதைக் கொண்டு சுவாசம் விட்டான்.

எனினும் அதை மும்கினாத்தின் அஃயான்களை ளாஹிருல் இல்மின் - அறிவின் வெளியான வில்லில் தரிபடுத்தப்பட்டிருக்கிறது. ஏன்? அசலில் சுவாசம் விட்டது அஸ்மாக்கள் பிரிவினையாவதற்காகத்தான்.

மும்கினாத்துடைய அஃயானைக் கொண்டு சுவாசம் விட்டது அதைத் தொடர்ந்தேயாகும். எனினும் முன் சொன்னுது போல் உடந்தையாகவேதான்.

அது வானங்களிலும், பூமியிலும் வெளியான ஆலமுல் கிப்ரியாவாகும் - வலுப்பத்திற்குரிய உலகமாகும். ஏன்? அது வெளியாவதைக் கொண்டு அவை – சிருஷ்டிகள் உண்டானது. அவை இல்லாமையில் இருந்து தழுமைப்பட்ட பின் உண்டாகி, வலுப்பமானது.

அதற்கு ஆலமுல் இஸ்ஸதி வ் அளமதி – சிறப்பு வலுப்பத்தை உடைய உலகம் என்றும் சொல்லப்படும். ஏன்? அது வானங்களிலும், பூமியிலும் அவை இரண்டிற்கும் இடையிலுள்ளவற்றிலும் விடுதி விடுவதை விட்டும் அவைகளில் ஒள்றுடனேயாகிலும் சேர்ந்து ஒன்றாக ஆவதை விட்டும் பரிசுத்தமாக இருப்பதற்காக.

இன்னும் ஆலமுல் ஹைபத்து – பயங்கரத்துடைய உலகம் என்றும் சொல்லப்படும். ஏன்? சகலமும் அதற்கு பயப்படும். அதன் நாட்டத்திற்கு மாறு செய்யாது.

இன்னும் ஆலமுல் குத்ரத்து – தத்துவத்துடைய உலகம் என்றும் சொல்லப்படும். ஏன்? அது அஸ்மாக்களைக் கொண்டு வெளியாகிறதற்காக.

இன்னும் ஆலமுல் ஜபரூத்து – பொருத்தக் கூடிய உலகம் என்றும் சொல்லப்படும். ஏன்? அது அஃயான தாபிதா இல்லாமையைக் கொண்டு ஒடிந்து கிடந்ததின் பின்னால் அதற்கு உள்ளமையைக் கொடுத்து அதைப் பொருந்திய இலாஹிய்யத்தான அஸ்மா, ஸிபாத்துகளுடைய உலகமாகும்.

ஆகவே இந்த வில்லில் சுபுஹஹானதில் இஸ்ஸதி வல் அளமதி வ் ஹைபதி வல் குத்ரத்தி வல் கிப்ரியாஇ வல் ஜபரூத்தி – சிறப்பையும், வலுப்பத்தையும், பயங்கரத்தையும், தத்துவத்தையும் மகிமையையும் பொருத்துதலையும் உடைய நாயன் பரிசுத்தமானவன் என்றது உண்மையானது.

இந்த வில்லைக் கொண்டு ஸூறா பாத்திஹாவுடைய துவக்கம், பிஸ்மில்லாஹியிலிருந்து மாலிகி யவ்மித்தீன் வரையிலும், கொழுகும். அதுதான் தொழுகையை எனக்கும், என் அடியானுக்கும் இடையில் பங்கு வைத்தேன் என்ற ஹதீதில் அல்லாஹ்வைக் கொண்டு சொந்தமானதாக இருக்கும்.

2. அவை இரண்டில் இரண்டாவதாகிறது, ளாஹிருல் இல்மு – அறிவின் வெளிப்பாகமெனும் வில்லாகும். இதற்கு ஹளரத்துல் மஃலூமாத்து – அறியப்பட்டவைகளின் சமூகம் என்று சொல்லப்படும். ஏன்? அவை அடங்கலும் இதில் வெளியாகியிருப்பதற்காக. ஏன்? இலாஹிய்யத்தான அஸ்மாக்கள் அவைகளை அறிந்தது பூரணமானதெல்லாம் அதனுடைய ஸூறத்துகளும், ஆதாறு – குணங்களும் இங்கு வெளியானது கொண்டேயாகும்.

இன்னும் ஆலமுல் மஆனி – கருத்துக்களின் உலகம் என்றும் சொல்லப்படும். ஏன்? இதில் ஹகாயிகுகளைத் துயர்ந்து அதுவும் - கருத்தும் வெளியாகி இருப்பதற்காக. இதைக் கொண்டு தான் இலாஹிய்யத்தான அஸ்மாக்களின் கருத்துக்கள் நிரப்பமான வெளிப்பாடாக வெளியாகியது.

இன்னும் பஹ்றுல் இம்கான் - இம்கானுடைய சமுத்திரம் என்றும் சொல்லப்படும். ஏன்? இது அசலிலேயே சிருஷ்டிகளுடைய அகமியங்களைக் கொண்டு கொழுகியிருப்பதற்காக.

இன்னும் அற்ளுல் இஸ்திஃதாது – அருகதைகளின் பூமி என்றும் சொல்லப்படும். ஏன்? கடுதாசிகளிலும் பலகைகளிலும் பதிந்தவைகள் விபரமாக ஆவது போல், அஃயான்களும், அதன் இஸ்திஃதாத்து அமைப்புகளும் இதில் விபரமானதற்காக.

இன்னும் மற்பதுல் அன்வார் - ஒளிகள் இறங்குமிடம் என்றும் சொல்லப்படும். ஏன்? இலாஹிய்யத்தான அஸ்மாக்களாகிறது, அஃயான தாபிதாவின் அமைப்புகளின் தேட்டப் பிரகாரம் அவைகளின் ஸூறத்துகளும், குணபாடுகளும் இதில் இறங்குகின்றன.

இன்னும் தவாதுல் இலாஹிய்h - இலாஹிய்யான மைக்கூடு என்றும் சொல்லப்படும்.ஏன்? உயர்த்தியான கலமாகிறது, - பேனாவாகிறது சிருஷ்டிகளின் அஃயான்களின் பேரில் களா கத்றை எழுதுவதெல்லாம் அவைகளின் இஸ்திஃதாத்தை – அருகதையைக் கவனிப்பது கொண்டேயாகும். இஸ்திஃதாத்து தரிபடுவது இந்த ஹள்ரத்திலேயேயாகும்.

ஆகையினால் இஸ்திஃதாத்து அதற்கு மையைப் போலும், இந்த ஹளரத்தாகிறது மைக் கூட்டைப் போலுமாகிறது.

இன்னும் 'நூன்' என்றும் சொல்லப்படும்.ஏன்? இம்கானுடைய உலகத்தளவிலும், அஃயானு தாபிதா அளவிலும் சைக்கினையாகும்.

இன்னும் மப்தவுத் தக்வீன், மஹ்பன் நூர் - படைப்பின் ஆரம்ப இடம், ஒளியிறங்குமிடம் என்றும் இன்னும் அல்லாஹ்தஆலா அவனுடைய வேதத்தில் நூன் வல் கலமியோடு சேர்த்ததைக் கொண்டு ஏவினதற்கும், கவனத்திற்கும் இடமென்றும் சொல்லப்படும்.

இந்த வில்லைக் கொண்டு ஸுப்ஹான தில் முல்கி வல் மலகூத்தி – காட்சி உலகையும், மறைவான உலகையும் உடைய நாயன் பரிசுத்தமானவன் என்பது கொழுகும். ஏன்? இது காட்சி உலகத்தின் பேரிலும், மறைவான உலகத்தின் பேரிலும் பொதிந்திருக்கிறதற்காக.

இதைக் கொண்டு ஸூறத்துல் பாத்திஹாவில் நின்றும், இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீமிலிருந்து கடைசி வரையிலும் கொழுகும். ஏன்? இது அடியானைக் கொண்டு சொந்தமாக இருப்பதற்காக.

3. இன்னும் இரண்டு வில்லுக்குமிடையில் பிரிக்கும்படியான ஒரு கோடு இருக்கிறது. அதற்கு ஹகீகத்தல் இன்ஸானிய்யா என்று சொல்லப்படும். ஏன்? அது இன்ஸானுடைய ஹகீகத்தாகவும், அவன் உடைய ரூஹின் உற்பத்தியிடமாகவுமாகிய இரண்டாவது தஜல்லியை சுமந்திருப்பதற்காக.

இன்னும் இதற்கு பற்ஸகுத் தானி - இரண்டாவது பற்ஸகு என்றும் சொல்லப்படும். ஏன்? அது அஹதிய்யத்திற்கும், வாஹிதிய்யத்திற்கும் இடையில் உள்ள முந்திய பற்ஸகுக்கு குட்டியாக இருப்பதற்காக.

இதற்காகவே தான் அல்லாஹுத்தஆலா 'மறஜல் பஹ்ரைனி யல்தகியானி பைனஹுமா பற்ஸகுன் லாயப்கியான் - அவன் இரண்டு சமுத்திரங்களையும் ஒன்றோடொன்று சேர்வதற்காக சேர்த்தான். அவை இரண்டிற்குமிடையில் ஒரு திரை இருக்கிறது. இரண்டும் அதை கடக்காது' என்று சொன்னான்.

இதற்காகவே இதற்கு முல்தகல் ஆலமையனி - இரண்டு உலகமும் சேருமிடம் என்று சொல்லப்படும்.

இன்னும் ஹளரத்துல் அமா – லேசான மேகத்தின் சமூகம் என்று சொல்லப்படும். ஏன்? அது அல்லாஹ் உடைய தாத்துக்கும், சிருஷ்டிகளுக்கும் இடையில் மறைக்கும்படியான லேசான மேகத்தைப் போல் இருக்கிறது.

இதைக் கொண்டு ஸூரத்துல் பாத்திஹாவில் நின்றும் அல்லாஹ்வுக்கும், அடியானுக்கும் இடையில் கூட்டான 'இய்யாக நஃபுது வ இய்யாக நஸ்தஈன்' – உன்னையே வணங்குகிறோம், உன்னிடத்திலேயே உதவி தேடுகிறோம் என்றது கொழுகுகிறது.

இந்தக் கோடானது சகல ஸிபாத்துகளுக்கும் தாய்களாகிய ஏழு இலாஹிய்யத்தான ஜிபாத்துகளையும் - தெய்வீக லட்சணங்களையும் சுமந்து கொண்டு இருக்கிறது. ஏன்? அவைகள்தான் அவைகளுக்கு உயர்த்தியான இனங்களாகும்.

அவைகள்:- ஹயாத்து, இல்மு, இறாதத்து, குத்ரத்து, ஸம்வு, பஸறு, கலாம் - ஜீவுன், அறிவு, நாட்டம், சக்தி, கேள்வி, பார்வை, பேச்சு முதலியவைகளாகும்.

இன்னும்' ஓடும்படியான கிரகங்களுடைய வானங்களைக் கொண்டு நுஜூமிகளிடத்தில் அதனளவில் சேர்க்கப்பட்ட நாட்களை கொழுகி வைக்கப்பட்டது.

சனிக்கிழமையை ஸுஹ்ல் - அளவிலும்,

வியாழக் கிழமையை முஷ்தரீ – அளவிலும்,

செவ்வாய்க் கிழமையை மர்ரீக் - அளவிலும்,

ஞாயிற்றுக் கிழமையை ஷம்ஸ் - அளவிலும்,

வெள்ளிக் கிழமையை ஜுஹ்றா – அளவிலும்,

புதன் கிழமையை அதாரித் - அளவிலும்,

திங்கட் கிழமையை கமற் - அளவிலும்

கொழுகப்பட்டது. ஏன்? அந்த ஒவ்வொரு நாட்களில் நின்றும் முதலாம் ஸாஅத்தாகிறது, அந்த ஓடும் கிரகத்தளவில் சேர்வதைக் கொண்டு சொந்தமாக்கப்பட்டதாகும்.

அந்த வானங்களளவிலேயே மிஃராஜுடைய ஹதீதில் அவைகளளவில் சேர்க்கப்பட்ட நபிமார்களையும் சேர்க்கப்பட்டது.

நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை ஸூஹ்ல் உடைய வானத்தளவிலும், நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை முஷ்தரீ உடைய வானத்தளவிலும், நபி ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்களை மிற்றீக் உடைய வானத்தளவிலும், நபி இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்களை ஷம்ஸ் உடைய வானத்தளவிலும், நபி யூஸுப் அலைஹிஸ்ஸலாம் அவர்களை ஜூஹ்றா உடைய வானத்தளவிலும், நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களையும், நபி யஹ்யா அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் அதாரித் உடைய வானத்தளவிலும், நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை கமர் உடைய வானத்தளவிலும் சேர்க்கப்பட்டனர்.

சந்திரனுடைய மன்ஜில்களை – தங்குமிடங்களை சிருஷ்டியான அஸ்மாக்களைக் கொண்டு அது உண்டாயிருக்கிற வரிசைக்கிரமப்படி கொழுகி வைக்கப்பட்டன.

மொழியப்பட்ட அட்சரங்களை, தொண்டை, நாவு உதடுகளாகிய அதன் புறப்படும் ஸ்தலங்களின் வரிசைக் கிரமப்படி கொழுகி வைக்கப்பட்டன. ஏன்? இந்த சிருஷ்டிகள், மனிதனுடைய சுவாசத்திலிருந்து இந்த மொழியப்பட்ட அட்சரங்கள் உண்டாவதைப் போல் நபஸூற் றஹ்மானி – றஹ்மானின் சுவாசத்திலிருந்து உண்டாயிற்று.

இன்னும் அர்ஷ{க்கு மேலே அது சுவர்க்கத்தின் முகடு என்றும், குர்ஸிக்கு மேல் அது சுவர்க்கத்தின் பூமி என்றும் எழுதப்பட்டிருக்கிறது. ஏன்? அப்படி ஹதீதில் வந்திருப்பதற்காக.

இன்னும் பலகுல் மனாஸிலில் - நட்சத்திரங்களின் வானத்தில் அது நரகத்தின் முகடு என்று எழுதப்பட்டிருக்கிறது.

இஸ்லாமிய சயின்ஸ்காரர், பலகுல் மனாஸில் என்பது குர்ஸிதான் என்று சொன்னதை அனுசரித்து அது பலகுல் மனாஸில் சுவர்க்கத்தின் பூமி என்று சொன்னவர் பிசகி விட்டார்.

(பலகுல் மனாஸில் என்பது முஹ்யித்தீன் இப்னு அரபி அவர்கள் சொல்வது போல் குர்ஸி அல்லாத வேறொன்றாகும். அது தான் சுவர்க்கத்தின் பூமி)

இதுதான் வட்டத்துக்கு உள்ளே எழுதப்பட்டதாகும். அதற்கு வெளியில் அதன்பெயர்களில் நின்றும் அது உலூஹிய்யத்துடைய சமூகத்தில் நின்றுமுள்ளது என்று எழுதப்பட்டிருக்கிறது. ஏன்? அது அதில் தான் குறிப்பானது. அது வில்லைக் கொண்டோ, பற்ஸகை – நடுமத்தியைக் கொண்டோ சொந்தமானதில்லை.

ஆகையினால், அது வட்டத்திற்கு பொதுவானது என்று அறிவிப்பதற்காக அதை வட்டத்திற்கு வெளியில் எழுதப்பட்டது. ஏன்? அதைக் கொண்டு தான் இலாஹிய்யத்தான அஸ்மாக்கள், கௌனிய்யான அஸ்மாக்களளவில் சேர்க்கப்பட்டிருக்கிறது – சம்பந்தமாக்கப்பட்டிருக்கிறது. அதை பற்ஸகை – நடுமத்தியைக் கொண்டு சொந்தமாக்கப்பட்டிருந்தால் அது ஹகீகத்துல் இன்ஸானிய்யாவைக் கொண்டு சொந்தமானது என்று சந்தேகிக்கப்படும்.

இன்னும் ஹளரத்துல் அஸ்மாயி வஸ் ஸிபாத்தி – அஸ்மா ஸிபாத்துகளின் சமூகம் என்று எழுதப்பட்டது. ஏன்? இரண்டாவது குறிப்பை ஆக்கப்பட்டதெல்லாம் அது முதலாவதாக அவனுடைய தாத்திலும் இரண்டாவதாக அவன் மள்ஹர்களிலும் வெளியானதைக் கவனித்துதான். இந்தக் கவனத்தைக் கொண்டு அது வட்டத்தைச் சூழந்து கொண்டது. அது அவனுடைய தாத்தில் வெளியானதைக் கவனித்து அதை ளாஹிருல் உஜூதுடைய வில்லைக் கொண்டு சொந்தமாக்கப்பட்டது.

இன்னும் அதற்கு முன்தஹல் ஆபிதீன் - ஆபிதீன்களின் தீர்மானம் என்றும் சொல்லப்படும். ஏன்? அவர்கள் ஹகீகத்துல் இன்ஸானிய்யாவின் குறிப்பின் தானத்தை கடக்க மாட்டார்கள். அவர்கள் இரண்டு வில்லுகளைக் கொண்டும் சூழ்ந்திருக்கிறார்கள் என்பதின் பேரில் அறிவிக்கிறதற்காக வேண்டி அதை அதற்கு வெளியில் ஆக்கப்பட்டது.

இன்னும், மன்ஷவுஸ் ஸிவா – வேறென்பதற்கு உற்பத்தியிடம் என்றும் சொல்லப்படும். ஏன்? இலாஹிய்யான அஸ்மாக்கள் தான் அதற்கு ஆரம்ப இடமாக இருந்தன.

அதுவாகிறது, அது ளாஹிருல் இல்முடைய வில்லைக்கொண்டு சொந்தமாக இருப்பதுடன், அது ளாஹிருல் உஜூதுடைய வில்லில் இருக்க வேண்டுமென்று தேடுகிறது.

ஆகையால் அது சொந்தமாக்கப்பட்டதான காரணத்தை விளக்கி வைத்த பின் அது பொதுவாக இருக்கிறதற்கான காரணத்தின் பேரில் அறிவிக்கிறதற்காக வேண்டி அதை அதன் வெளியில் தரிபடுத்தப்பட்டது.

இன்னும் அஹதிய்யத்துல் கத்றத்து – பன்மை ஒன்றானது என்றும் சொல்லப்படும். ஏன்? அஸ்மாக்களின் பன்மை அதில் தாத்தைக் கொண்டு ஒன்றாகிறதற்காகவும், அதைக் கொண்டு சிருஷ்டிகளெல்லாம் ஒன்றாவதற்காகவுமே. இந்த கவனத்தைக்கொண்டு அது வட்டத்தை சூழ்ந்ததாகும்.

இன்னும் உஜூதுல் இளாபி – சேர்த்துப் பார்ப்பதினாலான உஜூது என்றும் சொல்லப்படும். ஏன்? உஜூதை சிருஷ்டிகளளவில் சேர்ப்பது இந்த சமூகத்தில் நின்றுமேயாகும்.

சேர்த்துப் பார்ப்பது இரு தரப்பையும் தேடும். ஆகையினால் அதை அதன் வெளியில் வைக்கப்பட்டது ஏன்? அது பொது என்பதின் பேரில் அறிவிக்கிறதற்காக.

இன்னும் பலகுல் ஹயாத்து – ஜீவ வானம் என்றும் சொல்லப்படும். ஏன்? இந்த சமூகத்தில் நின்றுமே சிருஷ்டிகளில் நின்றும் உயிருள்ளவைகளளவிலும், மேலும் அவை எல்லாவற்றின் அளவிலும் ஜீவன் ஒலிக்கிறதற்காக.

இன்னும் நபஸு ரஹ்மானி – ரஹ்மானின் சுவாசம் என்றும் சொல்லப்படும். ஏன்? இரண்டாவது குறிப்பாகிறது, முந்திய குறிப்பில் நின்றும் முன சொல்லப்பட்டது போல் சுவாசத்தின் முறைப்படியே உண்டானது.

இன்னும் ஆலமுல் ஜபரூத் - பொருத்தக் கூடிய உலகம் என்றும் சொல்லப்படும். ஏன்? அ:யா தாபிதா, இந்த சமூகத்தில் நின்றுதான் உஜூதைக் கொண்டு பொருந்துண்டது.

இன்னும் இந்த சமூகத்திற்கு தஅய்யுனு தானி, தஜல்லிய தானி - இரண்டாவது குறிப்பு, இரண்டாவது தோற்றம் என்றும் ஹகீகத்துல் இன்ஸானிய்யா - இன்ஸானுடைய அகமியமென்றும் சொல்லப்படும்.

இன்னும் இந்த பெயர்களில் சில ளாஹிருல் உஜூதுடைய வில்லைக் கொண்டும் ளாஹிருல் இல்மு உடைய வில்லைக் கொண்டும் சொந்தமானதாக இருந்த போதும், அது பூரா வட்டத்தை சூழ்ந்து இருக்கிறதை நாடும்படியான வேறு காரணங்களும் இருக்கின்றன. இதனாலேயே அதை இரண்டு இடத்திலும் தரிபடுத்தப்பட்டிருக்கிறது.

பின்னர், இந்தப் பெயர்களுக்கு மேலாலே ஒரு வட்டத்தை உண்டாக்கப்பட்டிருக்கிறது ஏன்? முந்திய வட்டமாகிறது, இந்த வட்டத்தைக் கொண்டு முந்திய குறிப்பையும் சூழ்ந்து கொண்டிருப்பதை அறியப்படுவதற்காக. அதனுடைய பெயர்களை அதற்கு வெளியில் எழுதப்பட்டிருக்கிறது. ஏன் அது இதில் நின்றும் ஒரு வில்லைக் கொண்டும் சொந்தமானதல்ல என்று அறியப்படுவதற்காக.

அவைகளாகிறது, தஅய்யுனுல் அவ்வல், தஜல்லியுல் அவ்வல், ஹகீகத்துல் முஹம்மதிய்யா, வஹ்தத்துல் ஹகீகிய்யாவாகும். இவைகளுக்கு எல்லாம்முன் சென்றன போல் காரணங்கள் அறியப்பட்டது தான்.

இன்னும் அதனுடைய பெயர்களில் உள்ளது, அல் இல்முல் முத்லக் - பொதுப்படையான அறிவு என்பது, இது அஸ்மா, ஸிபாததுகளையும் சிருஷ்டிகளின் அ:யான்களையும் கவனிக்காமல் தாத்தை அறிவதாகும்.

இது இந்த வட்டத்திற்கு மேலால் வட்டத்தின் பெயர்களில் கூறப்பட்ட பொதுப்படை அல்லாததாகும் ஏன்? அதுவாகிறது, கட்டுப்பாட்டை விட்டும், இன்னும் கட்டுப்பாட்டை விட்டும் பொதுவாக இருப்பதை விட்டும் பொதுவாக இருப்பதுவாகும்.

இதுவாகிறது இதெல்லாம் அஸ்மா ஸிபாத்துகளைக் கொண்டு கட்டுப்படுவதை விட்டும் பொதுவாக இருப்பதுவாயேயாகும்.

இன்னும் அதனுடைய பெயர்களில் நின்றுமுள்ளதாகும். அல் காபிலிய்யத்துல் ஊலா – முந்திய ஏந்துக் கொள்ளும் அருகதை என்பது ஏன்? அது முந்தின குறிப்புகளை ஏந்து கொண்டிருப்பதற்காக.

இன்னும் அதில் நின்றுமுள்ளதுதான், அஹதிய்யதுல் ஜம்வு – எல்லாம் ஒன்றாக இருப்பது என்பதுவும் ஏன்? அதில் அஸ்மாக்களெல்லாம் ஐக்கியமாக இருப்பதற்காக. ஏன்? அவை விபரமாக இல்லாததினால் ஏன்? அவை பிரிவாக இல்லையே.

இன்னும் அதற்கு பற்ஸகிய்யதுல் குப்றா – பெரிய பற்ஸகாக – மத்தித் தடுப்பாக இருக்கும் என்பதாகிறது:- அதற்கு அதன் பாகத்திற்குள்ள பெயரை வைத்து சொல்வதாகும்.

இன்னும் மகாமு அவ் அத்னா – முடுகுதலுடைய ஸ்தானம் என்பதும் அதனுடைய பெயர்களில் நின்றுமுள்ளதுவாகும். இது இந்த பற்ஸகு எடுபட்டவிடத்திலாகும்.

இன்னும் அதனுடைய பெயர்களில் உள்ளதுவாகும், ஹிஜாபுல் அளமதி – வலுப்பத்தின் திரை என்பதுவும், ஏன்? அதனளவில் நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தவிர வேறு யாரும் போக மாட்டார்கள்.

இன்னும் அதில் நின்றுமுள்ளது, மற்தபத்துல் விலாயத்துல் முத்லகா – பொதுவான விலாயத்துடைய பதவி என்பதுவும், அது நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய விலாயத்தும் அவர்களைப் பின் தொடர்ந்ததினால் காத்திமுல் அவ்லியா – அவ்லியாக்களுக்கு முத்திராங்கமானவருடைய விலாயத்துமாகும்.

பின்னர் இந்த வட்டத்திற்கு மேலால் வேறொரு வட்டத்தையும் எழுதப்பட்டிரு:க்கிறது. அதனுடைய பெயர்களையும், அதற்கு வெளியில் எழுதப்பட்டிருக்கிறது. அதுதான் லா தஅய்யுனு, ஙைபுல் ஹுவிய்யத்து, அய்னுல் காபூறு –குறிப்பில்லாத்தது, ஹுவிய்யத்தின் மறைவு, கற்பு_ரம் தான் என்பதாகும். ஏன்? அதன் முடிவாகிறது, அதை நுகர்வதேதான். அதைக் கொண்டு திடப்படக் கூடிய விதத்தில் அதை அனுபவிப்பதில்லை.

இன்னும் அஸதுல் ஆஸால், முன்கதீவுல் வஹ்தானி – ஆதிக்கு ஆதி ஒருமை தரிகொள்ளும் இடமும் ஆகும். ஏன்? முதல் குறிப்பிலுள்ள ஒருமை அவ்விடத்தில் தறிகொண்டு போகும்.

இன்னும் ஙைபுல் ஙு{யூபு – மறைவுக்கும் மறைவுமாகும். ஏன்? அது முதல் குறிப்பின் மறைவுக்கும் மேலேயிருக்கிறது.

இன்னும் தாத்துஸ் ஸாதிஜ் - சுத்தமான தாத்து அதாவது:- அறிவு மற்ற லட்சணங்களை விட்டும் சுத்தமானதுவாகும். முந்திய குறிப்புக்கு மாற்றமாக. அதில் அறிவை கவனிக்கப்படுகிறது. ஆனாலும் அது தாத்தை விட்டும் வேறாக பிரிந்திருப்பதை கவனிக்கப் கவனிக்கப்படாது போனாலும் சரி.

மேலும் அத்தோடு இல்மு, நூர் உஜூது ஷுஹூது – அறிவு, ஒளி, உள்ளமை, காட்சி ஆகிய இந்நான்கு கருமங்களையும் கவனிக்கப்படுகிறது.

இன்னும் அதனுடைய பெயர்களிலுள்ளது, உஜூதுல் பஹ்து – கலப்பற்ற உஜூது என்பதும், அதாவது:- உஜூது மட்டும் என்பதும்.

இன்னும் அதற்கு மஜ்ஹூலுன்னஃது – லட்சணம் அறியப்படாதது என்றும் சொல்லப்படும். ஏன்? அதில் இலட்சணத்தையும், பெயரையும் கவனிக்கப்படாது.

இன்னும் முன்கதிஉல் இஷாறாத்து – சயிக்கினைகளெல்லாம் தறி கொண்டது என்றும் சொல்லப்படும். ஏன்? சயிக்கினை குறிப்பபைத் தேடும் (ஆனால்) அதில் குறிப்பு இல்லை.

இன்னும் ஙைபுல் மஸ்கூது அன்ஹு - அதைத் தொட்டும் வாய் பொத்தப்பட்ட மறைவு என்றும் சொல்லப்படும். ஏன் அதில் ஒரு பெயரைக் கொண்டும் ஒரு லட்சணத்தைக் கொண்டும் பேசப்படாது.

சகல புகழும் ஆலத்தார்களின் போஷகனுக்காக இருக்கும். சலவாத்தும் ஸலாமும் இறைத் தூதர்களின் தலைவர் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பேரிலும், அவர்கள் கிளையார்கள் பேரிலும் துணைவர்கள் பேரிலும் உண்டாவதாக.

*முற்றும்.*

www.sufimanzil.org